21 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 21 | பாலம் 05 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 01, 2011

# லிபியாவிற்கு எதிராக ஐக்கியநாடுகள் சபை தடை

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை லிபிய அதிபர் மோமர் கடாபிக்கும், அவரது ஐந்து வளர்ந்த பிள்ளைகளுக்கும் அவரது உயர் அதிகாரிகளுக்கும் எதிராக ஏகமனதாக பல தடைகளை விதித்துள்ளது.

பெப்ரவரி 27, 2011 இல் கூடிய பாதுகாப்பு சபை லிபியாவிற்கு எதிராக ஆயுத விற்பனைத்தடை, கடாபியும் அவரது நான்கு மகன்களுடையதும், ஒருமகளுடையதும் சொத்துக்களை பாவிப்பதற்கு தடை மற்றும் கடாபியின் முழுக்குடும்பமும் அவரது பத்து உயர்அதிகாரிகளும் பிரயாணம் செய்யத்தடை என்பவற்றை விதித்துள்ளது.



15 பாதுகாப்புச்சபை நாடுகளின் உறுப்பினர்களும் மூடிய கதவிற்கு பின்னால் லிபிய அரசாங்கம் செய்கின்ற அராஜகம் பற்றி விவாதித்தார்கள். அமைதியாக அரசிற்கு எதிராக எதிர்ப்புக்களையும் ஊர்வலங்களையும் செய்யும் மக்களை கொல்வது பற்றியும், லிபிய அரச தலைவருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடருவதும் பற்றியும், லிபிய அரசதலைவரின் மனிதவர்க்கத்திற்கு எதிரான கொலைக்குற்றம் (Crimes against humanity) பற்றி விசாரிப்பது பற்றியும் விவாதித்தார்கள்.

இறுதியில் 15 பாதுகாப்பு சபை நாடுகளின் உறுப்பினர்களும் லிபிய அரசதலைவரின் விசாரணையை நிரந்தர போர்க்கால குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றின் பொறுப்பில் (Permanent war crimes tribunal) விடுவது என முடிவு எடுத்தார்கள்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, ஜேர்மன் அதிபர் அஞ்சலா மேர்கெல் இற்கு தொலைபேசி உரையாடலில் தெரிவிக்கையில் 'ஒரு நாட்டின் அதிபர் தனது அதிகாரத்தை உபயோகித்து தனது மக்களுக்கு எதிராக வன்முறையை தூண்டுவாரானால் அந்த அரசு அந்த நாட்டை ஆளும் தார்மீக உரிமையை இழந்து விட்டது' என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் லிபிய அதிபர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்றார்.

## 2012 இல் அதிக சேவைகள் இரத்தாகும் என ரொறான்ரோ மாநகரசபை எதிர்பார்க்கிறது.

2011ஆம் ஆண்டிற்கான ரொறொன்ரோ மாநகரசபையின் $9.4 பில்லியன் டொலர் வரவுசெலவுத்திட்டம் கடந்த பெப்ரவரி 24, 2011 இல் நிறைவேறியது.

இவ்வரவு செலவுதிட்டத்தில் சொத்துவரி (Property Tax) அதிகரிக்கப்படவில்லை. இது கடந்த 11 வருடங்களில் நடைபெறாத ஒரு செயல். இந்த வரவு செலவு திட்டத்தை துண்டுவிழாமல் சமநிலைப்படுத்த சில சேவைகளை மாநகரசபை நிறுத்தியுள்ளது. ஆனால் 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் கிட்டத்தட்ட $774 மில்லியன் டொலர் துண்டுவிழும் என எதிர்பார்க்கப்படுவதாக மாநகரசபை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். இதனால் மாநகரசபை பல சேவைகளை அடுத்த வருடம் நிறுத்த வேண்டிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரிட்டிஸ் கொலம்பியாவின் ஆளும் லிபரல் கட்சி புதிய தலைவரை தெரிவு செய்துள்ளது.

பெப்ரவரி 26, 2011 இல் நடைபெற்ற தேர்தலில் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தின் லிபரல் கட்சி தமது புதிய தலைவராக Christy Clark ஐ தெரிவு செய்துள்ளார்கள். இவர் முன்னாள் உதவிப் பிரதமரும் வானொலியில் நிகழ்ச்சிகள் நடத்துபவரும் ஆவர். கிட்டத்தட்ட 92 ஆயிரம் வாக்காளர்களை கொண்ட லிபரல் கட்சியின் 57 ஆயிரம் வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களித்தனர்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

GSF Golden Store Fixtures
Friend for your Business
905-565-6555
1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessory
» Racks
» Shopping Cart & Baskets
» Showcases
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More..........
355 Admiral Blvd, Unit #5
Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com
sales@goldenstorefixtures.com



RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# லிபியாவிற்கு... கடாபி கப்பல் கவிழ்கிறது

எகிப்தின் முபராக் இறங்கிய பின் புதிய இராணுவ அமைச்சு நாட்டை ஆள்கின்றது. முபராக்கின் வழியிலேயே இவர்களும் பயணிக்கின்றார்கள். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது மக்களுக்கான பேச்சு, எழுத்து சுதந்திரங்களை வழங்குவதற்கோ, ஜனநாயகரீதியிலான தேர்தல்களை நடத்துவதற்கோ விருப்பமெதுவுமின்றி செயல்படுகின்றார்கள். முபராக்கின் இறக்கத்திற்கு யார் காரணம் என ஒரு புறம் வாதிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அமெரிக்காவின் சதி என்பது சிலரது வாதம். எகிப்திய சோசலிச வாதிகள் என்பது மற்றொரு தரப்பு. பசியிலும் பட்டினியிலும் வீதிக்கு வந்து போராடிய மக்களைப் பற்றி எவருக்கும் கவலை இல்லை. ரியுனிசியாவிலும் எகிப்திலும் போராடிய மக்களுக்கான விடிவுக்கான எந்த அறிகுறிகளும் இல்லை. இந்நிலையில் ஆபிரிக்க மத்திய கிழக்கு நாடுகளில் பல சர்வாதிகாரிகளுக்கு எதிராக போராட்டங்கள் தொடர்கின்றன.

முன்னாள் நேட்டோவின் தலைமை அதிகாரி வெஸ்லி கிளார்க்கின் கருத்துப்படி பென்டகனுக்கு லிபியா, சூடான், சிரியா, லெபனான், சோமாலியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை கைப்பிடிக்க வேண்டும் என்ற திட்டமிருந்தது என்கின்றார். எனவே இந்த போராட்டங்களின் பின்னணியில் அமெரிக்கா இருக்கலாம் என நம்பத் தோன்றுகின்றது. கடந்த சில நாட்களில் பல நாடுகளில்

தொடர்ச்சி 03ஆம் பக்கம்




Christy கட்சித்தலைவராக மூன்றாவது முறை நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் மூலமே தெரிவு செய்யப்பட்டார். இவர் தனது உரையில் தனது முதலாவது வேலை பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் வேலைகளை உருவாக்குதலும் வறுமைக்கு எதிராக போராடுவதும் என்று தெரிவித்துள்ளார்.

## கொழும்பு நகரம் பத்தாம் இடம்!

உலக மக்களது வாழ்க்கை தரத்திற்கு உதவாத நகரங்களில் (Worst Liveable Cities) கொழும்பு பத்தாம் இடத்தில் இருக்கிறது. உலகில் மக்களது வாழ்க்கைத் தரத்துக்கு உதவாத நகரங்களில் முதலாவது இடத்தை Zimbabwe இலுள்ள Harare நகரமும் அதை தொடர்ந்து முறையே பங்களாதேஷ் இலுள்ள Dhaka நகரமும், பப்புவா நியூகினியிலுள்ள Port Moresby நகரமும், நைஜீரியாவிலுள்ள Lagos நகரமும், அல்ஜீரியாவிலுள்ள Algiers நகரமும் பாகிஸ்தானிலுள்ள கராச்சி நகரமும், கமரூனிலுள்ள Douala நகரமும் ஈரானிலுள்ள Tehran நகரமும் செனகல் இலுள்ள Dakar நகரமும் வருகின்றன. இவற்றைத் தொடர்ந்து பத்தாவது மக்களது வாழ்க்கைத் தரத்திற்கு உதவாத நகரமாக இலங்கையிலுள்ள கொழும்பு நகரம் வருகிறது.

The Economist Intelligence Unit எனும் பிரபல்யம் வாய்ந்த ஆய்வு நிறுவனம் The Economist சஞ்சிகை நடத்திய ஆய்வு அறிக்கையில் வெளியான தகவலே மேலே தரப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 1946 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது உலகம் முழுவதும் தனது ஆய்வாளர்களை கொண்டுள்ளது. இதன் தலைமையகம் இங்கிலாந்திலுள்ளது.

இந்நிறுவனம் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வாழ்க்கைத் தரத்தை கொண்ட நகரங்களை இனங்கண்டு வரிசைப்படுத்துவதற்கு இந்த ஆய்வை 140 நகரங்களில் செய்தது. இது வாழ்க்கை தரத்தை கணிப்பதற்கு ஐந்து முக்கிய பிரிவுகளை ஆய்விற்கு எடுத்துக் கொண்டது. அவையாவன உடல்நல சுகாதாரம் (Health Care), கலாசாரமும் சுற்றுப்புறச்சூழலும் (Culture and Environment) கல்வி (Education) ஏற்றத்தாழ்வுகள் (Stability) மற்றும் உட்கட்டுமானம் (Infrastructures) ஆகும். பின்னர் இந்த ஐந்தையும் 30 உப பிரிவுகளாக பிரித்து ஆராய்ந்தது.

இந்த ஆய்வில் ஒவ்வொரு நகரத்திற்கும் 0 இல் இருந்து 100 வரைக்கும் இடையே உள்ள ஒரு புள்ளி வழங்கப்பட்டது. 1 புள்ளி வாழ்வதற்கு உதவாத நகரம் என்பதையும் 100 புள்ளி வாழ்வதற்கு ஏற்ற மிகவும் சிறந்த (Ideal) நகரம் என்பதையும் குறிக்கும்.

மக்கள் வாழ்வதற்கு மிக சிறந்த நகரமாக கனடாவிலுள்ள வன்கூவர் நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. முதல் பத்து சிறந்த நகரங்களையும் கீழே உள்ள அட்டவணையில் பார்க்கவும்.

1. வன்கூவர் (கனடா)
2. மெல்போண் (அவுஸ்திரேலியா)
3. வியன்னா (அவுஸ்திரேலியா)
4. ரொறொன்ரோ (கனடா)
5. கல்கரி (கனடா)
6. ஹெல்சிங்கி (பின்லாந்து)
7. சிட்னி (அவுஸ்திரேலியா)
8. பேர்த் (அவுஸ்திரேலியா)
9. அடிலைபிற் (அவுஸ்திரேலியா)
10. ஒக்லண்ட் (நியூசிலாந்து)



இந்த வரிசையில் 140 ஆவது இடத்தைப்பெற்று உலகிலேயே மக்கள் வாழ்வதற்கு உதவாத நகரமாக வந்த ஸிம்பாவே நாட்டிலுள்ள Harare என்ற நகரம் பெற்ற புள்ளிகள் 37.5% ஆகும்.

இந்த ஆய்வு நிறுவனம் 2010 இல் நடத்திய உலகிலேயே விரைவில் வளர்ந்து வரும் பொருளாதார வளர்ச்சியை கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கை எட்டாவது இடத்திலிருந்து குறிப்பிடத்தக்கது.

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜே பாலன் |
| தட்டச்சு: | கலா |
| அலுவலக முகாமையாளர்: | நிலானி |
| பதிப்பு: | Can Media Publishing Inc. |

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

## வாசகர் எண்ணம்

கமலாகரனின் 'மாயன் நாகரிகம்' பற்றிய கட்டுரையை வாசித்து வியப்படைந்தேன். கட்டுரை மிகவும் ஆர்வத்துடன் வாசிக்கக்கூடிய பல சுவாரஸ்சியமான விடயங்களைத் தந்துள்ளது. இன்னும் பல வியக்கத்தக்க விடயங்களை எதிர்பார்க்கிறேன்.

நன்றி: விமலேந்திரன்

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

# கடாபி கப்பல் கவிழ்கிறது

02ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசுக்கெதிராக போராட்டங்கள் நடைபெற்றிருந்தாலும் லிபியாவின் பெயரே முன்னிலையில் உள்ளது. இதற்கான காரணம் கடாபி. 41 வருடங்களாக ஆட்சி செய்து வருகின்றார்

## லிபியா

ஆபிரிக்காவின் நான்காவது பெரிய நாடு. எகிப்துக்கும் சூடானுக்குமிடையில் மத்திய-தரைக் கடலையண்டி உள்ளது. கி.மு 8000 ஆண்டில் இருந்து லிபியாவின் சரித்திரம் ஆரம்பமாகின்றது. றோமன் லிபியா, அரேபிய முஸ்லீம்களின் ஆட்சி, ஒட்டமன் சாம்ராஜ்யம் என லிபியாவின் வரலாறு வளர்கின்றது. 1911 இல் இருந்து 1951 வரை இத்தாலியின் குடியேறிய நாடாக இருந்துள்ளது. ஆபிரிக்க இத்தாலி என லிபியாவை அழைப்பதுமுண்டு. இந்தக் காலகட்டத்தில் சுமார் ஒன்றரை லட்சம் இத்தாலியர் லிபியாவில் குடியேறியுள்ளனர். இது அப்போதைய லிபிய சனத்தொகையில் 20 வீதமாகும். லிபியாவில் அரேபியர் பெருமளவில் வாழ்கின்றனர். Berbers, Greeks, Muslim Cretans, Maltese, Armenians ஆகிய பூர்விக மக்களும் வாழ்கின்றனர்.

**- ரதன் -**

## கடாபி

1942 யூன் 09 இல் பிறந்த கடாபி, 1969 இல் தனது 27வது வயதில் லிபிய அரசன் Idris Al-Sanusi ஐ வெளியேற்றி விட்டு ஆட்சிப் பீடத்தை கைப்பற்றினார். அன்றில் இருந்து லிபிய மக்கள் தன்னை ஓர் மரியாதைக்குரிய தலைவராக மதிக்க வேண்டும் என்பதற்காக பல ஆவர்த்தனங்களை செய்தார். பேராசிரியர்கள் கடாபியைப் பற்றி புகழ்ந்து புத்தகம் எழுதினார்கள். கடாபி முஸ்லீம் மக்களின் மதத் தலைவர் இமாம் என தன்னை மக்கள் மேலும் கருத வேண்டும் என்பதற்காக லிபியாவிலும் வெளிநாடுகளிலும் சொற்பொழிவாற்றினார். பல சமயங்களில் தான் கூடாரத்துக்குள் வாழ்வது போல் காட்டிக் கொண்டார். மறுபுறம் லெபானிய மதத் தலைவர் M sá a - adr லிபியாவில் வைத்து கொலை செய்ததாக இவர் மேல் குற்றச்சாட்டுக்களும் உள்ளன. கடாபியின் மகன்கள் லிபிய அரச அமைச்சரவையில் முக்கிய உறுப்பினர்கள். கடாபியின் Mutassim Al-Qaddafi கடாபியை கொலை செய்ய முயற்சித்தார். வெளிநாடுகளில் பின்னர் வாழ்ந்த இவர் கடாபியால் மன்னிக்கப்பட்டு இன்று அரசில் ஒரு முக்கிய உறுப்பினர். மாவோவின் சிகப்பு



புத்தகம் போல் கடாபி பச்சை புத்தகத்தை ஏற்படுத்தினார். அரேபிய தேசியம் என்ற தேசியவாதத்தை வளர்த்தார். கிறிஸ்தவ அதிபரால் ஆட்சி செய்த சாட்டின் மீது போர் தொடுத்தார். இந்த றெயோட்ட போருக்கான காரணமே மதம். இவர் பல சர்வாதிகாரிகளுடன் நட்பாக இருந்தார். இடி அமீனின் அபிமானி. இவரது மகளையும் இடி அமீன் திருமணம் செய்திருந்தார். பின்னர் கடாபியின் மகள் இடி அமீனை விவாகரத்து செய்து விட்டார். அமெனெஸ்ரி கடாபியின் லிபியா மீது பல கொலை குற்றங்களை சுமத்தியுள்ளது. 1970 களில் நேரடியாகவே பாலஸ்தீனிய இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவிகள் செய்தார். மியூனிச் ஒலிம்பிக் கொலைகளுக்கு நிதி உதவிகள் வழங்கினார். பிலிப்பைன்ஸ்சில் பிரிவினைவாதத்துக்கு உதவிகள் செய்தார். சிக்காகோ நகரில் நிறக் கலவரம் வர நிதி உதவிகள் செய்தார்.

### லிபியா - வரலாற்றுக் குறிப்புகள்.

1951- சுதந்திரம்

1957 - எண்ணெய் கண்டுபிடிப்பு

1969 - கடாபி ஜனாதிபதியாகின்றார்.

1986 - அமெரிக்கா லிபியா மீது குண்டு மழை பெய்கின்றது. ஜேர்மனி நாட்டு டிஸ்கோவில் நடைபெற்ற கொலைகளை கண்டித்தே இந்தக் குண்டு மழை. இதில் கடாபியின் வளர்ப்பு மகள் இறந்து விடுகின்றார்.

1988 - பான் ஆம் 103 விமானத்துள் குண்டுவைத்து 270 பேர் கொல்லப்படுகின்றனர். இதற்கு லிபியா தான் காரணம் என உலகம் குற்றஞ்சாட்டுகின்றது.

2003 - விமான குண்டு வெடிப்பில் உயிரிழந்த அனைவருக்கும் லிபியா நட்டஈடு வழங்குகின்றது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10 மில்லியன் டொலர்கள் நட்ட ஈடாக வழங்கப்பட்டது. இதன் பின்னரும் லிபியா இக் கொலைகளுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பதை வலியுறுத்தியது. மேற்குலக நாடுகளுடன் சுமுகமாக உறவைப் பேணவே இந்த நடவடிக்கை எனத் தெரிவித்தனர்.

2004 - மேற்குலக நாடுகளுடன் தனது உறவை லிபியா புதுப்பிக்கின்றது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க ஏற்கனவே தேசியமயமாக்கப்பட்டிருந்த பல அரச கூட்டுத்தாபனங்கள் தனியார் மயமாக்கப்படுகின்றன.

2009 - அமெரிக்காவும் லிபியாவும் தூதர்களை பரிமாறிக் கொள்கின்றனர்.

லிபியாவின் பெரும் பகுதி பாலைவனங்களாக உள்ளன. இங்குள்ள பூர்விக கிராமங்களில் உள்ள பலருக்கு பதவிகள் வழங்கியுள்ளார். தனது படைகளுக்கு எதிராக எந்தவித கிளர்ச்சியும் ஏற்படமால் இருக்கவே இந்த நடவடிக்கை. லிபியாவின் பொருளாதாரமே எண்ணெய் ஏற்றுமதி வருமானத்திலேயே தங்கியுள்ளது. 41 வருடங்களாக சிறப்பாக காய்களை நகர்த்தி வந்த கடாபியின் கால்களுக்கு கட்டுப்போடும் நிலைமைக்கு வந்து விட்டது. இதற்கான காரணங்கள் கடாபியால் ஏற்படுத்தப்படாவிட்டாலும் புறச் சூழலுக்கு ஏற்ப தனது நாட்டை கடாபி கட்டியெழுப்ப தவறிவிட்டார். லிபியாவின் வேலையற்றோர் வீதம் 30. இது மிக மோசமான நிலை. உலகின் அதி கூடிய ஊழல் நாடுகளுள் லிபியா முன்னணியில் உள்ளது.

2004க்குப் பின்னர் மிகவும் புத்திசாலித்தனமாக காய்களை நகர்த்திய கடாபி தன் மீது நடவடிக்கை எடுத்தவர்களையே தன் பக்கம் திருப்பினார். கடாபியின் மகன் சைபிப் அமெரிக்கா வந்தபோது அவரை Condoleeza Rice வரவேற்றுள்ளார். றொனி பிளேயர், புட்டின் லிபியா சென்றுள்ளனர்.

றோனால்ட் ரீகன் கடாபியை mad dog of the Middle East என திட்டினார். 9/11 க்கு பிறகு தனது நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டார். பாலஸ்தீனியரை தனது நாட்டிலிருந்து வெளியேற்றினார். மேற்கு நாடுகளுக்கு சாதகமாக செயல்பட்டார். அமெரிக்க ஜனாதிபதி G.Bush " I pray to God to bless you and your country.And I hope we will meet." என தெரிவித்தார். 'விசர் நாய்' எனத் திட்டிய அதே அமெரிக்கா உனக்கும் உனது நாட்டிற்குமாக கடவுளை பிரார்த்திக்கின்றேன் என ஆசி வழங்குமளவிற்கு மாற்றிவிட்டார் கடாபி. உலக பொருளாதாரத்துடன் தனது நாட்டை வளர்க்க தவறியமையால் இன்று மக்கள் போராட்டத்தை தடுக்க முடியாமல் உள்ளார்.

ஒரு காலகட்டத்தில் ஆதரவாக இருந்த ஐ.நா லிபியாவிற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்துள்ளது. 23ந்திகதி வோல் ஸ்ரீற் பத்திரிகை கடாபியை மக்கள் தூக்கி எறிய ஐரோப்பாவும் அமெரிக்காவும் உதவி செய்ய வேண்டும் என எழுதியுள்ளது. பாலஸ்தீன மக்கள் பசியுடன் வாடியபோது பேசாமல் இருந்த அமெரிக்கா தனது நண்பன் என புகழ்ந்து கடாபியை ஏற்றுக் கொண்ட அமெரிக்கா இன்று அதே கடாபியை தூக்கி எறிய தயங்கவில்லை.

கடாபி தனது கடைசிக் காலத்தில் உள்ளார்.

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



நம் கலாச்சாரத்தில் விளக்கேற்றினால் கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம். விளையாட்டுப் போட்டி என்றால் மைதானத்தை கையால் தொட்டு வணங்கிவிட்டு பின்னர் மைதானத்தில் நுழைகிறோம். ஈஷாவில் கூட உணவருந்துவதற்கு முன்னர் “சஹனா வவது” என்னும் சமஸ்கிருதப் பாடல் பாடி பிராகீத்தனை செய்துவிட்டு உணவருந்துகிறோம், அது ஏன் என்று ஒரு சாதகர் கேட்ட கேள்விக்கு சத்குரு அளித்த பதில்:



# சத்குரு வாசுதேவ்

நம் கலாச்சாரத்தில் விளக்கேற்றினால் கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம். விளையாட்டுப் போட்டி என்றால் மைதானத்தை கையால் தொட்டு வணங்கிவிட்டு பின்னர் மைதானத்தில் நுழைகிறோம். ஈஷாவில் கூட உணவருந்துவதற்கு முன்னர் “சஹனா வவது” என்னும் சமஸ்கிருதப் பாடல் பாடி பிராகீத்தனை செய்துவிட்டு உணவருந்துகிறோம், அது ஏன் என்று ஒரு சாதகர் கேட்ட கேள்விக்கு சத்குரு அளித்த பதில்:

அது ஒரு பிரார்த்தனை அல்ல. இந்தியக் கலாசாரத்தில் பிரார்த்தனை என்பதே இருந்ததில்லை. பிரார்த்தனை என்பது நமது கலாசாரத்தில் சமீப காலங்களில்தான் உண்டானது. வெளியிலிருந்து வந்த மதங்களைப் பார்த்து நாம் பின்தங்கி இருக்கிறோமோ என்றெண்ணி பிரார்த்தனையை நாமே உண்டாக்கிக் கொண்டோம். உண்மையில் கோவில் கூட பிரார்த்தனைக்கான இடமாக இருந்ததில்லை. சக்தியை தேக்கி வைக்கும் இடமாகத்தான் அது இருந்திருக்கிறது.

உணவருந்துவதற்கு முன்னரோ அல்லது யோகப் பயிற்சிகள் செய்வதற்கு முன்னரோ நாம் அப்படி உச்சரிப்பதன் மூலம் நம்மை நாமே ஒரு குறிப்பிட்ட தன்மைக்காக தயார் செய்து கொள்கிறோம். நம்முள் உள்ள சிறந்த தன்மையை வெளிக் கொணர அது உதவுகிறது. உதாரணமாக சாப்பிடுவது என்பது வெறுமனே ஒரு சாதாரண செயல் அல்ல. அது நம்மை உயிருடன் இருக்க வைத்து நம் வாழ்க்கை நீடிக்கும்படி பார்த்துக் கொள்கிறது. சாப்பிடுவது என்பது எதையோ உங்கள் வயிற்றுக்குள் திணித்துக் கொள்வதல்ல. சமஸ்கிருத மொழியில் மட்டும்தான் ஒலியும் வடிவமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கிறது. நீங்கள் அதன் பொருள் கூட தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. நீங்கள் அதை வெறுமனே உச்சரித்தாலே ஒரு குறிப்பிடட சூழ்நிலையை நீங்கள் உங்களுக்குள் உருவாக்கிக் கொள்கிறீர்கள். இப்படிப் பாடுவதால் ஒரு புரிதலுடனும் ஒரு மதிப்புடனும் உணவை அணுகுவதற்கான ஒரு சூழ்நிலையை நமக்குள் உருவாக்கிக் கொள்கிறோம். கடவுளுக்காக நாம் அதைப் பாடுவதில்லை. கடவுளுக்கு நன்றி சொல்வதும் நமது நோக்கமல்ல.

உங்களுக்காக கடவுள் எதுவும் உணவு தயார் செய்து தருவதில்லை. உங்களுக்கு உணவு கிடைத்ததற்கு இங்குள்ள பல்வேறு மக்கள்தான் காரணம். நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் கடவுளை நீங்கள் பார்த்ததே இல்லை. உங்களை வாழ வைக்கும் கடவுள் உண்மையில் உணவுதான். எனவேதான் நாம் இதை அன்னபூரணி என்கிறோம். இப்படி நாம் சொல்லும்போது ஏதோ ஒரு தேவதை எங்கோ உட்கார்ந்து கொண்டு நமக்காக உணவு தருகிறாள் என்பதல்ல. நாம் உணவையே தேவதையாக மதிக்கிறோம். அன்னம் பிரம்மம் அதாவது உணவுதான் கடவுள். உங்கள் அனுபவத்தில் நீங்கள் சுவாசிக்கும் காற்று, நீங்கள் நடக்கும் நிலம், நீங்கள் உண்ணும் உணவு இவைதான் உண்மையான கடவுள்கள்.

இந்தக் கடவுள்கள்தாம் ஒவ்வொரு கணமும் உங்களை உயிருடன் வைத்திருக்கிறது. இதை நீங்கள் புரிந்து கொள்ளும்போது ஆழமான அன்போடும் மிகவும் நன்றியுணர்வோடும் உணவருந்த ஆரம்பிப்பீர்கள். உணவை வீண் செய்யவும் மாட்டீர்கள். எனவே நீங்கள் குறிப்பிட்ட செயல்களுக்கும் பிரார்த்தனைக்கும் எந்த சம்பந்தமுமில்லை. குறிப்பிட்ட ஒரு தன்மையை நமக்குள் கொண்டு வருவதற்காகத்தான் நாம் அது போன்று செய்கிறோம். நமது ஆன்மீக வளர்ச்சியே கூட அந்த தன்மையை அடிப்படையாகக் கொண்டே இருக்கிறது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org




**Sitham Sam Shanmugam** (Sales Rep)

**HomeLife/GTA Realty Inc.**

HOMELIFE HIGHER STANDARDS

Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.

•Independently owned and operated

your 2nd house is Investment property

1st house put down payment

Tenant (Rent) Pay the **Mortgage**
Scarborough , Mississauga

Senior Home in Richmondhill 12 Beds

Metal scrap yard for recycling and car sales with house office

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 **Condo.** in Toronto Near Univerisal of York $130,000

# பத்திரிகையாளர் பார்வை - ராகு(ல்) காலம்?

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2011

ஒரு நாளில், மூன்று மணி நேரம் ராகு காலம், எம கண்டத்திற்கு போகும். இன்னும் ஒண்ணரை மணி நேரம் குளிகையில் கழியும். பயணமாக இருந்தால் அன்றைக்கு எந்த திசையில் சூலம் என்று பார்த்து கிளம்புவார்கள். இந்த மாதம் 20ஆம் தேதி, அண்ணா அறிவாலயத்தில் காங் - திமுக கூட்டணி பேச்சுவார்த்தை நடந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை 4.30 - 6.00 ராகு காலம். 3.30 மணிக்கு துவங்கிய பேச்சுவார்த்தை 5.00 மணிக்கு ராகு காலத்தில் முடிந்தது.

போன காங். தூதுவர்கள் புன்னகையோடு திரும்பினாலும் அதற்கு பிறகு தி.மு.க.விற்கு தொடர் ராகு காலம். காங்கிரஸிற்கு 'ராகு'ல் காலம் என்பது தெளிவாகிவிட்டது. காரணம் காங்கிரஸ் வைத்துள்ள கடுமையான நிபந்தனைகள். 90 இடங்கள், ஆட்சியில் பங்கு, குறைந்த பட்ச செயல் திட்டம் ஆகியவை காங்கிரஸ் கோரிக்கை என்று இரண்டு நாட்களுக்கு பின் செய்திகள் கசிய ஆரம்பித்தது. காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் வார்த்தைகளில் சொன்னால், "தமிழக காங்கிரஸ் என்பது இரண்டு கழகங்களுக்கும் மாறி மாறி குங்குமம் சுமக்கும் கழுதை"யாகத்தான் கடந்த முப்பது ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. அந்தக் 'கழுதை' இப்போது பொதி சுமக்க மறுக்கிறதா? அரசியல் பார்வையாளர்களால் நம்ப முடியவில்லை. 'கழுதைகளை விரட்டி விட்டு பாய்ந்து செல்லும் குதிரைகளை கொண்டு தமிழக அரசியலை நடத்த வேண்டுமென்று நினைக்கிறார் ராகுல் காந்தி' என்பதுதான் டெல்லியின் உயர் மட்டத் தகவல்கள்.



திமுகவின் 'கூட்டணி' தர்ம மிரட்டல்கள், ஊழல்கள் அகில இந்தியாவிலும், ஏன் உலக அளவில் காங்கிரஸின் மதிப்பை குழி தோண்டி புதைத்துவிட்டது. ராசா என்கிற இரண்டெழுத்தும், திமுக என்கிற மூன்றெழுத்தும் தேசிய அவமானத்தின் குறீயிடுகளாக மாறிவிட்டது. தொலைக்காட்சி, பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்த இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் 'பாவ மன்னிப்பு' கூண்டில் ஏறிய 'பாவி'யாக தோன்ற வேண்டிய அவலம்.

'பொறுத்தது போதும் பொங்கியெழு' என்று காங்கிரஸை பொங்க வைத்துவிட்டது திமுக. கலைஞரின் சகுனி தந்திர அரசியல் சித்து விளையாட்டுகள் இந்த முறை காங்கிரஸிடம் எடுபடவில்லை என்பதுதான் யதார்த்த நிலை.

அதிக இடங்களை பெற வேண்டும் என்கிற முடிவு காங்கிரஸ் இப்போது எடுத்ததல்ல. 2010 ஜனவரியிலேயே இதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் ராகுலின் அபிமானத்திற்குரிய கார்த்திக் சிதம்பரம். அதற்கான காரண காரி யங்களையும், அவசியத்தையும் மின்னஞ்சல் மூலமாக ராகுலுக்கு தெரி வித்து விட்டார். அதில் காங்கிரஸ் கட்சியை வளர்க்க வேண்டுமென்கிற எண்ணம் காங்கிரஸின் இளைஞர்களுக்கு இருப்பதை ராகுல் புரிந்துகொண்டார். இளைஞர் காங்கிரஸ் தேர்தல்களும் அதை உறுதி செய்தது.

காங்கிரஸ் அதிக இடம் கேட்பதற்கான காரணங்களையும் அடுக்கினார்கள் டெல்லி வட்டாரத்து காங்கிரஸ் முக்கிய புள்ளிகள்.

**- சுதாங்கன் -**

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

TAX CUTS... WORKING FOR YOU!

There is a wide range of tax cuts available to Canadians from all walks of life.
Be sure to take advantage of tax cuts. It makes sense to file electronically and on time.

For more information on these and other tax cuts, go to cra.gc.ca/taxcuts or call 1-877-959-1-CRA.

Pension Income Splitting
Split up to 50% of eligible pension income

Public Transit Tax Credit
Save up to 15%

First-Time Home Buyers' Tax Credit
Save up to $750

Children's Fitness Tax Credit
Save up to $75/child

Tradesperson's Tools Deduction
Deduct up to $500 from income



Fractionnement du revenu de pension
Fractionnez jusqu'à 50 % du revenu de pension admissible

Crédit d'impôt pour le transport en commun
Épargnez jusqu'à 15 %

Crédit d'impôt pour l'achat d'une première habitation
Épargnez jusqu'à 750 $

Crédit d'impôt pour la condition physique des enfants
Épargnez jusqu'à 75 $ par enfant

Déduction des frais liés aux outils des gens de métier
Déduisez jusqu'à 500 $ du revenu

LES RÉDUCTIONS D'IMPÔT... TRAVAILLENT POUR VOUS !

Il y a toute une gamme de réductions d'impôt pour les Canadiens de tous les horizons.
Assurez-vous de profiter des réductions d'impôt. Produire votre déclaration par voie électronique et à temps, c'est avantageux.

Pour obtenir plus de renseignements sur ces réductions d'impôt et sur d'autres mesures, allez à arc.gc.ca/reductionsdimpot ou téléphonez au 1-888-959-1-ARC.

Government of Canada Gouvernement du Canada

CANADA'S ECONOMIC ACTION PLAN PLAN D'ACTION ÉCONOMIQUE DU CANADA

Canada

# உலக கிண்ண கிரிக்கட் - அணிகளின் பலம், பலவீனம், சிறப்பு

## விளையாட்டுத் தகவல்கள் 300

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பலம்வாய்ந்த அணிகளாக இந்தியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, இலங்கை அணிகள் கணிக்கப்பட்டுள்ளன. அணியின் பலம், பலவீனம், சிறப்பு குறித்து ஓர் அலசல்.

ஆஸ்திரேலியா பலம்: பேட்டிங்தான் ஆஸ்திரேலிய அணியின் மிகப்பெரிய பலம். ஸ்டிரைக் ரேட்டில், அதாவது அதிகமாக ரன்களை எடுத்துக் குவிக்கும் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது இந்த அணி. இளம் வீரர்கள் அதிகம் உள்ளது கூடுதல் பலம். எந்த சூழ்நிலையிலும் சமாளித்து விளையாடி ஆட்டத்தின் போக்கையே மாற்றும் திறன் உண்டு. எதிரணிகளின் வியூகங்களை உடைத்து பேட்டிங்கில் சாதனை புரியும் ஷேன் வாட்சன் இந்த அணியின் மிகப்பெரிய பலம். மூன்றாவது முறையும் தொடர்ந்து உலகக் கோப்பையைப் பெற்றாக வேண்டும் என்கிற வெறியுடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கும். கேப்டன் ரிக்கி பாண்டிங்கும், டேவிட் ஹஸ்லியும், கேமரோன் வொய்ட்டும் ரன்களைக் குவிப்பதில் சமர்த்தர்கள்.

**விளையாட்டுத்தகவல் 300 இல் இடம்பெற வேண்டிய எஸ். கணேஷ் இன் நேர்காணல் உலக கிண்ண கிரிக்கட் விளையாட்டுத் திருவிழா காரணமாக ஏப்பிரல் 15 ஆம் திகதி விளம்பரம் இதழில் வெளிவரும் என்பதனை விளம்பரவாசகர்களுக்கு தெரிவிக்கிறோம்.**

பலவீனம்: பந்து வீச்சு சிறப்பாக இல்லாதது பெரிய பலவீனம். பொலிங்கர் தவிர மற்ற வீரர்கள் ரன்களை வாரி வழங்குபவர்களாக உள்ளனர். ஆரம்பப் பந்து வீச்சில் சமர்த்தரான ஸ்விங்கர் ஷான் டெய்ட் தன்னுடைய வேகப்பந்து வீச்சால் எதிரணியினரைப் பயமுறுத்தக் கூடும் என்றாலும் ஸ்பின்னர்கள் இல்லாத குறை ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பலவீனம். குறிப்பிட்டுக் கூறும்படியான சுழற்பந்து வீச்சாளர் அணியில் இல்லை. மூத்த வீரர்களான பாண்டிங், கிளார்க், பிரெட் லீ, வாட்சன் ஆகியோரின் ஆட்டத்தையே அணி பெருமளவில் சார்ந்துள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் களமிறக்கப்பட்ட மோசமான “உலகக் கோப்பை ஆஸ்திரேலிய அணி” இதுதான் என்பது விமர்சகர்களின் கணிப்பு.

சிறப்பு: தொடர்ந்து 2 உலகக் கோப்பையை வென்றுள்ளதால் ஆஸ்திரேலிய அணிக்கு பொறுப்பு கூடியுள்ளது. முன்பு இருந்தது போல சிறப்பான அணியாக இல்லா விட்டாலும் ஆட்டத்தைத் திசைதிருப்பும் வெற்றி வீரர்கள் இருக்கின்றனர். இறுதிச் சுற்றுவரை இந்த அணி முன்னேறக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்தியா பலம்: தொடக்க, நடுவரிசை ஆட்டக்காரர் (1 முதல் 7 வரை) சிறந்த பேட்ஸ்மென்களாக உள்ளது இந்திய அணியின் மிகப்பெரிய பலம். ஸ்டிரைக் ரேட்டில் முதலிடத்தில் உள்ளது. பௌலிங் எக்கானமியில் இரண்டாவது இடத்தில் உள்ளது அனுபவம் வாய்ந்த வீரர்கள், பெரிய ஆட்டங்களில் தொடர்ந்து விளையாடி வரும் அணி. நெருக்கடியான சூழ்நிலையிலும் அணியை சிறப்பாக வழிநடத்தும் கேப்டன் தோனி ஆகியவை அணியின் பலம். சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர சேவாக், கௌதம் கம்பீர் மூவரும் இந்திய அணியின் பேட்டிங்கிற்கு மிகப்பெரிய பலம். விராட் கோலி நான்காவது ஆட்டக்கா ரராகவும், யுவராஜ் சிங் ஐந்தாவதாகவும், கேப்டன் தோனி ஆறாவதாகவும், யூசுப் பதான் ஏழாவதாகவும் ஒரு பலமான ரன்களை எடுக்கும் பேட்டிங் பட்டாளம் இந்திய அணியின் தனிச் சிறப்பாக கருதப்படுகிறது. பந்துவீச்சு என்று எடுத்துக்கொண்டாலும், வேகப்பந்துவீச்சில் ஜாகீர் கானின் திறமைக்கு முன் ஆரம்ப ஆட்டக்காரர்கள் பலரும் திணறாமல் இருக்க முடியாது. ஹர்பஜன் சிங், பியூஷ் சாவ்லா, அஸ்வின் ஆகிய மூவரும் சுழல்பந்து வீச்சில் சமர்த்தர்கள். கடந்த இரண்டாண்டுகளாக சாவ்லா களத்தில் இல்லை என்பது பலவீனம். இருந்தாலும் புதிய வரவாக இருந்தாலும் களத்தில் தனது சுழல்பந்துவீச்சால் அசத்துகிறார் என்பது கண்கூடான உண்மை. பலவீனம்: மற்ற அணிகளை ஒப்பிடும் போது விரைவாக விக்கெட்டை வீழ்த்தும் பந்து வீச்சாளர்கள் இல்லாதது பெரும் குறை. வீரர்கள் தொடர்ந்து சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தாததும் பலவீனம். ஹர்பஜன் சிங்கையும், அஸ்வினையும் நம்பித்தான் இந்திய அணியின் பௌலிங் உள்ளது என்பது பலவீனம். சிறப்பு: முந்தைய உலகக் கோப்பை அணியைக் காட்டிலும் பலமானதாக உள்ளது. பலமான பேட்டிங் வரிசை உள்ளதால் கோப்பையை வெல்லக்கூடிய அணிகளில் ஒன்றாக கணிக்கப்பட்டுள்ளது. தோனியின் அமைதி யான, அரவணைப்பான கேப்டன்ஷிப் அணிக்கு பெரிய பிளஸ். அனைத்தும் சரியாக நடந்தால் விமர்சகர்கள் கணித்தபடி இறுதிச் சுற்றுக்கு இந்தியா முன்னேறும்.

இலங்கை பலம்: பந்து வீச்சில் உலகின் நம்பர் 1 அணி. அதேபோல எக்கானமி ரேட்டிலும் முதலிடம். அனுபவ வீரர்கள், வெற்றியை நோக்கி தொடக்கத்தில் இருந்தே முன்னேறுவது, உள்ளூர் சூழலில் விளையாடுவது ஆகியவை அணிக்கு பலம் சேர்க்கிறது. லசித் மலிங்காவும், முத்தையா முரளீதரனும் பந்துவீச்சுக்கு வலு சேர்ப்பவர்கள். இந்திய அணி எந்த அளவுக்கு பேட்டிங்கில் பலமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு பௌலிங்கில் பலமான அணி இலங்கை அணி. நுவன் குலசேகரா, ஏஞ்சலோ மேத்யூஸ் இருவரும் இந்தியத் துணைக்கண்டத்தின் ஆடு களத்துக்கு ஏற்ப பந்துவீசும் ஆட்டக்காரர்கள். அதிகமாக பாராட்டப்படா விட்டாலும் ரங்கனா ரெஹாத்தின் இடதுகைப் பந்துவீச்சு வெளியூர் அணிக்கு சவாலாக இருக்கக்கூடும். பலவீனம்: தரவரிசையில் முதல் 8 இடத்தில் உள்ள அணிகளில், பேட்டிங்கில் கடைசி இடத்தில் உள்ள அணி இலங்கை தான். நெருக்கடியான சூழலில் சிறப்பாக விளையாடத் திணறும் வீரர்கள். மோசமான ஸ்டிரைக் ரேட். சிறப்பு: 1996-ம் ஆண்டுக்குப் பின்னர் 2007-ல் சிறப்பாக விளையாடியது இலங்கை. ஆனாலும் இப்போது மோசமாக விளையாடி வருவது அணிக்கு கடும் நெருக்குதலை அளித்துள்ளது. அரை இறுதி வரை முன்னேற வாய்ப்பு இருக்கிறது. முதல் சுற்றிலேயே வெளியேறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இங்கிலாந்து பலம்: தனிப்பட்ட சில வீரர்கள் சிறப்பாக ஆடுவது அணியின் மிகப்பெரிய பலம். முக்கியமாக நடுவரிசையில் டிராட், பீட்டர்சன், பிராட், ஸ்வான் ஆகியோர் அதிரடியாக ஆடி ரன் குவிக்கின்றனர். பந்து வீச்சும் சிறப்பாகவே உள்ளது. ஒருநாள் ஆட்டத்தை எப்படி ஆட வேண்டும் என்பதை தெரிந்து வைத்துள்ள அணி. பலவீனம்: ஸ்டிரைக் ரேட் குறிப்பிடும் வகையில் இல்லை. அணியின் கூட்டு முயற்சியாக இல்லாமல், ஒரு சில வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் மட்டுமே வெற்றி பெறுகிறது. சிறப்பு: டெஸ்ட் போட்டியில் சிறப்பாக ஆடும் இந்த அணி, ஒரு நாள் போட்டிகளில் சோபிக்கத் தவறி வருகிறது. சில தனிப்பட்ட வீரர்களின் ஆட்டத்தைத் தவிர மற்றவர்களின் ஆட்டம் சொல்லிக்கொள்ளும் படி இல்லை. ஒரு சில அணிகளுக்கு அதிர்ச்சித் தோல்விகளைத் தரக்கூடிய அணியாக இருக்கிறது இங்கிலாந்து. அதிர்ஷ்டம் இருந்தால் அரை இறுதி வரை முன்னேறும், அவ்வளவே.



மேற்கிந்தியத் தீவுகள் பலம்: கெய்ல், பிராவோ, சந்தார்பால் ஆகியோர் அணியின் பலம். திடீர் அதிரடியால் வெற்றி பெறும் அணி. பலவீனம்: தரவரிசையில் 9-வது இடத்தில் பின்தங்கியுள்ளது. பேட்டிங், பந்து வீச்சும் இரண்டுமே தகராறு. எப்போது, எப்படி விளையாடுவார்கள் என்று யாருக்குமே தெரியாது. சிறப்பு: கோப்பையை வெல்ல 70 சதவீத வாய்ப்பு இந்த அணிக்கு இருப்பதாக முன்னாள் கேப்டன் கிளைவ் லாயிட் தெரிவித்துள்ளார். ஆனாலும் கால் இறுதி வரை முன்னேறுவதே சிரமம் என்பதுதான் விமர்சகர்களின் கருத்து.

தென் ஆப்பிரிக்கா பலம்: தொடர்ந்து சிறப்பாக விளையாடி வருவதும், வேகப்பந்து வீச்சு சிறப்பாக இருப்பதும் இந்த அணியின் முக்கிய பலம். தொடக்க பேட்ஸ்மேன்களும், நடுவில் களம் இறங்குபவர்களும் சிறப்பாக விளையாடி வருகின்றனர். எந்தச் சூழ்நிலையிலும் களம் இறங்கிச் சிறப்பாக விளையாடும் செல்லும் ஜேக்கஸ் காலிஸ், ஹஷிம் ஆம்லா வெற்றிகரமான கேப்டன் கிரேம் ஸ்மித் ஆகியோர் அணியை வெற்றிப் படிக்கட்டுகளில் ஏற்றுவார்கள். பலவீனம்: நெருக்கடியான சூழ்நிலையில் காலிஸ் தவிர மற்ற வீரர்கள் சிறப்பாக ஆடுவது இல்லை. சராசரி என்ற நிலையில் உள்ள ஸ்டிரைக் ரேட், நடுவரிசை, பின்வரிசை வீரர்கள் நிலைத்து நின்று ஆடாதது, சிறந்த சுழற்பந்து வீச்சாளர் இல்லாதது, காலிஸயே பெருமளவில் சார்ந்திருப்பது ஆகியவை அணியின் பலவீனம். சிறப்பு: வெல்வதற்கு சிறந்த, கடினமான அணி என்ற பெயரை பெற்றுள்ளது. இருந்தபோதும் எதிரணி வலிமையானதாக இருந்தால் அதை எதிர்கொள்ளும் நிதானம் தென் ஆப்பிரிக்க அணிக்கு இல்லை என்பது பார்வையாளர் களின் கணிப்பு. நெருக்குதல் காரணமாக சில சமயங்களில் தோல்வி ஏற்படுகிறது. ஜாக்ஸ் காலிஸ் அணியின் நம்பிக்கை நாயகன். கோப்பையை வெல்லக்கூடிய அணிகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

நியூசிலாந்து பலம்: ஸ்டிரைக் ரேட், எகானமியில் 3-வது இடம். நெருக்கடியை சமாளித்து ஆடும் திறன். வலுவான பேட்டிங், தனிப்பட்ட முறையில் வீரர்கள் சிறப்பாக ஆடி வருவது இவையே இந்த அணியின் முக்கிய பலம். பலவீனம்: பெரிய போட்டிகளிலோ, தொடர்களிலோ வெற்றி பெற்றதில்லை. இந்திய அணியைப் போன்றே இங்கும் விரைவில் விக்கெட்டை வீழ்த்தும் பந்து வீச்சாளர்கள் இல்லை. சிறப்பு: சிறப்பாக விளையாடினால் மட்டுமே அரை இறுதி வரை முன்னேறலாம் என்று கணிக்கப்பட்டுள்ள அணி நியூஸிலாந்து. ஆனாலும் அணி சிறப்பாக இல்லாதது நியூஸிலாந்துக்கு பின்னடைவாக உள்ளது. சமீபத்திய தொடர்களில் ஏற்பட்ட படுதோல்விகள் அந்த அணிக்கு கடும் நெருக்குதலை அளித்துள்ளது.

பாகிஸ்தான் பலம்: பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியுள்ள போதிலும், பந்து வீச்சு பலத்தில் 3-வது இடத்தில் உள்ளது. நெருக்கடியான சூழலில் சிறப்பாக விளை யாடக் கூடிய அணிகளில் இதுவும் ஒன்று. சூதாட்ட சர்ச்சைக்குப்பின் கிடைத்துள்ள வெற்றிகளால் பெற்ற உத்வேகம் அணியின் முக்கிய பலம். பலவீனம்: சிறப்பாக ஆடாத பேட்ஸ்மேன்கள். சராசரிக்கும் குறைவான ஸ்டிரைக் ரேட், கூட்டு முயற்சி...இப்படியாக, தொடர்ந்து சிறப்பாக ஆடமுடியாமல் தவிக்கும் அணி. முக்கிய பந்துவீச்சாளர்கள் இல்லாமல் களம் இறங்குவதால் நெருக்கடி. சிறப்பு: களத்தில் ஆக்ரோஷம் காட்டுவதில் பாகிஸ்தான் அணிக்கு நிகர் அதுவே. சொல்லும்படியான வீரர்கள் இல்லை. ஆனாலும் அணியின் பலவீனத்தால் கால்இறுதிக்கு மேல் முன்னேறாது என விமர்சகர்கள் கணித்துள்ளனர்.

இந்தியாவுக்கு அதிர்ச்சித் தோல்வி: 2007-ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியின் முதல் சுற்றிலேயே இந்தியா வெளியேற நேரிட்டது. லீக் சுற்றில் வங்கதேசத்திடம் இந்திய அணி அதிர்ச்சித் தோல்வியுற்றதே இதற்கு காரணம். போர்ட் ஆ.்.ப் ஸ்பெயினில் மார்ச் 17-ல் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய இந்தியா 49.3 ஓவர்களில் 191 ரன்களுக்குச் சுருண்டது. அதிகபட்சமாக கங்குலி 66 ரன்கள் குவித்தார். பின்னர் ஆடிய வங்கதேசம் 48.3 ஓவர்களில் 192 ரன்கள் எடுத்து இந்தியாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது. லீக் சுற்றின் மற்றோர் ஆட்டத்தில்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



# கொண்டோவிற்குரிய மாதாந்த கட்டுப்பணம்

## *Monthly maintenance fee*

**காலமாற்றம்** - இது நியதி. வாழ்க்கை மாற்றம் - இது தேவை. மாற்றத்தின் ஒவ்வொருபடியும் ஆரம்பத்தில் இறுக்கமாகவும் புரிந்துகொண்டு ஏற்பதற்கு கஷ்டமாகவும் இருக்கலாம். காலப்போக்கில் பழக்கப்பட்டு விடும். இதுவே வாழ்வின் பகுதியாக மாறிவிடும்.

**வாழும் வீடு** - அதற்கு முன்னும் பின்னும் காணி - நிலம், புல்லு, தரை, கார் தரிப்பு இடம் போன்றவைகளுடனான வீடு. இந்த நிலைமையிலேயே ஆரம்ப வாழ்க்கை. காலப்போக்கில் மக்கள் தொகையின் அதிகரிப்பு. இதனால் வீட்டின் விலையின் அதிகரிப்பு. நிலநெருக்கடி, எல்லா வசதிகளும் கொண்ட நகரத்தில் அனைவராலும் வாங்கமுடியாத நிலைமை வந்தபோது, அடுக்குமாடிக்கட்டிடத்தில் ஒரு மனை (Condominium Unit) என்ற நிலைமை உருவாகியது.

இதன் ஓர் அங்கமாக தொடர்வீடுகளாக (Townhouse) கட்டப்படுவதைக் கொள்ளலாம். வீடுகளில் வசிப்பவர்கள் வயதான காலங்களில் வாழ்க்கையை இலகுவானதாகவும், தரமானதாகவும் ஏற்படுத்திக்கொள்ள உருவாக்கியதாக, இந்த அடுக்குமாடிமனை வாழ்க்கை முறையைக் கொள்ளலாம். இவ்வாறான வாழ்க்கை முறை பொதுவாக (வசதியானதாகவும்) இலகுவானதாக இருக்கும். தனிப்பட்டவர்கள், புதிதாக திருமணமானவர்கள், வயோதிபர்கள் இதனையே அதிகமாக விரும்புகின்றனர். இவ்வாறான வசதிகளிற்கு மேலதிகமாக கொடுப்பனவு செய்யவேண்டும் என்பதும் உண்மை.

இதன் ஒரு வளர்ச்சிப்பாதையில் உருவாகியதே வியாபாரக் கொண்டோக்கள் - (Business Condominium). இந்த முறை 1980 களில் பிரபல்யம் அடையத்தொடங்கியது. இன்றைய காலகட்டத்தில் ஒருபடி மேலாக தனி வீடுகள், இரண்டு வீடுகள் சேர்ந்த வீடுகளிற்கும் இந்த கொண்டோ முறை வந்துள்ளது. இவ்வாறான கொண்டோ முறைகளிற்கு ஒரு மாதாந்த கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டும் என்பது யாவரும் முக்கியமாக அறியவேண்டிய விடயம்.



இந்தவகையான அலுவலக கட்டிடத்தொகுதி அல்லது மனைத்தொகுதி அல்லது வியாபாரக் கட்டிடத்தொகுதியின் ஒவ்வொரு நாட்களிற்குரிய முக்கியமான தேவைகளை கவனிக்க ஒரு முகாமைத்துவ நிறுவனம் (Management Company) அமர்த்தப்படும். இந்த நிறுவனம் இக்கட்டிடத் தொகுதியை மேற்பார்வை செய்வதால் முகாமைத்துவ நிறுவனம் என அழைக்கப்படும்.

இவ்வாறு முகாமைத்துவம் செய்யும் நிறுவனத்திற்கு மாதாந்த கொடுப்பனவு செய்தல் வேண்டும். உதாரணமாக ஒரு அடுக்குமாடி மனையில் பொதுவாக ஏற்படும் செலவுகளைக் கருத்தில் கொண்டால், முக்கியமாக புல்தரை, கார்த்தரிப்பு, பகுதிகளை தரமாக பராமரித்தல், (Snow Cleaning, Grass maintenance), பாதுகாவலர் (Security Guard), பொதுவான காப்புறுதி என்பவற்றைக் கொள்ளலாம். கட்டிடங்களிற்கு ஏற்ப பொதுவான செலவுகள் மாறுபடலாம். ஒரு குறிப்பிட்ட வருடத்தில், உதாரணமாக ஏப்ரல் 01, 2011 தொடக்கம் மார்ச் 31, 2012 வருடகாலமாக எடுத்தால் இதற்கு மொத்தமாக எவ்வாறு செலவு வரலாம் என ஒரு வரவு செலவு கணக்கு (Budget) திட்டம் தயாரிக்கப்படும். இந்த Budget தயாரிக்கும் போது இந்த நிறுவனத்திற்கு முகாமைத்துவ செலவு, எதிர்பாராத செலவுகள், எதிர்காலத்தில் நிச்சயமாக வரும் என எதிர்பார்த்து சேமிக்கும் பகுதி (இது சட்டபூர்வமான சேமிப்பு) (Reserve Fund) என்பனவும் சேர்ந்து கொள்ளப்படும். இவ்வாறு கணக்கிட்டு பெறப்படும் தொகையை மொத்தமாக உள்ள மனை எண்ணிக்கைகளின் தொகைக்கேற்ப ஒவ்வொரு அலகுகளிற்கும் கட்டணம் மாதாந்தமாக அறவிடப்படும். இதுவே Monthly maintenance fee என அழைக்கப்படும். இந்த தொகையுடன் இன்றைய காலகட்டத்தில் பொருட்களிற்கும், வியாபாரத்திற்கும் உரியவரியும் (HST) சேர்த்து அறவிடப்படும். உதாரணமாக மாதாந்த செலவு $300 டொலர் ஆயின் $339 அறவிடப்படுகிறது. HST $39 ஆகும்.

இவ்வாறு உருவாக்கப்படும் வரவு செலவு கணக்குத் திட்டம் புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தொகுதிக்கு முதல் தடவையாக உருவாக்கப்படுவதால் ஏற்கெனவே இதுபோன்ற கட்டிடத்தொகுதியின் வரவு செலவுத்திட்டத்தை நகலாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றது. இந்த மாதாந்த கொடுப்பனவு நடப்பு ஆண்டில் ஏற்படும் எதிர்பாராத செலவுகளிற்கேற்ப அதிகரிக்க லாம் என்பதனையும் கவனத்தில் கொள்க.

**இவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படும் நிறுவனம் எவ்வாறு இந்தத் தேவைக்காக அமர்த்தப்படுகின்றது என்பதனைப் பற்றிப் பார்ப்போம்.**

கொண்டோ மனை, கொண்டோ வியாபாரக் கட்டிடம் போன்றவற்றின் எண்ணிக்கைக் கேற்ப ஆகக்குறைந்தது மூன்று எண்ணிக்கை உள்ளவர்களைக் கொண்ட ஒரு சபை (Board) உருவாக்கப்படும். இவர்கள் Board of Directors என அழைக்கப்படுவர். இவர்களிற்கு எதுவித சம்பளமும் கிடையாது. 100% Volunteer Job. இந்த Board of Directors பல முகாமைத்துவ நிறுவனங்களை அழைத்து, இவ்வாறான கட்டிடத்தொகுதியை பராமரிப்பதற்குரிய செலவுத்தொகை பற்றிய மதிப்பீட்டைப் பெற்று, இந்த நிறுவனங்களில் எந்த நிறுவனம் சிறந்ததாகவும் முகாமைத்துவச் சந்தையில் நிலையானதாக வும், நல்லபெயருடன் இயங்குவதையும் மனதில் கொண்டு நியாயமான வருடாந்த கொடுப்பனவைக் கொண்டு தெரிவு செய்யப்பட்டு, குறிப்பிட்ட கட்டிடத் தொகுதியை முகாமைத்துவம் செய்வதற்கு வருடாந்த ரீதியில் அமர்த்தப்படும். இந்த Board of Directors ஐ தெரிவு செய்யும் போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். பொதுவாக Board of Directors ஆக வருபவர்கள் அனேகமாக அந்த கட்டிடத்தொகுதியில் வாழுபவர்களாக அல்லது அதன் உரிமையாளராக இருப்பார்கள்.

தாம் வசிக்கும் கட்டிடம் அல்லது சொந்தமாக வியாபாரம் செய்யும் கட்டிடத் தொகுதி நல்ல நிலையில், பாதுகாப்பாக இருப்பதுடன், எதிர்காலத்தில் கட்டிடத் தொகுதியின் பெறுமதியை அதிகரிக்க கூடியதாகவும் கட்டிடத்தொகுதியை முகாமைத்துவம் செய்வதே நல்லது.

மாதாந்த கொடுப்பனவு (Maintenance fee) மிகவும் குறைவாக இருக்க வேண்டும் என்பதற்காக கட்டிடத்தொகுதியின் தரத்தை குறைத்தல் புத்திசாலித்தனமாகாது. இதற்காக மிகவும் மலிவான, அனுபவமற்ற முகாமைத்துவ நிறுவனங்களை தேர்ந்தெடுத்து கட்டிடத்தொகுதியை முகாமைத்துவம் செய்தல் சிறந்ததாகாது.

என்னுடைய அனுபவத்தில் கண்ட உண்மை, பல முகாமைத்துவ நிறுவனங்களும் பல Board of Directors உம் சேர்ந்து கட்டிடத்தொகுதிகளை சிறப்பான முறையில் நடத்தி வருகிறார்கள். ஆனாலும் சில கட்டிடத்தொகுதியில் சில Board of Directors பணம் உழைப்பதற்காகவே நுழைவார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு Board of Directors ஆக இருப்பார்கள். தம்முடன் சேர்ந்து, தமது தேவையை கவனிக்கக் கூடிய முகாமைத்துவ நிறுவனத்தை அழைத்து வருவார்கள்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 336**

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# உலக...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கையிடமும் இந்தியா தோல்வி கண்டதால் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டது.

கத்துக்குட்டிகளால் களை இழப்பு!
கத்துக்குட்டி அணிகளால் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் சுவாரசியம் குறைந்துபோவதாக ரசிகர்கள் மத்தியில் பரவலாகப் பேச்சு எழுந்துள்ளது. இந்த உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்றுள்ள வங்கதேசம், ஜிம்பாப்வே, கென்யா, கனடா, அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய 6 அணிகளும் மற்ற அணிகளுடன் ஒப்பிடுகையில் கத்துக்குட்டி அணிகள்தாம். இவற்றில் வங்கதேசம், ஜிம்பாப்வே, கென்ய அணிகள் கடந்த கால போட்டிகளில் பெரிய அணிகளை வீழ்த்தி அதிர்ச்சி அளித்திருந்தாலும், அந்த அணிகள் சீரான வளர்ச்சியைப் பெறவில்லை என்பதை மறுக்க முடியாது. உலகக் கோப்பை போன்ற மிகப் பெரிய போட்டிகளில் ஆடும் அளவுக்கு அந்த அணிகள் வளரவில்லை என்பதே உண்மை. இந்த உலகக் கோப்பை போட்டியில் நியூசிலாந்து அணிக்கு எதிராக கென்யா வெறும் 69 ரன்களில் சுருண்டது. விக்கெட் இழப்பின்றி நியூசிலாந்து எளிதாக வென்றது. மொத்தமே அந்தப் போட்டியில் 31.5 ஓவர்களே வீசப்பட்டன. சுமார் 8 மணி நேரம் நடைபெறக் கூடிய போட்டி இரண்டரை மணி நேரத்தில் முடிந்தேவிட்டது.

மற்றோர் ஆட்டத்தில் கனடாவுக்கு எதிராக இலங்கை 332 ரன்களைக் குவித்தது. இலக்கை துரத்திய கனடா 122 ரன்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து பரிதாபமாகத் தோற்றது. ஆவலோடு போட்டியைக் காணக் காத்திருந்த ரசிகர்களுக்கு இதுபோன்ற ஆட்டங்கள் என்ன சுவாரசியத்தை அளித்திருக்க முடியும்?

“பெரிய அணிகளுடன் ஆடும் வாய்ப்பு எங்களுக்கு அதிகமாக கிடைப்பதில்லை. எங்கள் வீரர்கள் பதற்றத்துடன் விளையாடியதால் எளிதில் தோற்றுவிட்டோம்” என கென்யா, கனடா அணிகளின் கேப்டன்கள் தெரிவித்தனர். இந்தக் காரணங்கள் நியாயமாகத் தோன்றினாலும், ஆக்ரோஷமான போட்டியை எதிர்பார்த்திருக்கும் ரசிகர்கள் இதனால் எல்லாம் சமாதானம் அடைய மாட்டார்கள். இங்கிலாந்துக்கு எதிராக நெதர்லாந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது என்றாலும், இதுபோன்ற திறமையை சிறிய அணிகள் தொடர்ச்சியாக வெளிப்படுத்துவதில்லை. கடந்த உலகக் கோப்பை போட்டிகளில் கனடா ஓர் ஆட்டத்தில் 36 ரன்களுக்கும், மற்றோர் ஆட்டத்தில் 45 ரன்களுக்கும், நமீபியா 45 ரன்களுக்கும், ஸ்காட்லாந்து 68 ரன்களுக்கும் சுருண்டது நினைவிருக்கலாம். கத்துக்குட்டி அணிகளுக்கு எதிராக வலுவான அணிகள் முதலில் களமிறங்கினால் மானாவாரியாக ரன்களைக் குவித்து விடுகின்றன. கடந்த முறை பெர்முடாவுக்கு எதிராக இந்தியா 413 ரன்களையும், இந்த முறை வங்கதேசத்துக்கு எதிராக இந்தியா 370 ரன்களையும் விளாசியது நினைவுகூரத்தக்கது. இந்த முறை உலகக் கோப்பை போட்டியில் “சூப்பர் 8” சுற்று கிடையாது.

லீக் ஆட்டங்கள் முடிந்ததும் நேரடியாக நாக்-அவுட் சுற்றுகள் (காலிறுதி, அரையிறுதி) தொடங்கிவிடும். மொத்தம் உள்ள 42 லீக் ஆட்டங்களில் 30 ஆட்டங்கள் ஏதாவது ஒரு கத்துக்குட்டி அணி பங்கேற்கும் ஆட்டங்கள் தான். இவற்றின் முடிவு ஒருதலைபட்சமாக இருக்கும் என்பதை இப்போதே கூறிவிடலாம். “சூப்பர் 8” சுற்று இருந்தாலாவது, தகுதி வாய்ந்த 8 அணிகள் தங்களுக்குள் மோதும் மிகப் பெரிய கிரிக்கெட் விருந்தை ரசிகர்கள் எதிர்பார்க்கலாம். ஆனால், மொத்தமே 4 காலிறுதிகளுடன் ரசிகர்கள் திருப்தி அடைய வேண்டிய நிலையே உள்ளது.

உலகக் கோப்பை என்றால் அத்தனை அணிகளும் (1992 போல) ஒருமுறையாவது தங்களுக்குள் மோதி, அதில் வென்று, படிப்படியாக முன்னேறி கோப்பையை வெல்வதுதான் சிறப்பு. ஆனால் இம்முறை பெரிய அணிகள், தங்களுக்கு சமமான பல எதிரணிகளுடன் மோத முடியாத சூழ்நிலையே நிலவுகிறது. இந்தியா-பாகிஸ்தானோ, இங்கிலாந்து-ஆஸ்திரேலியாவோ, இலங்கை-மேற்கிந்திய தீவுகளோ மோதும் ஆட்டத்தை ரசிக்கலாம் என்றால் குறைந்தது காலிறுதி ஆட்டம் வரை அத்தகைய ஆட்டத்தை எதிர்பார்க்க முடியாது.

அப்படியிருக்கையில் லீக் ஆட்டங்களிலும் 30 ஆட்டங்களில் பெரிய சுவாரசியத்தை எதிர்பார்க்க முடியாது என்றால், அது ரசிகர்களுக்கு நிச்சயம் ஏமாற்றம்தான். கடந்த உலகக் கோப்பை போட்டியில் 16 அணிகள் விளையாடின. அதில் பெர்முடா, ஸ்காட்லாந்து அணிகள் நீக்கப்பட்டு இந்த முறை 14 ஆக குறைக்கப்பட்டுள்ளது. 2015-ல் நடைபெறவுள்ள போட்டியில் மொத்தம் 10 அணிகளே பங்கேற்கும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அறிவித்துள்ளது. ஆனால், ஐ.சி.சி.யின் இந்த முடிவுக்கு கிரிக்கெட் பிரபலங்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அணிகளைக் குறைப்பதன் மூலம் சிறிய நாடுகளில் கிரிக்கெட் வளர்ச்சி பெறாது என்பது அவர்களது கருத்து.

உலகம் முழுவதும் 150-க்கும் மேற்பட்ட நாடுகள் கால்பந்து விளையாடினாலும், உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு 32 அணிகளே சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. அதுவும் தகுதிச் சுற்று போட்டிகள் மூலம் அவை தேர்வு செய்யப்படுகின்றன. உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஒவ்வொரு நொடியும் பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் இருக்கக் காரணமே தகுதி வாய்ந்த முழு பலம் கொண்ட அணிகள் விளையாடுவதால்தான். கிரிக்கெட்டை பொறுத்தவரை குறைந்த நாடுகளே விளையாடுகின்றன என்றாலும், உலகக் கோப்பை போன்ற பெரிய போட்டிகளிலாவது வியாபார நோக்கத்தைக் கருத்தில் கொள்ளாமல் தகுதி வாய்ந்த 8 அணிகளைச் சேர்த்தால் போதுமானது. உலகக் கோப்பைக்கு முன்னதாக ஓராண்டில் ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியல்படி முதல் 8 இடங்களைப் பிடிக்கும் நாடுகளை மட்டும் உலகக் கோப்பைக்கு தேர்வு செய்யலாம். அதிகமான நாடுகள் விளையாடுவதால் கிரிக்கெட் வளர்ந்துவிடாது. போட்டிகள் பரபரப்பாகவும், எந்த அணி வெற்றி பெறுமோ என்ற பரபரப்பை ஏற்படுத்துவதாகவோ இருந்தால்தான் கிரிக்கெட் மீதான ஆர்வம் ரசிகர்களுக்கு மேலும் அதிகரிக்கும். புதிய நாடுகளும் கிரிக்கெட்டில் வளர வேண்டுமென்றால் அதற்கு மாற்று வழிகள் பல உள்ளன. ஆண்டுதோறும் பெரிய அணிகளுடன் சிறிய அணிகள் மோதும் போட்டிகளை நடத்தவோ, சிறிய அணிகளே தங்களுக்குள் அதிகமான போட்டிகளில் மோதவோ ஐ.சி.சி. ஏற்பாடு செய்யலாம்.


**SEARCHING FOR FAMILY PHYSICIAN**

To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.

**EMR Ready**
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

**குடும்ப வைத்தியர் தேவை**

புதிதான ***Medical*** கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.




Contact: Dr. Vukiet Tran
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elagupplai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Brimley / Lawrence**



**$290,000**
Detached Bungalow, Bed rooms 3+1 Washrooms 3, This Detached Bungalow With A Separate Entrance And A W/O To The Yard Needs

**Staines/Morningside**



**$319,900**
Townhouse 3 Storey Bedrooms 3, Washrooms 2, Eat In Kitchen With Ceramic Floor,Finished Basement With Walk-Out To Spectacular Garden & Lawn

**Bur Oak Avenue & 16th Ave**



**$329,900**
Townhouse 3 storey.Bed rooms 3, Washroom 3, Upgraded Eat-In Kitchen W/Black Appls. & Walk-Out To Large Deck

**Sheppard/Meadowvale**



**$369,900**
Link 2 Storey , Bed rooms 4 Washrooms 3, Double Car Garage, Newer Windows, Roof, Doors And Baths, Hardwood Floor On Main, Family

**Birchmount Rd./Highgate**



**$379,000**
Link 2 storey, Bedrooms 3+1, Washrooms 3, Steps To Transportation, School, Park A Sep Entrance To Finished Basement

**9th Line/ Hooverpark**



**$418,800**
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3, Close To All Amenities Modern Large Eat-In Kitchen W/Breakfast Bar, Newly Painted, New Appli-

**Markham Rd/Highglen**



**$419,900**
Link 2 Story, Bed rooms 3 Washromss 3, Walk To Schools, Parks, Nature Trails, Shops, Great Transit. Approx 1600 Sf & Finished Basement.

**Dennison/Mccowen**



**$424,900**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3, Hardwood Flooring, Upgraded Kitchen Cabinets, Crown Mouldings, Fully Fenced

**Torbram/Fathertobin**



**$429,000**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 32100 Sqf;W/O Balcony;Freshly Painted;Brandnew Broadloom, Close To School/Tim

**Markham Rd/Denison**



**$449,800**
Link 2 story, Bed rooms 3+1 Washrooms 4, Recent Upgrades: Windows, Sliding Door To B/Y, French Doors, Front Door, Broadloom]

**9th / Hwy#7 /407**



**$469,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Extra Outside 2 Parking Space Total Over $60,000 Dollors Upgrade

**9th Line/Hoover Park Dr**



**$479,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3, Direct Access To House From Garage,Huge Kitchen With Upgraded Cabinets,

**16th Ave/9th Line**



**$489,950**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, 2200 * Sq Ft Hardwood Floors, Upgraded Eat-In Kitchen With Granite Counter Tops

**9th Line/ 16th Ave**



**$498,000**
Detached 2 Story, Bedrooms 41 Washrooms 4, Upgrade Kitchen With Granite Counter-Breakfast Bar And Pantry Close To Go Tran, Park And All

**Mccowan/ Carlton**



**$499,000**
Detached 2 Story, Bedrooms 4+1, Washroom 5, All Brick Double Garage 4 Car Driveway. Finished Basement W/ Bedroom, Bathroom &

**Markham/Denison**



**$499,900**
Link 2 Story, Bedrooms 4, Washroom 4, Many Upgrades From The Builder. Custom Kitchen With Bar Top And Spiral Stairs

**Markham & Passmore**



**$535,000**
Detached 2 Story, Bedrooms 4+1 Washrooms 3 2081 Sf 4 Br Detached 7 Yr Old Home W Double Garage Hardwood Flooring

**E.Mccowan/S.14th**



**$549,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Fully Fenced Yard, Double Door Entrance, Indoor Access To Gar, Close To Hwy 407/Milliken Park/Pa-

**Castlemore/Donald**



**$579,000**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3, Approx 2,519 Sqft. Thousands Spent On Upgrds, Walk To Schools,Parks

**9th Line/Hwy 407**



**$629,000**
Detached 2 Storey, Bed rooms 4+0, Washrooms 3, Finished Basement With Kitchenette, 2Pc Washroom. Kitchen Includes California

**14th / Ninth Line**



**$689,800**
Detached 2 storey,. Bed rooms 4, Washrooms 4, Granite Floors,Granite Kitchen, California Shutters,Finished Basement

**401/Mccown**



**$219,900**
Condo Apt,. Bed rooms 1, Washrooms 1, Great South View Of The Cn Tower, Walking Distance To Ttc, Shopping, Mall, Ymca And Much

**Brimley/Ellesmere**



**$234,740**
Condo Apt,. Bed rooms 1+1, Washrooms 1, Steps To Rt Station, Scarborough Town Centre, Go Bus, Grocery/Drug Stores. Min-

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# கொண்டோவிற்குரிய...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆரம்பத்தில் சில செலவுகளை குறைப்பார்கள். ஆனால் அவர்களின் நோக்கம் நிறைவேறும் வரை காத்திருப்பார்கள். தமது மனைகளை அல்லது வியாபார அலகை விற்பதற்கான கவனமும் எடுத்துக் கொண்டு இருப்பார்கள். தகுந்த சந்தர்ப்பம் வரும்போது தமது மனையை அல்லது வியாபார நிலையத்தை விற்றுவிட்டு, சுருட்டக்கூடியதை சுருட்டிக் கொண்டு போய்விடுவார்கள்.

அதன் பின்னர் குறிப்பட்ட கட்டிடத்தொகுதி பண நெருக்கடியில் தடம்புரளும். இதனை நிவர்த்தி செய்ய மாதாந்த கட்டுப்பணத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது Special Assessment என்ற மேலதிக தொகை உரிமையாளர்களிடம் இருந்து பெறப்படுதல் வேண்டும். பொதுவாக வருடாவருடம் நடத்தப்படும் கட்டிடத்தொகுதிக்குரிய பொதுக்கூட்டத்திற்கு சமூகமளித்து தரமானவர்களை, அவர்களின் பின்னணியை ஆராய்ந்து எந்த நோக்கத்திற்காக இவர்கள் இந்த சபையில் வரவிரும்புகிறார்கள் என்பனவற்றை ஆராய்ந்து தகுந்தவர்களை சபைக்கு தெரிவு செய்வதன் மூலம் ஒரு ஆரோக்கியமான 'Board of Directors' ஐ உருவாக்கலாம். இதுவே எதிர்காலத்தில் கட்டிடத்தொகுதியின் பெருமையையும்



மதிப்பையும் அதிகரிக்கச் செய்யும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களை எனது ஆஸ்தி வியாபாரத்தில் அனுபவ ரீதியாக பலமுறை கண்டுள்ளேன். எனவே ஒரு மனை அல்லது வியாபார அலகை வாங்கும் போது, குறிப்பட்ட கட்டிட தொகுதியில் ஏதாவது Special Assessment வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதா என்பதனை உங்களது சட்டத்தரணியைக் கொண்டு அறிந்து கொள்ளவும். இதுவே முதல்படி. நீங்கள் வாங்கும் மனை அல்லது வியாபார நிலையத்தின் எதிர்காலம் மிக முக்கியமானது.

## Status Certificate

கட்டித் தொகுதி (Condominium Building) சம்பந்தமான சகல நன்மை தீமைகளும் Status Certificate என்ற கொண்டோ சம்பந்தமான ஆவணம் மூலம் அறிந்து கொள்ளலாம். இந்த ஆவணம் $100 செலுத்தி இந்த கட்டிடத்தொகுதியை முகாமைத்துவம் செய்யும் நிறுவனத்திடம் இருந்து பெற்று அறிந்து கொள்ளலாம். இதுவே கட்டிடத்தொகுதி சம்பந்தமான சகல நிலைப்பாட்டையும் கொண்டுவரும் கண்ணாடி. முக்கியமாக இதன் பண நிலைமை, கட்டிடத்தொகுதியில் எதிர் காலத்தில் எதிர்பார்க்கக்கூடிய செலவுகள் போன்றவற்றை கவனத்தில் கொள்ளவும். உங்கள் மனை அல்லது வியாபார இடத்தினை நீங்கள் கவனம் கொள்ளா விடின் வேறு யார் கவனம் கொள்ளுவர்.

இவைபற்றிய மேலதிக தகவல்கள் பெற விரும்பின் என்னுடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம் - 416.315.9397

# பத்திரிகையாளர்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

2006 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸுக்கு 48 இடங்கள் கிடைத்தது. அதில் 34 இடங்களில் வெற்றி பெற்றார்கள். அதற்கு பிறகு தொண்டாமுத்தூர், மதுரை மேற்கு இடைத்தேர்தலில் அந்தத் தொகுதிகள் காங்கிரஸிற்கு கிடைத்தது. அதனால் அவர்கள் அவர்கள் பலம் 36 ஆனது. இப்போது தமிழகம் முழுவதும் தொகுதி சீரமைப்பு முடிந்துவிட்டது. இதில் பல தொகுதிகள் காணாமல் போனது. அதில் பள்ளிப்பட்டு, தொட்டியம், சேரன்மாதேவி, சாத்தான்குளம் நான்கும் காங்கிரஸ் வெற்றி பெற்ற தொகுதிகள். இது தவிர மூன்று பொதுத் தொகுதிகள், தனித் தொகுதிகள் ஆனது. ஒரு தனித் தொகுதி பொதுத் தொகுதியானது. உதாரணமாக மதுராந்தகம் பொதுத் தொகுதியில் வெற்றி பெற்றவர் காங்கிரஸ் கட்சியின் டாக்டர் காயத்ரி தேவி. மதுராந்தகம் இப்போது தனித் தொகுதி. அதனால் காயத்ரி வேறு தொகுதியை பார்க்க வேண்டும். நாமக்கல் தனித் தொகுதி இப்போது பொதுத் தொகுதியாகிவிட்டது. அங்கு வெற்றி பெற்ற, காங்கிரஸின் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை குழு உறுப்பினரான ஜெயக்குமார், வேறு தொகுதியைப் பார்க்க வேண்டும்.

தங்களுடைய ஆறு தொகுதிகளை இழந்த காங்கிரஸுக்கு இப்போது 28 இடங்கள். இதில் செங்கம், குளச்சல் வேட்பாளர்கள் இறந்து போனதால் இப்போது இருக்கும் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் 26 தான். இருக்கும் 26 பேர்களுக்கு சீட் நிச்சயமாம். காரணம் அவர்களிடம் தான் செலவழிக்கும் 'திராணி' இருக்கும் என்பது மேலிட கணிப்பு. பழைய 48 இடங்களையே திமுக ஒதுக்கினால் இன்னும் 22 பேருக்கு மட்டுமே காங்கிரஸ் வாய்ப்பு அளிக்க முடியும்.

மேலும், தமிழகத்தில் மொத்தம் 39 நாடாளுமன்ற தொகுதிகள். ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்குள்ளும் 6 சட்டமன்ற தொகுதிகள். இதில் 15 நாடாளுமன்ற தொகுதிகளில் காங்கிரஸ் சுவடே இல்லை. உதாரணமாக மத்திய, தென் சென்னை. இந்த இரு நாடாளுமன்ற தொகுதிகளில் ஒரு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் கூட கிடையாது.



இதன் அடிப்படையில்தான் 'கார்த்தி சிதம்பரம்' ஃபார்முலா ஒன்று ராகுலிடம் கொடுக்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதியிலும் காங்கிரஸிற்கு 2 சட்டமன்ற தொகுதிகள். அதனால் காங்கிரஸ் இம்முறை கேட்பது 78 இடங்கள். கூடவே ஆட்சியில் பங்கு.

இது தவிர காங்கிரஸிற்கு இன்னொரு பயமும் உண்டு. தொகுதி ஒதுக்கீடு செய்யும்போதும் திமுக கையே ஓங்கி நிற்கும். திமுக வெற்றி பெற்ற தொகுதியை காங்கிரஸிற்கு கொடுக்காது. அதிமுகவின் கோட்டைதான் காங்கிரஸிற்கு கிடைக்கும்.

இப்போது இருக்கும் 26 சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களின் எதிர்ப்பு அலையையும் சமாளிக்க வேண்டி வரும். இந்த நிலையில் காங்கிரஸ் வளரவேண்டுமானால் 78 அவசியம் என்பது அவர்கள் கருத்து.

காங்கிரஸில் தொகுதி, பதவி என்பது அரசாங்க அலுவலக வாயிலில் கட்டிய கழுதை கதைதான். அதற்கு பணி நீக்கமே கிடையாது. ஆனால், 25 வருடங்கள் கழித்து அது சூப்பிரண்டெண்ட் என்று கணைக்கும். அதே போல்தான் சிலருக்கு மட்டுமே அந்த பதவிகள். சட்டமன்றத்தை எடுத்துக் கொண்டால் பீட்டர் அல்போன்ஸ், யசோதா, வேலூர் ஞானசேகரன் பதவிக்கே பிறந்தவர்களாக இவர்களை காங்கிரஸ் சுவீகரித்துக்கொண்டுவிட்டது. இது தவிர முன்னாள், இந்நாள் எம்பிக்களின் வாரிசுகளுக்குத்தான் முன்னுரிமை.

இதை வைத்துக்கொண்டு இங்கே கட்சியை எப்படி வளர்ப்பது? பதவியிலிருப்பவர்களுக்கு கட்சியைப் பற்றி கவலையில்லை. தங்களின் சுயநிதிக் கல்லூரிகளையும், தொழில்களையும் காத்துக் கொள்ள, உறுப்பினர் அட்டையில்லாத திமுகவாக செயல்பட அவர்கள் தயார். அதை செய்து கொண்டும் இருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமான சத்திய மூர்த்தி பவனில் இருக்கும் மேஜை நாற்காலிகளுக்கு கூட கோஷ்டி உண்டு. அதேபோல் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களில் கூட்டணியிலிருக்கும் 'ஆளுங் கட்சி கோஷ்டி' எப்போதுமே உண்டு.

'கருணாநிதி குடும்பத்து ரூவா நோட்டுகளை காய வைக்க கூட தமிழ்நாட்டில நிலம் கிடையாது' என்று வயலில் வேலை செய்யும் பெண்கள் கூட பேச ஆரம்பித்துவிட்டார்கள் என்பதும் காங்கிரஸிற்கு தெரியும்.

'2 ஜி குற்றத்தின் கூட்டாளி' என்று சோனியா காந்தியையே பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறார் சுப்ரமணிய சாமி. இப்போது தொகுதியும் இல்லாமல், உண்மைக் குற்றவாளியின் தோளில் கை போட்டு வலம் வந்தால், கட்சி தாங்குமா என்கிற கவலையும் காங்கிரஸ் மேலிட இளைஞரான ராகுலுக்கு உண்டு.

இந்திய பொருளாதார ஸ்திரத் தன்மையே தமிழ்க கூட்டணியைப் பொறுத்தே அமையும் என்பதை காங்கிரஸில் சிலர் உணரத்



துவங்கிவிட்டார்கள்.

திமுக - காங். விவகாரத்தை அதிமுகவும் உன்னிப்பாக கவனித்து வருகிறது. உதிரிக் கட்சிகளுடன் உடன்பாடு செய்து கொண்ட ஜெயலலிதா, தேசீய கட்சிகளான இடதுசாரிகளுடம் இன்னும் உடன்பாட்டுக்கு வரவில்லை. ராஜ விசுவாசி வைகோ நிலையும் அதுதான். விஜய்காந்த் நிலையும் அங்கே இழுபறி.

காங்கிரஸின் முடிவுக்காக காத்திருக்கிறது தமிழக அரசியல் களம். இப்போது திமுக விற்கு வடக்கே சூலம். வடக்கே டெல்லியில் சூலத்தை எடுத்து கையில் எடுத்து நம் கையில் கொடுப்பார்களா அல்லது மார்பில் குத்துவாரா என்று பயம் கலந்த ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறது திமுக.

விருத்தாசல விருதகிரி விஜய்காந்தும் வீம்போடு காத்துக்கொண்டிருக்கிறார். காங்கிரஸின் கடைக்கண் அங்கேயும் இருக்கிறது.

அரசியல் என்பது பந்தயக் குதிரை. அதை ஓட்டுபவர் குறைந்த அளவு காயங்களோடு வெளிவரத் தெரிய வேண்டும் என்பது ராகுலுக்கு தெரியும் என்பது அவருக்கு நெருக்கமானவர்களின் கருத்து.

# வைத்திய துறையில் படிக்க வெளிநாடு செல்லும் கனேடியர்கள்




கனேடிய மாணவர்கள் வைத்தியத்துறையில் தமது பட்டப்படிப்பை மேற்கொள்ள பெருமளவில் வெளிநாடு செல்கின்றனர். இவ்வாறு செல்லும் மாணவர்களது எண்ணிக்கை கடந்த ஐந்து வருடங்களில் இரண்டு மடங்காகியுள்ளது.

CaRMS (Canadian Resident Matching Service) என்பது வெளிநாடுகளில் வைத்தியப்பட்டம் பெற்று கனடா திரும்பும் வைத்திய மாணவர்களுக்கு வைத்தியத் துறையில் பயிற்சி பெற ஒழுங்கு செய்து கொடுக்கும் நிறுவனம். வைத்திய மாணவர்களிடையே 2010 இல் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தி வெளியிட்ட அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நிறுவனத்தால் 2006 இல் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி 30 நாடுளிலுள்ள 80 பல்கலைக்கழகங்களில் கனேடியமாணவர்கள் வைத்தியத்துறைக்கு படித்துக்கொண்டு இருந்தார்கள். ஒவ்வொரு வருடமும் புதிய பல்கலைக்கழகங்கள் கனேடிய மாணவர்களை வைத்திய துறையில் படிப்பதற்கு அனுமதிக்கிறார்கள். இப்போது 3500 கனடிய மாணவர்கள் வெளிநாட்டில் வைத்தியதுறையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கனேடிய மாணவர்கள் வைத்தியதுறையில் படிப்பதற்கு செல்லும் முதலாவது இடமாக கரீபியன் (Caribbean) இருக்கிறது. அதை அடுத்து அயர்லாந்தும் (Ireland) பின்னர் போலாந்து (Poland), அவுஸ்ரேலியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளும் இருக்கின்றன.

அண்மையில் ஸ்கொட்லாண்ட் (Scotland) இல் இருக்கும் St. Andrews University வெளிநாட்டு மாணவர்களுக்காக வைத்தியத் துறையில் பட்டம் பெறவும் அதைத் தொடர்ந்து உலகிலேயே வைத்தியத் துறையில் மிகவும் மதிப்பு வாய்ந்த (Most Prestigious in the World) பல்கலைக்கழக-மான University of Edinburgh இல் வைத்தியத்துறையில் மேற்படிப்பு செய்து கொள்ளக்கூடியதுமான ஒரு புதியதுறை ஒன்றை தொடங்கியுள்ளது. இது வட அமெரிக்க மாணவர்களை கவருவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தாங்களே மாணவர்களது சொந்த நாட்டில் வைத்தியத்துறையில் பயிற்சி பெற இடமும் எடுத்துக் கொடுப்பார்கள் என இப்புதிய துறையைப்பற்றிய விளம்பரம் கூறுகின்றது. இப்புதிய துறையை தேர்ந்து எடுக்கும் மாணவருக்கு பல்கலைக்கழக கட்டணத்திற்கு மட்டுமே $250,000 டொலர் தேவைப்படும்.


St Andrews University- Scotland

வெளிநாடுகளில் வைத்தியத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பெரும்பாலும் அவர்களது பெற்றோர் பெருமளவில் பணஉதவி செய்கிறார்கள். சிலர் வங்கிக்கடன் எடுத்தும் படிக்கிறார்கள். கனடாவிலிருந்து வைத்தியத் துறைக்கு படிக்கச் செல்லும் மாணவர்களில் சிலர் கனடாவில் பாடசாலைக்கல்வியை முடித்துக்கொண்டு செல்கிறார்கள். ஆனால் பலர் கனடாவில் முதலாவது பட்டப்படிப்பை முடித்துவிட்டே செல்கிறார்கள். இவர்கள் கனடிய பல்கலைக்கழகங்களில் வைத்தியத் துறைக்கு படிக்க விண்ணப்பிக்காததிற்கான முக்கிய காரணம் தங்களுக்கு கனடிய பல்கலைக்கழகங்களில் வைத்தியத் துறைக்கான அனுமதி கிடைக்க மாட்டாது என்று எண்ணுவதேயாகும்.

கனேடிய பல்கலைக்கழகங்களில் வைத்தியத்துறைக்கு விண்ணப்பிப்பவர்களில் முதல் தரத்திலேயே 30 வீதமானவர்கள் மட்டுமே அனுமதி பெறுகிறார்கள். அமெரிக்கா பல்கலைக்கழகங்களில் வைத்தியத்துறைக்கு விண்ணப்பிப்பவர்களில் முதல் தரத்திலேயே 44 வீதமானவர்கள் அனுமதி பெறுகிறார்கள்.

இதனால் கனேடிய பல்கலைக்கழகங்களுக்கு திரும்பத்திரும்ப விண்ணப்பிப்பதிலும் பார்க்க வெளிநாடுகளில் சென்று வைத்திய பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம் என கனேடிய மாணவர்கள் நினைக்கிறார்கள். CaRMS இன் இந்த அறிக்கை இவ்வாறு வெளிநாடுகளில் சென்று வைத்தியத் துறைக்கு படிக்கும் மாணவர்களைப் பற்றி பின்வரும் தகவல்களை வெளியிட்டுளது. இம் மாணவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாகவும், வயதில் கூடியவர்களாக வும் (30 வயது) திருமணமாகாதவர் களாகவும் இருப்பதுடன் இவர்களின் பெற்றோர்களில் ஒருவராதல் வைத்தியராக தொழில் பார்ப்பவராகவும் இருக்கிறார்.

இவ்வாறு வெளிநாட்டில் வைத்தியத் துறையில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் பிரிட்டிஸ் கொலம்பியா மற்றும் ஒன்ராறியோ மாகாணத்தை சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். இந்த இரண்டு மாகாணத்திலிருக்கும் பல்கலைக் கழகங்களே கனடாவில் வைத்தியதுறைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களில் மிகக் குறைந்தளவு மாணவர்களை தெரிவு செய்கின்ற பல்கலைக்கழகங்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கனடாவில் வைத்தியத்துறையில் படிக்கும் மாணவர் வருடம் ஒன்றுக்கு $12,214 பல்கலைக்கழகக்கல்விக் கட்டணமாக செலுத்துகிறார். வெளிநாடுகளில் வைத்தியத்துறைக்கு படிக்கும் மாணவர்களது வருடாந்த பல்கலைக்கழக் கல்விக் கட்டணம் கனடிய டொலரில்

**அயர்லாந்து - $49,800**
**போலந்து - $14,191**
**கரீபியன் - $25,608**
**அவுஸ்ரேலியா - $42,334**
**மத்தியகிழக்கு - $16,336**

இதேவேளையில் கனடாவில் தொழில் பார்க்கும் வைத்தியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது குறுப்பிடத்தக்கது. 2004 ஆம் ஆண்டளவில் 60,612 வைத்தியர்கள் கனடாவில் வைத்திய தொழில் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இவர்களது எண்ணிக்கை 2008 இல் 65,440 ஆகியது. பின்னர் 2009 இல் 68,100 ஆகியுள்ளது.

கனடாவில் தொழில்பார்க்கும் வைத்தியர் களது சராசரி வயது 50 ஆகும். இதில் 550 குடும்ப வைத்தியர்கள் 75 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்கிறார்கள். 168 குடும்ப வைத்தியர்கள் 80 வயதிற்கும் 90 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். 2009 இல் கனடாவில் 500 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற விகிதத்தில் வைத்தியர்கள் இருந்தார்கள். ஆனால் 1979 இல் 667 பேரிற்கு ஒரு வைத்தியர் என்ற விகிதத்தில் வைத்தியர்கள் கனடாவில் இருந்தார்கள்.

நன்றி: *CaRMS*

**சிவ ஞானநாயகன்**
vlambaram@sympatico.ca






**நீங்கள் கனடாவுக்குப் புதியவரா? நீங்கள் வெற்றிபெற எங்களால் உதவ முடியும்**

உங்கள் தேர்ச்சிகளையும் அறிவையும் மிக விரைவாகப் பயன்படுத்தும் விதத்தைக் கற்றறிய நாடவும்: cic.gc.ca/new

**1 800 O-Canada** (1-800-622-6232)
TTY/ATS: 1-800-926-9105

பிரிட்டிஷ் கொலம்பியா, மனிற்றோபா, குயுபெக் மாகாணங்களில் சம்பந்தப்பட்ட மாகாண அரசாங்கங்களே மேற்படி சேவைகளை மேற்கொள்கின்றன.

**cic.gc.ca/new**

Citizenship and Immigration Canada
Citoyenneté et Immigration Canada
Canada

# அரச தொழில் காப்புறுதி திட்டத்திலிருந்து நிவாரணம் பெற தகுதியுடையோர்! யார், யார்?

***WHO IS ELIGIBLE TO GET BENEFITS FROM EMPLOYMENT INSURANCE***

## கனடிய தகவல் தொடர் 143

### செய்யும் தொழில் இழந்தால்?

அடுத்த தொழில் ஒன்றினை தேடி எடுக்கும் வரை ஒரு மனிதனுக்கு ஏற்படும் 'நிதி நெருக்கடி' என்ற ஆபத்துக்கு கைகொடுப்பதற்காக செய்யும் தொழிலில் இருந்து மாதா மாதம் ஒரு சிறு தொகைப் பணத்தினை கனேடிய அரசின் ஒரு காப்புறுதி திட்டத்திற்கு செலுத்தி கொண்டேயுள்ளோம். ஆனால்! இங்கு செய்யும் தொழிலை இழக்கும் சகலரும் இக்காப்புறுதி திட்டத்திலிருந்து நிவாரணம் பெறலாமா? அப்படி ஒரு காலம் அன்று கனடாவில் இருந்தது. அன்றைய காலம் தொழில் பறிபோனாலும் சில மாதங்களுக்கு பொற் காலமாகவே தொடர்ந்தது.

1990 ஆம் ஆண்டிற்கு முன்பு கனடாவில் குறிப்பிட்ட காலம்வரை ஒரு இடத்தில் செய்து வந்த தொழிலை விரும்பினால் உதறி எறிந்துவிட்டு வரலாம். தொழிற்சாலைகளிலும், உணவகங்களிலும் தொழில் செய்வோர் அடிக்கடி மேலதிகாரி களுடன் சினங்கொள்ளுதல், மோதல்கள் வந்தால் தொழிலை உதறிவிட்டு வரலாம். மறுநாள் அரச அலுவலகம் சென்று இக்காப்புறுதி திட்டத்திலிருந்து நிவாரணம் பெற மனு செய்தால் போதும். அடுத்த கிழமையிலிருந்து எடுத்து வந்த சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட வீதம் காசோலையாக தபாலில் வீட்டு முகவரிக்கு தேடி வரும். ஆனால் தற்போது இந்த நிலைமை மாற்றப்பட்டு விட்டது.

தொழில் செய்யும் இடத்தில்

- உற்பத்தி பற்றாக்குறை (Shortage of work)
- குறிப்பிட்ட காலத்துக்குரிய (Seasonal layoffs) தொழிலாளர்களின் குறைப்பு.
- மிகப்பெரியளவிலான (Mass layoff's) தொழிலாளர் குறைப்பு.

என்ற காரணங்களுக்காக செய்யும் தொழிலை இழக்க வேண்டியிருந்தால் மட்டும் இத்தொழில்காப்புறுதி திட்டத்தில் இருந்து நிவாரணம் பெறலாமே தவிர தாமாக ஏதாவது பிரச்சினை காரணமாக தொழிலை உதறித் தள்ளிவிட்டு வந்தவர்கள் இங்கு நிவாரணம் பெறமுடி யாது என்பது தொழில் செய்யும் பலரும் அனுபவரீதியாக அறிந்த ஒரு விடயமாகும். ஏனெனில் இங்கு கனடிய தொழில் காப்புறுதி சட்ட ஒழுங்குவிதிகளில் அரசு பலமுறை திருத்தங்கள், மாற்றங்களை செய்துள்ளது.

ஆனால் பின்வரும் நிலைகளில் ஏதாவது ஒன்றில் செய்யும் தொழிலை உதறி எறிந்துவிட்டு ஒருவர் வந்தால் இக்காப்புறுதி திட்டத்திலிருந்து நிவாரணம் பெறலாம் என்பதனை அறிந்து கொண்டீர்களா? அவையாவன பின்வருமாறு!

1. தங்களின் கணவர் அல்லது மனைவி அல்லது தங்கியிருக்கும் பிள்ளை ஒன்று தூரஇடத்திற்கு இடம் பெயர்ந்தால் அதன் காரணமாக செய்துவந்த தொழிலை விட்டு விலகினால் இத்தொழில்காப்புறுதியிலிருந்து பணம் பெறலாம்.

2. தொழில் செய்யுமிடத்தில் ஏதாவது தாங்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப் பட்டால், அல்லது ஏதாவது வழியில் துவேஷங்கள், பாகுபாடுகள் என்பதனை காட்டி துன்புறுத்துவது தொடர்ந்து அதன் காரணமாக தொழிலை விட்டு விலகவேண்டிய நிலைமை ஏற்பட்டு அந்த நிலைமை நிரூபிக்கப்படும்போது இத் தொழில் காப்புறுதியிலிருந்து பணம்பெறலாம்.

3. ஆபத்தான சூழ்நிலைகளில் வேலை செய்யவேண்டிய நிலைமை தொடருமாயின் அதனை நிரூபிக்கும் போதும் தொழில் காப்புறுதியிலிருந்து பணம்பெறலாம்.

4. சிலதொழில் செய்யும் இடங்களில் சிரமங்களை கொடுத்து தொழிலிலிருந்து துரத்தப் பார்ப்பார்கள். மேலதிக வேலை நேரம் தொழில் செய்யுமாறு மிரட்டுவார்கள். மேலதிக நேரம் வேலை செய்தமைக்கு ஊதியம் வழங்கியிருக்கமாட்டார்கள். இதனை நிரூபிக்கும்போதும் இத்தொழில் காப்புறுதியிலிருந்து பணம்பெறலாம்.

5. சம்பளத்தினை குறைத்து செய்யும் தொழில்களில் மாற்றங்களை ஏற்படுத்தியும் துன்புறுத்தப்படலாம். இந்நிலைமை ஏற்பட்டதனை நிரூபிக்கும் போதும் தொழில் காப்புறுதியிலிருந்து பணம்பெறலாம்.

6. நியாயத்திற்கு அப்பால் தேவையில்லாது வேலையிருந்து நிறுத்தினாலும் தொழில் காப்புறுதியிலிருந்து பணம்பெறலாம். (ஆனால் இந்த காரணம் நிரூபிப்பது என்பது சற்று கடினமானது. நியாயத்திற்கு அப்பால் என்பதனை வக்கீலின் உதவியுடனேயே நிரூபித்தல் வேண்டும்)

மேற்குறிப்பிட்ட காரணங்களை ஆதார பூர்வமாக விண்ணப்பத்தில் சமர்ப்பித்து அது சரியானதொரு நிரூபணமாக ஏற்றுக் கொள்ளப்படும் நிலைமை இருந்தால் இத்தொழில் காப்புறுதி திட்டத்திலிருந்து சில குறிப்பிட்ட நிவாரணம் பெற தகுதி யுடையவர்கள் ஆகலாம். (தொழிலிருந்து பெற்ற வருமானத்தில் 55% வரை ஆக கூடுதலாக கிழமைக்கு $468 டொலர் வரை 14 தொடக்கம் 45 கிழமைக்கு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு) மேற்குறிப்பிட்ட நிலையில் கனடிய அரசின் தொழில்காப்புறுதி திட்டத்திலிருந்து நிவாரணம் பெறுவது தவிர பின்வரும் நிலையில் ஒருவர் தமது தொழிலை செய்யமுடியாது இழக்க வேண்டிய நிலையில் இருந்தால் எதுவிதமான தடங்கலும் இல்லாது இக்காப்புறுதி திட்டத்திலிருந்து நிவாரணம் பெறலாம். அவையாவன பின்வருமாறு!

**1. பெண்களின் பிரசவ காலம், குழந்தை பிறந்த காலத்திற்குரிய காப்புறுதி நிவாரணம் (Employment Insurance Maternity & Parental Benefits)**

ஆக கூடுதலாக 65 கிழமைக்கு அதாவது சுமார் ஒரு வருடத்திற்கு மேல் இந்த நிலையில் இருப்பவர்கள் இத்திட்டத்தில் இருந்து நிவாரணம் பெற்றுக்கொண்டு இருக்கலாம்.

**2. நோய்வாய்ப்பட்டவர் அல்லது உடல் காயமுற்ற நிலையில் தொழில் செய்ய முடியாத நிலைமையில் உள்ளவர்களுக்கு காப்புறுதி நிவாரணம் (Employment Uninsurance Sickness Benefits)**

பதினைந்து கிழமைக்கு இக்காப்புறுதி திட்டத்திலிருந்து நிவாரணம் வழங்குவார்கள். நோய்வாய்ப்பட்டவர் அல்லது காயமடைந்த நிலையில் உள்ளார் என்பது மருத்துவ அத்தாட்சியுடன் நிரூபித்தல் வேண்டும். பதினைந்து கிழமைக்கு மேலும் தொடர்ந்து நோயிலிருந்து வேலை செய்யும் அளவுக்கு மீளவில்லையானால் சொந்தமாக காப்புறுதி முகவர் ஊடாக 'உடல் இயலாமை காப்புறுதி திட்டம்' (Disability Insurance) பெற்று வைத்திருந்தால் தொடர்ந்து நிவாரணம் பெறலாம்.

**3.மனிதாபிமான அடிப்படையில் ஏதாவது நிர்ப்பந்தம் காரணமாக தொழில் இழந்தவருக்கு வழங்கும் நிவாரணம். (Employment Insurance Compassionate Benefits)**

ஒரு குடும்பத்தில் உள்ள கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், மாமன், மாமியர் என எவராவது ஒருவர் மரணத்தினை தழுவும் நிலையில் நோய்வாய்ப்பட்டால் அல்லது மரணம் ஏதாவது நடந்து அதன் காரணமாக செய்த தொழிலை இழந்தால் இங்கு மனிதாபிமான அடிப்படையில் இக்காப்புறுதித் திட்டத்திலிருந்து நிவாரணம் பெறலாம்.

உறவுமுறைகளில் பாதிக்கப்பட்டவரின் நிலைமை என்பது மருத்துவ அத்தாட்சியுடன் நிரூபிக்கப்படல் வேண்டும். ஆறுகிழமைக்கு தொடர்ச்சியாக இங்கு இக்காப்புறுதி திட்டத்திலிருந்து நிவாரணம் வழங்குவார்கள்.

**4. மீன்பிடித்தொழில் வாய்ப்பு இழந்தவருக்கு வழங்கும் நிவாரணம் (Employment Insurance Fishing Benefits)**

கனடாவின் கடற்கரையோர மாகாணங்களில் இருந்து மீன்பிடி தொழில் செய்வோர் தங்களின் தொழில் வாய்ப்பு குறையும் போது இந்நிவாரணம் பெற தகுதி யுடையவர்கள் ஆகின்றனர்.

மேற்குறிப்பிட்ட நிலையில் நிவாரணம் குறிப்பிட்ட கிழமைக்கு பெற்று முடிந்துவிட்ட நிலையில் தொடர்ந்தும் தொழில் செய்யமுடியாத நிலைமையில், கையில் எதுவிதமான பணமோ அல்லது பணமாக மாற்றும் சொத்து எதுவும் இல்லாது அன்றாட வாழ்வுக்கு சிரமப்படுபவர்கள் செல்லவேண்டிய இடமே மாகாண சபைகளின் சமுக உதவி பணம் பெறும் இடமாகும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

**'தெற்காசிய மதியிறுக்க விழிப்புணர்வு மையம்'**
(South Asian Autiness Awareness Centre)

அலுவலகம் - 310 - 80, Acadia Ave., Markham, ON L3R 9V1
Phone - 416.824.8847 E.mail - info@saaac.org
Website - www.saaac.com Founder excutive director - Mrs. Geetha Moorthy

இந்நிறுவனம் கனடாவில் வசிக்கும் தெற்காசிய சமூகத்தில் குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களில் 'மதியிறுக்கம்' (Autism) என்னும் குறைபாட்டுடன் ஏராளமாக பிறந்து வளரும் பிள்ளைகளை ஒன்று சேர்த்து அவர்களின் வாழ்வில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களையும் இந்த சமூகத்தில் சுயாதீனமாக வாழவைப்பதற்காக 2008ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு லாபகரமற்ற தர்மஸ்தாபனம்.

இந்நிறுவனங்களின் ஆதரவுடன் இவர்களுக்கான பயிற்சிநெறித்திட்டங்கள் உளவியல் துறை, மருத்துவ துறைகளில் நிபுணத்துவம் பெற்ற தொண்டர்களினால் பின்வரும் இரு இடங்களிலும் நடத்தப்படுகின்றது.

1. ஸ்ரீ ஐயப்பன் ஆலயம், 635 Middlefield Road, Scarborough, ON
2. Markham Civic Centre, 101, Town Centre Court, Markham, ON

இங்கு தேவை: இவ் ஒருங்கிணைப்புக்கும் பணிகளுக்கும் நிதி தேவை! அதற்காக இரண்டாம் வருடமாக நடத்தப்படுவதே **''நிதி சேகரிப்பு இராப்போசன நிகழ்வு''** (***Fund raising gala dinner dance***)

காலம் - மார்ச் 05, 2011
இடம் - Platinum convention centre, 17, Vinyl Court, Woodbridge, ON L6R 3G8
விலை - ஒரு நபருக்கு $50 டொலர் மட்டுமே Raffle ticket $5 டொலர்.

இங்கு தேவை: பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் வாழ்வுக்கு உங்கள் கை கொடுப்பு! தங்கள் உதவிகள்!
தங்கள் ஆளுமைக்கு ஏற்ற வழிகளில் தொடரட்டும் உதவிகள்!

தொடர்புகளுக்கு - கீதா - 416.824.8847 றோகன் ஜோர்ஜ் - 647.202.5404
ஜோன் சபாரத்தினம் - 416.450.1690

ஏனெனில் இந்த பாதிப்பின் துடிப்பில் துயரும் தமிழ் குடும்பங்கள் ஏராளம்! இவ்விழிப்புணர்வும் சேவையும் கனடாவில் உள்ள தமிழர்களில் ஆரம்பித்து தாயக மண் வரை தொடரவேண்டும்.

# மாமி ஆமியா? - 3

## ஓடும் நீர் உறைவதில்லை 19 இரண்டாம் பாகம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு,

ஒரு பெண்ணின் வாழ்க்கை மகள் என்பதிலிருந்து ஆரம்பித்து மருமகள், மனைவி, தாய், மாமி, அம்மம்மா அல்லது அப்பம்மா எனப் பல பாத்திரங்களாக அமைவதுடன் ஒவ்வொரு பாத்திரமும் வெவ்வேறு வாழ்வியல் நிலைகளில், படிமுறைகளில், உள்ளும் புறமுமாகச் சேகரித்துக்கொண்ட அனுபவங்களின் பிரதிபலிப்பாக அமைகின்றது. இங்கு மாமி என்ற பாத்திரம் மட்டுமே எனது கவனத்துக்கு எடுக்கப்படுவதால், கூறப்படும் கருத்துக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு பெண்ணின் முழுமையான மனோபாவ வெளிப்பாடாகக் கருதப்படாமல் மாமி என்ற பாத்திரத்தின் அடிப்படையில் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இக்கட்டுரை பல பகுதிகளாக வெளிவர இருப்பதனால் எந்த ஒரு பகுதியையும் தவற விடாதீர்கள். அது மட்டுமன்றி இக்கட்டுரையின் இறுதிப் பகுதி இக்கட்டுரை பற்றிய உங்களது கருத்துக் களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க இருப்பதால் உங்கள் வினாக்களை அல்லது ஏற்கெனவே இக்கட்டுரையில் கூறப்பட்ட விடயம் பற்றிய உங்கள் சுயபார்வையை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதி உங்கள் பெயரைக் குறிப்பிடலாமா இல்லையா என்பதையும் குறிப்பிட்டு kgmaster54@hotmail.com எனும் மின் அஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள். கடந்த இதழில் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிவிடுமோ என்ற பயம் ஏற்படும்பொழுது அது தாயின் வடிவில் வெளிப்படுத்தப்படாமல் மாமியின் வடிவில் வெளிப்படுத்தப்படுகின்றது என்றும் இதற்கு அடிப்படைக் காரணம் தாய்மையின் முக்கியமான ஒரு பலவீனம் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இந்த இதழில் அந்தப் பலவீனம் பற்றிய பார்வையைச் செலுத்துவோம்.

## தாய்மையின் பலவீனம்

தாய்மையில் இருக்கும் மிக முக்கியமான பலவீனம் என்பது ஒட்டுமொத்தமான சுயநலம் தான். ஒட்டுமொத்தமான சுயநலம் எனக் கூறும்போது ஒப்பீட்டு ரீதியில் இந்தத் தாய்மையின் சுயநலத்தை மிஞ்சக்கூடிய சுயநலம் கிடையவே கிடையாது. ஏனெனில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாம் ஒரு விடயத்தில் முழுமையான சுயநலத்தைக் கொண்டிருந்தாலும் காலப் போக்கில் அதன் மீது ஒரு தளர்ச்சியைக் கையாளுவோம். ஆனால் தாய்மையின் சுயநலம் இந்தத் தளர்ச்சிக்கு அல்லது விட்டுக் கொடுப்புக்கு இடமளிப்பதில்லை. இந்தச் சுயநலத்தின் விளைவாகத் தான் நாம் எல்லோருமே பிறப்பில் இருந்து எமது எண்ணங்களை வெளிப்படுத்தும் தகுதியைப் பெறும் வரை முழுமையான பாதுகாப்பைப் பெறுகின்றோம். இந்தச் சுயநலம் தான் என்ன? தனது குழந்தையின் ஒட்டு மொத்தமான உடைமை யும் உரிமையும் தனக்கு மட்டுமே சொந்தமானது என்ற உள்ளுணர்வு தான் அது.

KG Master-kgmaster@rogers.com

ஒரு பெண்ணின் அதி உச்சமான சுய பாதுகாப்புக் காலம் என்பது தன்னுள் உயிரொன்று உருவாகியதில் இருந்து தாய்ப்பால் ஊட்டும் காலப் பகுதி வரை இருக்கும். இந்தக் காலப் பகுதிக்குள் தனக்கு ஏற்படும் எத்தனையோ உடல் சார்ந்த பாதிப்புக்களை மருத்துவத்தின் உதவியை நிராகரித்துக் குழந்தையின் நலத்துக்காகத் தானே தாங்கிக் கொள்ளும் தன்மை தாய்மையின் சிறப்புக்களில் ஒன்றாகும். இவ்வாறு குழந்தைக்காகத் தன்னை அர்ப்பணிக்கும் தாய் அதன் உடைமையை யும் உரிமையையும் தனதாக்கிக் கொள்வது இயல்பானது தான். ஆனால் இந்த இயல்பு நிலையில் தளர்ச்சியும், மாற்றமும், விட்டுக்கொடுப்பும் அவசியம் என்பதை ஒரு தாய் உணர மறுப்பது அல்லது ஏற்க மறுப்பது தான் மாமி வடிவத்திலான தாய்மையின் மிகப் பெரும் குறைபாடாகும். தானாகி, தன்னில் உருவாகி மண்ணில் வந்த தனது குழந்தையின் ஒட்டுமொத்த உடைமையையும் உரிமையையும் ஒரு தாய் தனது வாழ் காலம் வரை எதிர்பார்க்கும் போது இன்னொருவர் அதில் பங்கு கொள்வதை அனுமதிக்க முடிவதில்லை. இதனால் தான் தனது குழந்தைகள் தமக்கென்றொரு குடும்பத்தை அமைக்கும் போது தனது குழந்தைகள் மீதான உடைமையிலும் உரிமையிலும் மற்றவர்கள் பங்கு கொள்வதை அனுமதிக்க முடிவதில்லை. இந்த அனுமதி மறுப்பென்பது இரண்டு வழிகளால் பிரயோகிக்கப்படு கின்றது. ஒன்று தானே நேரடியாக மறுப்பது. இரண்டாவது மற்றவர்களூடாக, குறிப்பாகத் தனது குழந்தைகளூடாக மறுப்பது. இந்த உரிமை மறுப்பு ஒருபுறத்தில் தாய்மையின் ஒட்டுமொத்தமான சுயநலனாக இருந்தாலும் மறுபுறத்தில் மனித சமுதாயத்தினால் முற்று முழுதாக தெளிவுபடுத்தபடாத ஒரு உண்மையும் காரணமாகும்.

உண்மையில் உரிமை என்பது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குக் கைமாற்றம் செய்யப்பட வேண்டியதே. ஒன்றை நாம் சொந்தமாக்குவதற்கு அதன் முன்னைய உரிமையாளர் அதன் உரிமையை எமக்குக் கை மாற்றம் செய்தல் வேண்டும். அதாவது முன்னைய உரிமையாளர் அதன் மீது உரிமை கொண்டிருந்தால் மட்டுமே அந்த உரிமையை எமக்குக் கைமாற்றம் செய்ய முடியும். உரிமை மாற்றப்படாத உடைமை அதன் உரிமையாளரைத் தவிரே எவருக்குமே சொந்தமானதல்ல. குழந்தைகளை யார் உரிமை மாற்றம் செய்தார்கள்? நாம் குழந்தைகளைப் பெற்றோம். தந்தவர் யார்? ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை எதாவது உண்டா? இல்லையே! உரிமை மாற்றப் படாத உடைமை தானே குழந்தைகள். தனது குழந்தை என்று தாயும், தனது கணவன் என்று மனைவியும், தனது மனைவி என்று கணவனும் உரிமைப் போராட்டத்தை நடத்துவதற்குக் காரணம் என்ன?

இயற்கையின் படைப்புக்கள் அனைத்தும் இலவசமானவையாக இருந்தும் கூட அவற்றைத் தனக்குச் சொந்தமாக்குவதில் தேர்ச்சி பெற்றவன் மனிதன். ஒரு உயிரை மனிதனால் உருவாக்க முடியாது. மனிதனின் படைப்புக்கள் அனைத்தும் சடப்பொருள் களின் உருமாற்றம் மட்டுமே. இவ்வாறான படைப்புக்களில் அவன் தனது உரிமையை நிலைநாட்டுகின்றான். இதற்குச் சட்டங்களும் சம்பிரதாயங்களும் துணை போகின்றன.

அதுமட்டுமன்றி தனது ஆக்கங்கள் அல்லாத ஆடு, கோழி, மான், மரை, நிலம், வானம், கடல் எனும் இயற்கையின் கொடுப்பனவுகள் எவையாயினும் முதன் முதலில் கைப்பற்றுவதன் மூலம் சொந்தமாக்கி விடுகிறான். இவை எவையும் இயற்கையால் உரிமைமாற்றம் செய்யப் பட்டவையல்ல. ஆனால் நாம் முழுமையான உரிமை கொண்டாடுகின்றோம்.

இந்த மனோபாவத்தில் முற்று முழுதாக ஊறிப்போனவன் தான் மனிதன். தாயும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு குழந்தை அதன் தாயின் முதலாவது உடைமை. அதனால் தாய் உரிமை கொண்டாடு கின்றாள். இது இயல்பு ரீதியான உரிமை மட்டுமே. சட்ட ரீதியானதல்ல. இதனால் தான் குழந்தைகள் திருமணமாகும் போது பெற்றோர்கள் உரிமைமாற்றம் செய்வ தில்லை. செய்யவும் முடியாது. மாறாக பெற்றோர்கள் அல்லாதவர்கள் சாட்சிக் கையொப்பம் இடுகிறார்கள். இங்கே ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனத்தில் கொள்ளல்வேண்டும். இயல்பு ரீதியான உரிமையும் சட்ட ரீதியான உடைமையும் தான் மனிதன். மனிதனின் வாழ்வியல் நகர்வென்பது உடைமை மாற்றம் மட்டுமே. குழந்தை என்ற உடைமையிலிருந்து அது திருமணமாகும் போது இன்னொருவரால் கணவனாக அல்லது மனைவியாக உடைமை கொள்ளப்படுகின்றது. உண்மை யில் இந்த உடைமை மாற்றம் முற்றிலும் முழுமையானதே. ஆனால் ஒரு தாய்க்கு இந்த முழுமையான உடைமை மாற்றத்தைப் புரிந்து கொள்வதற்குப் பாசம் எனும் சுயநலம் ஒரு தடைக்கல்லாக இருப்பது துர்அதிர்ஷ்டவசமானதே. இதனால்தான் இந்த உடைமை மாற்றத்தில் பங்கு பெறுபவர் களது ஒருங்கிணைந்த புரிந்துணர்வு அடிப்படைத் தேவையாக அமைகின்றது.

அடுத்த இதழில் மாமியின் வடிவில் வெளிப்படுத்தப்படும் தாயின் தாழ்வு மனப்பான்மையுடன் தொடருவோம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலி யிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

அமைதியின் குரல் - Words of Peace
அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி
1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்
On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221
On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# கலித்தொகை - நாடகக் காட்சிகள்

3. பண்டைத் தமிழர் கண்ட நிலப்பகுப்பில் வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் எனப்படும். மருதம் நீர்வளமும் நெல்வளமும் மிகுந்த செல்வ நிலப்பரப்பு. அதன் மக்களின் அக ஒழுக்கங்களில் ஊடல் அடிக்கடி நடைபெறும். ஊடலையும் அதற்கான காரணங்களையும் காட்டும் பாடல்களை கொண்டுள்ளது மருதக்கலி. அதிலுள்ள 29ஆம் பாடலில் இப்படி ஒரு காட்சி சித்திரிக்கப்படுகின்றது:

பாடலில் மன்னன் ஒருவனின் அரண்மனையில் குற்றேவல் செய்யும் இருவர் பாத்திரங்களாகின்றனர். வித்தியாசமான பாத்திரங்கள். பெண் கூனி, ஆண் குறளன். இவர்கள் அவ்வரண்மனையின் மறைவிடம் ஒன்றில் கூடி இன்பங் காண விரும்பினர். இவர்களுக்கிடையில் நடந்த உரையாடல் எளிமையாகவும் மிக இயல்பாகவும் நகைச்சுவை மிகுந்ததாகவும் உள்ளது. புலவர் மருதனிளநாகனாரின் பாடல் இது:

என்னோற்றனை கொல்லோ நீருள் நிழற்போல்
நுடங்கிய மென்சாயல் ஈங்குருச் சுருக்கி
இயலுவாய் நின்னோடு உசாவுவேன் நின்றீத்தை;

அன்னையோ,
காண்டகை யில்லாக் குறள்நாழிப் போழ்தினான்
ஆண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவல் என்று விலக்கினை நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று;

மாண்ட,
எறித்த படைபோல் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிறையோரால் என்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் பொறீஇ நிறுக்கல்லேன்
நீநல்கின் உண்டென் உயிர்;

குறிப்புக்காண்,
வல்லுப் பலகை எடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
இல்லத்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டிர் உளர்மன்னோ கூறு;

நல்லாய்கேள்,
உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லின் நெஞ்சூன்றும் புறம்புல்லின்
அக்குளுத்துப் புல்லலும் ஆற்றேன் அருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது;

போசீத்தை,
மக்கள் முரியேநீ மாறினித் தொக்க
மரக்கோட்டஞ் சேர்ந்தெழுந்த பூங்கொடி போல
நிரப்பமில் யாக்கை தழீஇயினர் எம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமால் தொக்க
உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்புக் கழிந்தாங்கே
யாம்வீழ்தும் என்றுதன் பின்செலவு முற்றியாக்
கூனிகுழை யுங்குழைவு காண்;

யாமை எடுத்து நிறுத்தற்றால் தோளிரண்டும் வீசி
யாம்வேண்டேம் என்று விலக்கவும் எம்வீழுங்
காமர் நடக்கு நடைகாண் கவர்கணைச்
சாமனார் தம்முன் செலவு காண்க;



ஓஒகாண், நம்முள் நகுதல் தொடீஇயர் நம்முணாம்
உசாவுவங் கோனடிதொட் டேன்;

ஆங்காக,
சாயலின் மார்ப அடங்கினேன் ஏஎ
பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாமை வேண்டுவல்
தண்டாத் தகடுருவ வேறாகக் காவின்கீழ்ப்
போத ரகடாரப் புல்லி முயங்குவோம்
துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை
முகடுகாப் பியாத்துவிட் டாங்கு.

இதன் காட்சி இவ்விதம் விரிகிறது:

(குறளன் இருந்த பக்கமாகக் கூனி ஏதோ வேலை செய்பவள் போல வருகின்றாள்.)

குறளன்: ஏ! நீரிலே தெரியும் நிழல் போல நெளிந்த சாயலோடு உருவங் குறுகிச் சுருங்கி நடக்கின்ற கூனீ! நில்! உன்னோடு ஒன்று பேசவேண்டும். நான் உன்னுடன் பேசுவதற்கு நீ என்ன தவஞ் செய்தனையோ?

கூனி: கண்ணாற் பார்க்கமுடியாத குறளனாய்க் கெட்ட நேரத்திலே பறவைக்குப் பிறந்த பறளாய மகனே! நீ என்னை விரும்பிப் போகவிடாது தடுத்தாய். உன்னைப் போன்ற குறளாயிருப்பவர் என்னைத் தீண்டப் பெறுவாரோ?

குறளன்: சிறந்த கலப்பையிலிருந்து செய்யப்பெற்ற வாள்போல ஓரிடம் கூனாய்ப் புறப்பட்டு ஓரிடம் முன்னே வளைந்து முறித்துவிட்டாற் போன்ற நிறைந்த அழகாலே தாங்கொணாக் காம நோயை என்னிடத்திலே உண்டு பண்ணினாய். நான் பொறுத்திருக்க மாட்டேன். நீ மனம் வைத்தால் நான் உயிர் வாழ்வேன். உன் கருத்தைக் கூறு.

கூனி: (தனக்குள் அவன் மனக்குறிப்பை எண்ணி வியந்து) மகளிரைக் கூடும் முறையைக் கல்லாத குறளனே! மக்கள் நடமாடாத உச்சிப் பொழுதிலே என்னை உன் இல்லத்துக்கு வா என்று அழைப்பதற்கு நான் என்ன உன் மனைவியா? உனக்குப் பல பெண்கள் இருப்பாரோ? சொல்!

குறளன்: நல்லாளே! வாள்போன்ற வாயையுடைய கொக்கை உரித்தாற்போன்ற வளைவை உடையவளே! நான் சொல்வதைக் கேள். உன்னை நான் மார்பிடத்தே புல்லுவே னாயின் என்னுடைய நெஞ்சிலே அக் கூன் ஊன்றும்; முதுகிலே புல்லுவேனாயின் முதுகிற் கூன் கூச்சத்தை உண்டுபண்ணும்; ஆதலால், கூடுதலும் செய்யமாட்டேன், தழுவுதலும் செய்யமாட்டேன். சும்மா பக்கத்திலே கொஞ்சம் தழுவும்படியாக வா.

கூனி: சீ, கெட்டவனே! அப்பாலே போ!

(அவன் பின்னரும் அவளைத் தழுவுவான்போல் அணுகவும்-)

மக்களிற் பாதியானவனே! இவ்வெண்ணத்தை இனி நீ கைவிடு! நெஞ்சமே!

என்னை மனதார விரும்பிக்கூடிப் பாதுகாக்கக்கூடியவர் பலர் இருப்பர்.

அப்படியிருக்க இப் பரத்தைமகன் பக்கத்திலே முயங்க அழைக்கின்றானே! (என்று

அவன் கேட்பக் கூறிப் பின்னும் - ) குறுகிய மகனே! உழுத்தம் பணியாரத்தினும்

பார்க்கத் துய்க்கத் தகுந்த கூன்சாதியினுடைய பிறப்பு உன்னிலும் தாழ்ந்ததோ?

குறளன்: (அது கேட்டு நான் உன்னை விரும்பினேன் என்று கூறி அவள்பின்னே சென்றான்.
கூனி அதற்கு உடன்படாததுகண்டு அவள் கேட்கும்படியாக-)

நான் பக்கத்தில் நிற்கவும் இவள் எட்டத்தே செல்வதை நெஞ்சமே பாராய்...

கூனி: நான் விரும்பாது விலக்கவும் ஊருகின்ற ஆமையை எடுத்து நேரே நிறுத்தினாற்போல நிமிர்ந்து தோள் இரண்டையும் விலாவுக்குள்ளே வீசி என்னைத் தொடருகின்ற காமனார் நடக்கும் நடையை நெஞ்சே பாராய்!

குறளன்: ஒருவரை ஒருவர் தழுவுதற்குக் காரணமான சாமனார் தமையனாகிய காமனார் நடையை இதோ நீ பார்! (நடந்து காட்டுகின்றான்.)

கூனி: ஓ! ஓ! நெஞ்சமே இவன் நடையைப் பாராய்!

குறளன்: நம்முள்ளே நாம் கூடி மகிழ்தற்குத் தகுந்த இடம், நேரம் முதலியபற்றிக் கலந்து பேசுவோம் வா. இனி உன்னை இகழ்ந்து பேசமாட்டேன். அரசன்மேல் ஆணை!

கூனி: அப்படியேயாகுக! மென்மையால் இனிய மார்பனே! நானும் உன்னை இகழ்ந்து இனிப் பேசமாட்டேன். அரண்மனைப் பக்கம் கூடினாற் பலரும் எம்மைக் கண்டு பேயும் பேயும் துள்ளுகின்றன என்று நகைப்பர். ஆதலால், அமையாத பொற்றகடு போலும் உருவத்தினை உடையவனே! அரண்மனைக்கு வெளியேயுள்ள சோலைக்கு வா. அங்கு இருவரும் இறுகப் புல்லித் தழுவுவோம்.



கவிஞர் வி. கந்தவனம்

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# நினைவாற்றல் - MEMORY - 5

கட்டுரையாசிரியர் இந்த இதழில் மனித மூளை பற்றிய பல பயனுள்ள தகவல்களை எடுத்து வருகின்றார். இந்தக் கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களையும் அறிய விரும்புகின்றோம்.

அன்பான வாசகர்களே!

நினைவாற்றல் நுட்பங்கள், பாடங்களை மீட்டல் வழிமுறைகள், மன வரைபடம் (Mind map) போன்ற விடயங்களைப் பற்றி எடுத்துக் கூறப்பட்ட இந்தத் தொடர் கட்டுரையில் மூளையின் உறுப்புக்களைப் பற்றி கூறு போடப்படுகின்றதே என்று அதிசயிக்கின்றீர்களா? இந்தக் கட்டுரையில் எத்திசை நோக்கிச் செல்கின்றோம் என்று சிந்திக்கின்றீர்களா? பொறுத்திருங்கள் வாசகர்களே! 'சோழியன் குடும்பி சும்மா ஆடுமா' என்ற முதுமொழிக்கேற்ப நாம் மூளையை கூறு போடுவதும் நினைவாற்றல் விடயங்களை தொடர்ந்து ஆராய்வதற்கான அடித்தளத்தைப் பலமாகப் போடும் ஒரு முயற்சியே. மூளையின் தொழிற்பாடு, மூளை பற்றிய புதிய ஆய்வுகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொண்டு மூளையின் தொழிற்பாட்டை ஓரளவு புரிந்தவர்களாக எவ்வாறெல்லாம் மேலும் நினைவாற்றல் வலுவை அதிகரிக்கலாம் என்று தொடர்ந்து ஆராயவிருக்கின்றோம். இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து வாசியுங்கள். திரும்பத் திரும்ப வாசித்து முக்கிய விடயங்களை மனதில் நிறுத்திக் கொள்ளுங்கள். இதனையும் ஒரு நினைவாற்றல் பயிற்சியாக எடுத்துக் கொள்ளுங்கள். இந்தக் கட்டுரைக்கும் ஒரு மன வரைபடம் (மைன்ட் மப் mind map) கீறிக்கொள்ளலாமே. எமது சமூகத்தில் படிப்பில், சிந்தனையில் குறைவாக இருக்கும் ஒருவரைப் பார்த்து 'என்ன உனது மூளையில் களிமண்ணா' என்ற உளவியல் தாக்கத்தைக் கொடுக்கும் பழக்கம் உண்டு. ஆனால் மூளை எவ்வளவு சிக்கலானதும், நுட்பமானதுமான தொழிற்பாட்டைக் கொண்டுள்ளது என்ற விடயம் ஆச்சரியத்திற்குரியதே. இறைவனின் அற்புதப் படைப்பின் எடுத்துக் காட்டாக மூளை விளங்குகின்றது. இவ்வாறான மூளையில் ஒரு பாதிப்பு ஏற்படுவது எவ்வாறான சிக்கல்களைக் கொடுக்கும் என்பதை எம்மால் உணரமுடிகின்றது. ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்குள்ளாகும் உறவுகளுக்கு முழுச் சமூகமே அன்போடு உதவ வேண்டிய அவசியத்தையும் இந்த நேரத்தில் நாம் மனதில் நிறுத்திக் கொள்வோம். மூளைக் குறைபாடுடைய உறவுகளைப் பேணிப் பராமரித்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை அளிப்பதிலும், ஆரம்ப நிலையிலேயே தேவையான உளவளத் துணையை அளிப்பதிலும் நாம் வாழும் சமூகத்தில் போதிய கட்டமைப்புக்கள் இல்லாமல் இருப்பது மிகவும் வேதனைப்பட வேண்டிய விடயமே.

'வெள்ளம் வரமுன் அணைபோடுதல்' போல மூளையில் பாதிப்பு வராமல் எமது மூளையை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டியதும் மிகவும் அவசியமாகின்றது. அடிப்படையில் மூளைக்கு ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளல், போதிய நித்திரை, மூளைக்கு தேவையான பயிற்சி களை மேற்கொள்ளல், புதிய விடயங்களைக் கற்றல் போன்றவை முக்கியமானவை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் நினைவாற்றல் குறைபாடுகள் சிறிதளவு ஏற்படுவதை உணருகின்ற போது ஆரம்ப கட்டத்திலேயே அதனைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளில் நாம் இறங்கிவிட வேண்டும். இந்த விடயத்தில் காலம் தாமதிக்கவே கூடாது.




கடந்த இதழில் மூளையின் உறுப்புக்களைப் பற்றி எடுத்துக் கூறப்பட்ட விடயங்களை ஒருமுறை அசைபோட்டுக் கொள்வோம். மூளையில் வலது அரைக்கோளம் (right hemisphere), இடது அரைக்கோளம் (left hemisphere) என இரு பிரிவுகள். இவற்றை இணைப்பது கோர்ப்பஸ் கலோசம் (corpus callosum). அரைக்கோளங்களின் உள்ளே மூன்று பிரிவுகள் (regions) மூளைத்தண்டு (brain stem), சிறுமூளை (nrungypak; cerebellum), செரிபரம் (cerebrum). இந்த செரிபரம் (cerebrum) நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன: முன் மடல் (frontal lobe), சுவர் மடல் (parietal lobe), பக்க மடல் (temporal lobe-side), பிடரி மடல் (occipital lobe-back). இவை ஒவ்வொன்றுக்கும் குறிக்கப்பட்ட திறமைகள் (talents) உள்ளன. செரிபரத்தைச் (cerebrum) சுற்றி மடிப்புக்களைக் கொண்ட படலம் செரிபரல் கோட்டக்ஸ் (cerebral cortex). இதுதான் மூளையின் கட்டுப்பாட்டு நிலையம் (control centre). கடற்குதிரை வடிவத்தில் மூளைப் பின்மேடு (கிப்போகம்பஸ் hippocampus) உண்டு. இது நீண்ட காலத்திற்கான நினைவாற்றலுக்கு (long term memory) முக்கியமானது. இதன் உள்ளே உள்ள அமிக்டல (amygdala) பயப்படும் உணர்வுகள் ஏற்படும் இடமாக உள்ளது. மூளை எங்கும் நரம்பணுக்கள் (நியுரன்ஸ் neurons) எனப்படும் எண்ணற்ற மூளைக் கலங்கள் உள்ளன.

மூளை விஞ்ஞானத்தில் (brain science) ஒரு புரட்சி நடைபெறுகிறது எனலாம். அந்தப் புரட்சி என்னவென்றால் 'நீங்கள் பிறந்த மூளையுடன்தான் இருப்பீர்கள் என்ற நிலை மாறி உங்கள் பட்டறிவோடு ஒரு பிளாஸ்டிக் (plastic) போல் மாறுகின்றது' என்ற உண்மை ஆய்வுகளின் மூலம் தெரியவந்ததே ஆகும். மூளை விஞ்ஞான ஆய்வுகளில் "FMRI (Functional Magnetic Resonance Imaging)" என்ற உபகரணம் பெரும் பங்கை வகிக்கின்றது (Figure 1). இந்த உபகரணத்தால் முப்பரிமாண உருவங்களை (three dimensional images) மனித உடலுக்கு எந்தவித ஆபத்தையும் விளைவிக்காது உருவாக்க முடியும். மேலும் "near–Infrared Spectroscopy" என்ற தொழில்நுட்பமும் மூளை விஞ்ஞானக் கல்வியில் பாவிக்கப்படுகின்றது. இவ்வாறான தொழில் நுட்பங்களும், பல ஆய்வாளர்களின் கடுமையான உழைப்பும் அண்மைக் காலத்தில் ஏற்படும் புரட்சிக்கான முக்கிய காரணிகளாகக் கூறிக்கொள்ளலாம். ஒரு கணினியின் (computer) தொழிற்பாட்டுடன் மூளையின் செயற்பாட்டுக்குள்ள நெருங்கிய தொடர்பும் கூட அண்மைக்காலத்தில் ஏற்பட்ட தெளிவான ஆய்வுப் புரட்சிகளுக்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கும் என்பது எனது எண்ணக் கருத்தாகும். இது பற்றி நாம் விரிவாக பின்பு ஆராய்ந்து கொள்வோம்.

ஆண், பெண் இருபாலார்க்கும் வலது அரைக்கோளம் பார்வைக்குரிய அல்லது பரப்பு சம்மந்தப்பட்ட தகவல்களை (visual and spatial information) பரிமாற்றம் (process) செய்யும். இதன் காரணமாக மூளை ஒரு விடயம் பற்றிய மேலெழுந்த வாரியான பெரிய படத்தை உள்வாங்கிக் கொள்ளும். பெண்களின் மூளையில் இரண்டு அரைக்கோளங்களும் ஒரே மாதிரியாக உள்ளன. ஆண்களில் வலது புறம் உள்ள முன் மடல் (frontal lobe) இடது பக்கத்தில் உள்ளதை விடப் பெரியது. ஆனால் ஆண்களில் இடது புறம் உள்ள பிடரி மடல் (occipital lobe-back) வலது பக்கத்தில் இருப்பதை விடப் பெரியது. இடது அரைக்கோளம் ஒரு விடயம் சம்பந்தமான அதிக விபரங்களைக் (details) கவனிக்கும். குறிப்பாக மொழிபோன்ற நேராக ஒழுங்கு படுத்தப்பட்ட (linearly arranged) விடயங்களைக் கவனிக்கும். நீங்கள் ஏதாவது புதிய விடயங்களைக் கற்கும் பொழுது உங்களின் அரைக்கோளம் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். குறிக்கப்பட்ட விடயம் அல்லது அறிவு வழமையானதாக (usual) மாறி அதனை மீளக் கற்கும்போது இடது அரைக்கோளம் அதிக பங்கை வகிக்கின்றது. ஒவ்வொரு அரைக்கோளத்திலும் உள்ள நான்கு வகையான மடல்களைப் (lobes) பற்றி எமக்குத் தெரியும். இவை ஒவ்வொன்றுக்கும் உள்ள தனித்துவமான திறமைகள் ஒரு மனித மூளையின் செயற்பாட்டில் மிகவும் முக்கியமானவை. இவற்றின் செயற்பாட்டை விளக்கிக் கொள்வதற்காக ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இந்த நேரத்தில், வாசகர்களாகிய நீங்கள் தொலைந்து விடாமல் என்னுடன் பயணிக்கின்றீர்கள் என நம்புகின்றேன். அதாவது எனது கட்டுரையை மன ஒருமையுடன் வாசிக்கின்றீர்கள் என



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# மகாவம்சத்திலிருந்து சிங்கள தேசியவாதத்தை நோக்கி - 4

இப்போது ஆரியக் கோட்பாடானது சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தின் பிரக்ஞையில் நன்கு பதிந்து விட்டிருக்கிறது. அதற்கும் அப்பால் அனைத்துலகத் தொடர்பாடல் களிலும் இக்கோட்பாடானது கணிசமான ஆதிக்கத்தைச் சராசரி மனங்களிலே ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை அளித்தது என்று கூறுமளவுக்கு கட்டுக்கடங்காமல் போய்விட்டிருந்தது நிலமை.

அந்நியர்களின் மதப் பண்பாட்டு மேலாதிக்கத்திலிருந்து சுதேசியத்தைக் காப்பது என்று ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமே பௌத்த மறுமலர்ச்சி இயக்கம். ஆனால் அது இறுதியில் சிங்களத் தேசியம் என்ற உணர்வையூட்டுகின்ற வெற்றிகரமான கருவியாக மாற்றமடைந்துள்ளது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். சிறிலங்காவின் 20ஆம் நூற்றாண்டு வரலாறு பல்வேறு வகைகளி லான உள் முரண்பாடுகளையும் முறியடித்து அனைத்துச் சிங்கள மக்களையும் அரவணைக்கின்ற, ஒரு குடையின் கீழ் அணிதிரள வைக்கின்ற சிங்களத் தேசிய வாதமாக மாற்றமடைந்துள்ளது என்பதாகவே வாதத்தைத் தொடருகின்றார் கட்டுரையாளர் குணரட்ணா.

தனிமனித மீட்சிக்காகப் போராடுவது, இந்துக்களது பல தெய்வ வழிபாடுகளை உள்ளடக்கியதே மரபுசார் பௌத்தம். ஆனால் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் கிறீஸ்தவம் தன்னை விஸ்தரிப்புச் செய்வதற்காகக் கையாண்ட கட்டுமானங் களின் பல்வேறு கூறுகளை உள்வாங்கிக் கொண்டும், அதன் பாதிப்புக்களின் ஊடாகவும் தன்னை நவீன காலத்துக்குரிய பௌத்தமாக உருமாற்றியது என்று உரைக்கலாம்.




தூய்மை பெற்ற பௌத்தமாக, மற்றைய பொய்யான மதங்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்ற உண்மையின் வடிவமாக மேற்கத்தேயச் சிந்தனைகளிலிருந்து பெற்ற வடிவ மாதிரிகளைப் பிரயோகிக்கும் அமைப்பு வடிவமாகவே மாறிப் போயிருந்தது நவீன பௌத்தம். பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் உள்வாங்கியிருந்த நவீன கருத்துக்களின் தாக்கம் சிங்களத் தேசியவாதத்தை மதத்தைத் தாண்டிய கட்டமைப்புக்களை உருவாக்கவல்லதான செழுமையைச் செய்தது என்ற வாதத்துடன் என்னால் முழுமையாக உடன்பட முடியாதுள்ளது என்பதை இங்கு நான் குறிப்பிடுகின்றேன்.

ஏனெனில் இன்றும் சிங்களத் தேசியவாதத்துக்குள் ஆழ்ந்து கிடப்பது மதமே. எனவேதான் அது இன்றும் பழமை வாதச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக் கின்றது. மதம் சார்ந்த அதன் உளவியல் இன்றும் செல்வாக்குச் செலுத்துகிறது அதன் மீது. இன்றைய நவீன உலகில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுகளாகப் பல்வேறு வடிவங்கள் முன்வைக்கப்படு கின்றன. ஆயினும் அதில் ஒன்றையாவது தீர்வாக முன்மொழிவதில் விருப்புக் கொள்ளாது காலங்கடத்தும் நடைமுறைத் தந்திரோபாயத்தை கடைப்பிடிக்கிறது இந்தச் சிங்களத் தேசியவாதம்.

**நடராஜா முரளிதரன்**

இதற்கிடையில் ஆரியர் திராவிடர் என்ற கருத்தாக்கத்திற்கு வருகின்றேன். தென்னாசியாவில் அரசியல் மற்றும் கல்வி போன்ற துறைகளில் மிகவும் உணர்ச்சிவசமான கோட்பாடாக விளங்குவது ஆரியர் பற்றிய கோட்பாடாகும். இதுவும், இதனை விடக் குறைந்த அளவுக்குத் திராவி டர் பற்றிய கோட்பாடும், கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக அறிஞர் படைப்பு க்களைப் பாதித்து வரும் கோட்பாடுகள் எனலாம். இப்பாதிப்புக்கள் குறிப்பாக மொழியியல், வரலாறு, மற்றும் தொல்லியல் ஆகிய துறைகளிலே இடம் பெறுகின்றன. இன்று அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமின்றி, அறிஞர்கள், கல்விமான்கள் மற்றும் செய்தியாளர் ஆகியோரிடையேயும் கடும் விவாதங்களை எழுப்பும் பொருளாக இக்கோட்பாடுகள் அமைகின்றன.

சமஸ்கிருதச் சொல்லாகிய "ஆர்ய" முதன்முதலாக ரிக்வேத நூலில் காணப்படுகின்றது. இந்நூலில் அடங்கியுள்ள செய்யுள்கள் இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டவை என அறிஞர் கருதுவர். "ஆர்ய" என்ற சொல் ஈரானிய மொழிச் சொல்லாகிய "அய்ரிய" (ரிக் வேதத்தின் காலத்தைச் சேர்ந்த அவெஸ்தா நூலில் வரும் சொல்) என்ற சொல்லுடன் உறவுடைய சொல்லாகும். இது சான்றோரையும், சான்றாண்மை என்ற பண்பையும் குறிக்கும் சொல்லாக ரிக் வேதத்தில் காணப்படுகிறது.

ஆரியர் பிரச்சினை என்பது என்ன? ஐரோப்பியர் இந்தியாவில் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் வட இந்திய மொழிகளுக்கும், ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதை அவதானித்தனர். இதன் விளைவாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வட இந்திய மொழிகளும், ஐரோப்பிய மொழிகளும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதை நிரூபித்தன. இக்குடும்பத்திற்கு ஆரிய மொழிக் குடும்பம், இந்து - ஜேர்மானிய மொழிக் குடும்பம் மற்றும் இந்து - ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்று பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டன. இவற்றுள் 1813 இல் முதல் தடவை கொடுக்கப்பட்ட



**நடராஜா முரளிதரன்**

தொடர்ச்சி 23ஆம் பக்கம்

# நினைவாற்றல்

15ஆம் பக்கத்தொடர்ச்சி

நினைக்கின்றேன். நாம் ஒரு கடையில் ஒரு பொருளைப் பார்க்கின்றோம் என வைத்துக் கொள்வோம். அந்தப் பொருள் எம்மால் கவரப்படும் போது அல்லது அந்தப் பொருளை எமது மனம் பாராட்டும்போது (appreciate) பொருளைப்பற்றிய எண்ணங்கள், உணர்வுகள் எமது மூளையில் ஏற்படும். குறிக்கப்பட்ட பொருளின் வடிவத்தை சுவர் மடல் (parietal lobe) நினைவாற்றல் செய்து கொள்ளும். நாம் அந்தப் பொருளைப் பாராட்டிக் குறிப்பிடும் சொற்கள் இடது பக்க மடலாலும் (left temporal lobe-side), நாம் பேசுகின்ற குரல் (voice) வலது பக்க மடலாலும் (right temporal lobe-side) பரிமாற்றம் செய்யப்படும். குறிக்கப்பட்ட பொருளின் நிறம் பிடரி மடலினால் (occipital lobe-back) நினைவாற்றல் செய்யப்படும்.

பொதுவாக பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகளை விட காலம் முந்திப் பேசத் தொடங்குவதை அறிந்திருக்கின்றோம். இதனை ஆய்வுகளும் உறுதிப்படுத்தி யுள்ளார்கள். பெண்களின் பக்க மடலில் (temporal lobe-side) அதிக நியுரன்ஸ் (neurons) இருப்பதே இதற்கான காரணமாகக் கூறப்படுகின்றது. நினைவாற்றலு டன் நெருங்கிய தொடர்புடைய இன்னுமொரு உறுப்பு மூளைப் பின்மேடு (கிப்போகம்பஸ் hippocampus). ஆய்வுகளில் இந்த இடது மூளைப் பின்மேடு (left hippocampus) உறுப்பினை பெண்கள் ஆண்களை விட அதிகம் உரையாடல் அணுகுமுறைகளில் (verbal strategies) தம்மை ஈடுபடுத்துவதற்காக பயன்படுத்துவர். ஆண்களில் வலது மூளைப் பின்மேடு (right hippocampus) அதிக ஈடுபாடு கொள்ளும். ஆண்கள் பார்வைக்குரிய அல்லது பரப்பு சம்மந்தப்பட்ட (visual and spatial) விடயங்களில் அதிக நாட்டம் கொண்டிருப்பார்கள். பொதுவாக முன் மடல் (frontal lobe) அசைவுகளையும், சுவர் மடல் (parietal lobe) தொடுகையினால் வரும் உணர்வுகளையும், சுவர் மடல் (parietal lobe) கேட்டலினால் வரும் உணர்வுகளையும், பிடரி மடல் (occipital lobe-back) பார்த்தலினால் வரும் உணர்வுகளையும் கையாள்கின்றன.




மனித மூளையில் உள்ள முன் மடல் (frontal lobe) முழு மனித மூளையின் இருபது சதவீதமான அளவுடையதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனைய விலங்கினங்களை விட மனிதரில் இந்த உறுப்பு அதிகம் விருத்தி அடைந்துள்ளதாக வும் கூறப்படுகின்றது. இந்த உறுப்புத்தான் எம்மை முக்கியமாக விலங்கினங்களை விட மேம்பட்டு இருப்பதற்கான காரணியாக இருக்கிறது. தற் கட்டுப்பாடு, திட்டமிடல், பகுத்தறிதல், கற்றறிதல் போன்ற மனிதனின் சிறப்பியல்புகளுக்கு காரணமாக அமைவது மூளையின் முன் மடல் (frontal lobe). இவ்வாறாக முக்கியம் வாய்ந்த மூளையின் முன் மடல் பற்றி மேலும் ஆராய்ந்து கொள்ள வாசகர்களாகிய நீங்கள் ஆவலாக இருப்பீர்கள். எனவே அதற்காகக் காத்திருங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். தொடரும்...

# தோள்பட்டை வலிக்குத் தீர்வு

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

இப்பொழுது நாம் வாழும் வாழ்க்கைமுறை இயந்திரமயமானது. வேலை செய்து பணம் சேர்க்க வேண்டும், நல்ல வசதியாக வாழ வேண்டும், அதிக காலம் வாழவேண்டும், உடல் ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்றுதான் பலரும் எண்ணுகின்றனர். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் புதிய புதிய நோய்கள் வருகின்றன. அதுபோல் அந்த நோய்களைக் குணப்படுத்த மருந்துகள் வெளிவருகின்றன. ஆனால் இந்த மருத்துகளினால் அந்த நோய்கள் தற்காலிகமாக கட்டுப்படுகின்றன. ஆனால் மறுபுத்தில் அந்த மருந்துகளின் பக்கவிளைவினால் புதிய நோய்கள் உருவாகின்றன.



புஜங்காசனம்

நமது உடல் 15 வயதில் இருந்தது போல 45வயதில் இருப்பது கடினம். நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகின்றது. நமது உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் எல்லாவயதிலும் ஒரே வேகத்தில் செயல்படுவதும் இல்லை. பெரும்பாலும் வயது அதிகமாக சோர்வு, மூட்டு வலிகள் வருகின்றன. மூட்டு வலிபோன்று இப்போது கழுத்துப்பகுதிக்கு கீழ் கைகள் முதல் மேல் முதுகு வரை வலிப்பது அதிகமாகின்றது. இந்த வலி ஏற்பட ஒரு பக்கமாகப்படுத்து உறங்குவது முன்னால் குனிந்தவாறு வேலை செய்வது, நீண்டநேரம் உட்கார்ந்து இருப்பது, தொடர்ந்து கைகளால் பாரமான பொருட்களை தூக்குவது, இது போன்றவற்றால் இந்நோய் உருவாகின்றது. நீண்டதூரம் வாகனம் ஓட்டுவதை தவிர்க்க வேண்டும். இம்மாதிரியான வலிகளிலிருந்து விடுபட வேண்டுமென்றால் பொருத்தமான உடற்பயிற்சி முறைகளையும் தகுந்த உணவுத்திட்டத்தையும் கையாளவேண்டும். நாம் எவ்வளவோ நேரத்தை வீணடிக்கிறோம். குறைந்தது 15முதல் 20 நிமிடங்கள் வரை யோகானப் பயிற்சி செய்து வந்தால் பெரும்பாலான நோய்களிலிருந்து விடுபடலாம்.

எனவே இந்த தோள்பட்டை வலிக்கும் தீர்வு காணும் யோகாசனப்பயிற்சி முறைகளையும் விரைவான முழுப் பலனையும் தரும் வர்மக்கலையின் இளக்கு முறைகளையும் சுருக்கமாக இங்கு தருகிறேன்.

## யோகாசனங்கள்

### தடாசனம்

நேராக நின்று கொண்டு இருகைகளையும் தலைக்குமேல் செங்குத்தாக தூக்கியபடி ஒன்றுடன் ஒன்று கோர்த்தபடியும் பின்பு உள்ளங் கைகள் இரண்டும் வானத்தை நோக்கி இருக்குமாறு வைத்திருக்கவும். பின் அவை இரண்டும் காதுகளுக்கு அருகில் கொண்டுவரப்படவேண்டும். முதலாவதாக குதிக்கால் இரண்டையும் சில தடவைகள் உயர்த்தி இறக்கவும். அடுத்தபடியாக கைகளை அசைக்காமல் தலைப்பகுதியை இடது புறமாகவும் மாறி மாறி திருப்பவும்.

அடுத்து கைகள் இரண்டையும் இறக்கி வலதுகையைத் தோள்பட்டைக்கு மேல்புறமாக தூக்கி முதுகுப்புறமாக வளைக்கவும். அடுத்து இடது கையை தோள்பட்டைக்கு கீழ்ப்புறமாக முதுகுப்பகுதிக்குக் கொண்டுவர வேண்டும். பின் இரு கைகளையும் முதுகுக்குப் பின்னால் முடிந்தவரை ஒன்றுடன் ஒன்றாக இணைக்க முயற்சிக்க வேண்டும். அதன்பின் மேலும் கீழுமாக மாற்றி இதே மாதிரியாக பயிற்சியை எதிர்மாறாகச் செய்ய வேண்டும். இதனை 5முதல் 10 நிமிடங்கள் செய்யவும்.

### புஜங்காசனம்

விரிப்பில் குப்புறப்படுத்துக் கொண்டு கைகள் இரண்டையும் மார்புப் பகுதிக்கு பக்கவாட்டில் வைத்து மெதுவாக மூச்சை இழுத்துக் கொண்டு தலையை மேலே உயர்த்தவேண்டும். இந்நிலையில் 20 எண்ணிக்கை இருந்து பின் கைகளை எடுக்காது தலையை தரையில் வைக்க வேண்டும். இதனை இரண்டு அல்லது மூன்று முறைகள் செய்ய வேண்டும்.

### சப்த வஜ்ராசனம்



சப்த வஜ்ராசனம்

விரிப்பில் வஜ்ராசனத்தில் உட்கார்ந்து கொண்டு மெதுவாக பின்புறம் வளைந்து தலை உச்சி தரையில் படும்படி வைத்து மூச்சை நன்றாக இழுத்து வெளிவிட வேண்டும். பின்பு தலையைத் தூக்கவும். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று தடவை செய்யவும்.

### மார் ஜரி ஆசனம்

விரிப்பில் மண்டியிட்டு உட்காரவேண்டும். இரண்டு கைகளையும் முட்டிக்கு முன்புறமாக வைத்து உடலை முன்புறம் தள்ள வேண்டும். இப்போது தலையை மேலே தூக்க வேண்டும். தலைகீழ்பக்கம் இருக்கும்போது முதுகு மேல் நோக்கி இருக்க வேண்டும். இது போன்று தலையை மேலும் கீழும் அசைக்க வேண்டும். இதுபோல் 10 முதல் 15 தடவைகள் செய்ய வேண்டும்.

### பாத ஹஸ்த ஆசனம்



விரிப்பில் நின்று கொண்டு கால்களை சேர்த்து வைத்துக்கொண்டு இரண்டு கைகளையும் மெதுமெதுவாக மேலே உயர்த்தி முன்புறமாக குனிய வேண்டும். பின்தலையை முழங்காலை நோக்கி நெருக்கமாக கொண்டு போக வேண்டும். இந்த நிலையில் 10 வினாடிகள் நிறுத்தவும் பின் தளர்த்தவும். இதுபோல் மூன்று தடவைகள் செய்யவும்.

## யோக சிகிச்சை

### வர்மத்தின் இளக்கு முறை

இந்த முறையில் தோள்பட்டையின் வலிக்கான மையத்தைக் கண்டறிந்து அதனது அமுக்கப் புள்ளியை (Pressure Point) 6 வித்தியாசமான முறையில் அழுத்தி இழுத்தல் முறையை சரியாக மேற்கொண்டால் வலிகள் விரைவில் குணமாகும். இதனை விபரமாக அறிந்து கொள்ள என்னுடன் தொடர்பு கொள்ளவும்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

TORONTO BUSINESS COLLEGE

PERSONAL SUPPORT WORKER(NEW PROGRAM)
COMPUTERIZED ACCOUNTING
FULL TIME DIPLOMAS
Co-op Available
➤ Do You Receive EI Now?
➤ Were You Laid Off After 2005?
➤ Were You On Maternity Within Last 5 years?
You May Be Eligible For Financial Assistance under second career
Our Experienced Counselor Will Help You To Apply For Funding
Certificate Courses
QUICK BOOKS,SIMPLY ACCOUNTING,ACCPAC
WORD,EXCEL,POWER POINT,ACCESS,WINDOWS
KEYBOARDING.DATA ENTRY.FOOD HANDLING
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.t businesscollege.com
OACC
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# குழந்தைகளுக்கு ஏற்படும் குறைபாடும், வியாதிகளும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

### கடந்த இதழ் தொடர்ச்சி

நாம் உண்ணும் உணவுகளில் கத்தரி, தக்காளி, பயற்றங்காய், அன்னாசி, இறால், நண்டு, கணவாய், கொய்மீன், சூடை, முரல் போன்றவை சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும். இவற்றில் சிலவற்றை பிள்ளைகளுக்கு கொடுக்கும் போது குழந்தைகளுக்கு தடிமல், சொறி, தடிப்பு நிலை ஏற்படின் கொடுக்காது தவிர்த்தல் வேண்டும். இந்நிலை உண்ணக்கொடுத்து சில மணிநேரம் சென்ற பின் தெரியவரும்.

தாய்ப்பால் கொடுக்கும் குழந்தைகளுக்கும் இப்படிப்பட்ட வியாதி வர இடம் உண்டு. எனவே தாய் மேற்கூறிய உணவை தவிர்ப்பது மிக நன்று. சில குழந்தைகளுக்கு அரைப்பகுதியில் அதாவது அடிவயிறு, தொடை போன்றவற்றில் சருமம் சிவத்து தடிப்பாக இருப்பதை அவதானிக்க முடியும்.

இது பெரும்பாலும் குழந்தையின் சிறுநீர், மலம் அப்பகுதிகளில் படிந்து ஒருவித அழற்சி ஏற்பட்டு குழந்தை அவ்விடத்தை விரலால் சொறியத் தொடங்கி புண்ணாகிவிடும். இது பெரும்பாலும் சிறுநீரில் உள்ள அமோனியா பக்ரீயா கிருமிகளினாலும் ஏற்பட இடம் உண்டு. எதற்கும் இந்நிலைமைகள் ஏற்படும் போது வைத்தியர்களிடம் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்வது மிகமிக நன்று.

எனவே சுத்தம் முக்கியமாகும். குழந்தையின் ஆடைகளைக் கழற்றி சுத்தம் செய்தல் வேண்டும். உடம்பையும் நன்கு கழுவி தொற்று நீக்கி பொருட்களை பாவித்துக் கொள்வது நன்று. இங்கு வைத்தியர்கள் நன்கு தொற்றி நீக்கிப்பசை (Cream)களை பூசுவார்கள். அதனைக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம் சில குழந்தைகளுக்கு எக்ஸிமா என்ற வியாதி



ஏற்படுவதுண்டு. இதனை சித்த வைத்தியத்தில் கிரந்தி எனவும் கூற இடம் உண்டு. இக்கிரந்தி தன்மையில் முக்கியமாக இருவகை உண்டு. கருங்கிரந்தி, செங்கிரந்தி ஆகும். குழந்தையின் தேகத்தில் உள்ள பருக்களின் நிறத்தைக் கொண்டு அறிவதாகும். தாயகத்தில் இந்நோயினால் பீடிக்கப்பட்டு சித்தவைத்தியர்களினால் குணம் கண்டோர் பலர். குழந்தை பிறந்து 40 நாட்களில் இந்நிலை பெரும்பாலும் ஏற்படாதபடி வெளிப்பிரயோகமாக 'கிரந்தி' எண்ணெய் என்ற தைலம் பாவிப்பதுண்டு. உள்பிரயோகமாக முக்கூட்டுமாத்திரை (கோரோசனை, கஸ்தூரி குங்குமப்பூ) முலைப்பாலுடன் கொடுப்பதினால் குழந்தைகள் இப்பிணியில் இருந்து காப்பாற்றப்பட்டோராவர். அவ்வேளையில் அவர்களை நீராட்டும் போது, முள்முருக்கமிலை, செவ்வரத்தம் பூ, கிரந்தி நாயக்கச் செடியிலை போன்றவற்றை நிலை கண்டு குழந்தைகளின் சருமத்தில் (மேற்கூறியவற்றில்) ஏதாவது ஒன்றை நன்கு பசைத்தன்மையாக்கிப் பூசி நீராட்டுவதும் வழக்கம். இம்மூலிகைச் செடிகளின் வீரியத்திறத்தினால் தொற்றை நீக்கும் தன்மையுடன் மனுக்களை மாற்றும் இயல்புடையது. இப்படி இவற்றைக் கூறியபொழுதிலும் காலநிலையையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும். நம்நாட்டின் காலநிலை அவற்றுக்கு உகந்ததாக அமையும். இந்நாட்டில் பாவிக்கும் வைத்தியர்களின் ஆலோசனைகளையும் பெற்று பயன்பெறுவது முக்கியம். எனவே விஞ்ஞானம் விருத்தியான இக்காலத்தில் உரிய கிருமித் தொற்று தடைப்பசைகள் பலவுண்டு. அவற்றை இங்கு இலகுவாக வைத்தியர்களின் ஆய்வின்படி பெற்றுக் கொள்ள முடியும். பெரும்பாலும் குழந்தைகள் பாவிக்கும் அன்ன ஆகாரங்கள் தான் முக்கியமாகும். சலம், மலம் கழிவதை அவதானமாக கவனிக்க வேண்டும். எதுவித குறைபாடும் இல்லாமல் வழமை போல் கழிதல் வேண்டும். 'போகவேண்டிய பொருட்கள் நமது உடலில் இருந்து போக வேண்டிய பாதையால் தடையின்றி போகவேண்டிய நேரம் போவதே சிறந்ததாகும்'

குழந்தைகளுக்கு சளி, தடிமன், இருமல் தொற்றினாலும், காலநிலையால் ஏற்பட்டாலும், நாம் குழந்தைகளை நீராட்டும் போது நன்கு துடைத்து நீரை அகற்றாது விட்டாலும், கவனமின்மையாலும் தடிமன், சளி ஏற்பட இடம் உண்டு. எனவே எதற்கும் கண்ணும் கருத்தும் அவதானமும் வேண்டும்.



வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்


Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?


சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாட்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.718.3909

வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

நீங்கள் அதிகம்
விரும்பும் மிகப்பிரபல்யமான
தமிழ் அலைவரிசைகளை
மலிவுக்கட்டணத்தில் பார்த்து மகிழுங்கள்.

தமிழ் TV அலைவரிசைகளின் புதிய பொதி

| VIJAY | SUN TV | tvi Tamil Vision Int. | tamil one | $30 |
| --- | --- | --- | --- | --- |
| அலைவரிசை 864 | அலைவரிசை 865 | அலைவரிசை 867 | அலைவரிசை 868 | மாதம் ஒன்றுக்கு[1] |

இன்றே பதிவு செய்து உங்கள் பணத்தை சேமியுங்கள்
அழையுங்கள் 1 877 330-1320



ROGERS™

Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. 1. Taxes and Digital Service fee apply. ™Rogers and the Mobius design are trademarks of or used under license from Rogers Communications Inc. or an affiliate. All other brand names and logos are trademarks of their respective owners. ©2011 Rogers Communications.

# HomeLife / GTA Realty Inc.,

**Brokerage***

# இன்

# ஸ்காபரோ அலுவலகம்




தமிழ் மக்களின் ஏகோபித்த நன்மதிப்பை

பெற்ற வடஅமெரிக்காவின் முதலாவது

**South Asian Indoor Mall**

**"GTA SQUARE"**

இற்கு இடம் மாறுகின்றது என்பதனை

பெருமகிழ்ச்சியுடன்

தெரிவிக்கின்றோம்.

*5215 Finch Avenue East, #203*
*Scarborough, ON . M1S OC2*

**Tel: 416.321.6969**

*Independently Owned & Operated

# திரை விமர்சனம் - நடுநிசி நாய்கள்

கவனிக்கவும் - படத்திற்கு 'ஏ' சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள். நிச்சயம் இப்படம் குழந்தைகளுக்கானது அல்ல. அதேபோல் படத்தின் 'டேக் - லைன்' "பலவீனமானவர்களுக்கு அல்ல" என்கிறது. அதனால், குடும்பத்துடன் பார்க்க முடியாத படம் என புலம்பும் திட்டத்திலிருப்பவர்கள் இந்த க்ஷணமே ஆட்டத்தினின்று விலகிக்கொள்ளலாம்.

நடுநிசி நாய்கள் - பிரமிள் என்ற தர்மு சிவராமுவை நோக்கி பசுவய்யா என்ற சுந்தர ராமசாமி எழுதிய ஒரு வசை கவிதையின் பெயர் இது. (கறுப்பு விதைகாட்டி, பிட்டி சிறுத்துக் குலுங்க, வெட்கம் கெட்டுத்திரியும், இந் நடுநிசி நாய்களுக்கு, ஓய்வில்லை, உறக்கமும் ஓய்வாக இல்லை - நடுநிசி நாய்கள், கசடதபற - மார்ச் 1973) அத்தலைப்பு இப்படத்துக்கும், இது கொண்டு வர முயன்றிருக்கும் 'மூடு'க்கும் கச்சிதமாகப் பொருந்திப் போகிறது!

ஒரு வகையில் இதனை கௌதம் மேனனின் முதல் திரைப்படம் எனலாம் - எப்படி?

**சி. சரவணகார்த்திகேயன்**

'மின்னலே', 'விண்ணைத் தாண்டி வருவாயா' போன்ற குப்பைகளைக் கடாசி விடுங்கள். 'பச்சைக்கிளி முத்துச்சரம்', 'வாரணம் ஆயிரம்' போன்ற குறைப் பிரசவங்களையும் விட்டுவிடலாம். 'காக்க காக்க', 'வேட்டையாடு விளையாடு' - இந்த இரண்டு படங்கள் மட்டும் தாம் கௌதமின் முக்கியமான படைப்புகள். கௌதம் சந்தேகமேயில்லாமல் 'பவர்புல் எக்ஸிகியூட்டர்.' ஆனால், மிஷ்கின் போன்றவர்களிடம் காணக்கிடைக்கும் திரைக்கதை நுட்பம் என்பது அவருக்கு வாய்க்காமலே இருந்தது. இப்படம் அக்குறையைத் தீர்த்திருக்கிறது.

ஒரு நடுநிசியில் ஒரு கடத்தல் மற்றும் சில கொலைகளுடன் தொடங்கும் படம் அதற்கான காரணங்களைத் தேடிப் பயணித்து சம்பவத் துணுக்குகளின் காட்சித் தொகுப்பாக விரிகிறது.

மிக நேர்த்தியாகக் கோர்க்கப்பட்ட திரைக்கதையை மகா துல்லியமாக இயக்கியிருக்கிறார் கௌதம் வாசுதேவ் மேனன். த்ரில்லர் என்பதை ஓர் உத்தியாகப் பயன்படுத்தியிருந்தாலும் அடிப்படையில் இது ஓர் உளவியல் படம். இதன் அதீத தன்மைகள், அப்பட்ட உண்மைகள் சிலருக்கு அசூயை, அச்சம், அதிர்ச்சி ஊட்டுவதாக இருக்கலாம் - குறிப்பாக பெண்களுக்கு. ஆண் குழந்தைகளும் கணிசமான அளவில் பாலியல் அத்துமீறல்களுக்கு ஆளாகிறார்கள் என்பதே படத்தின் நாதம் என்பதாக இறுதியில் சொல்கிறார்கள். உண்மையில் நடுநிசி நாய்கள் என்பது எதனைக் குறிக்கிறது? ஆழ்மனதின் இருட்டுப் பக்கங்களிலிருந்து வெளிப்படும் அபாய எண்ணங்களையே இது குறிக்கிறது. மற்றபடி கதை முழுக்க நள்ளிரவில் நடக்கிறது,



நாயகன் ஒரு நாய் போல பெண்களைத் துரத்துகிறான் என்பதெல்லாம் குறியீடுகள் மட்டுமே. படத்தலைப்பு சம்மந்தமில்லாமல் போய் விடுமோ என்றஞ்சி நான்கு நாய்களை வேறு காட்டுகிறார்கள். ஒரு சராசரி ரசிகனுக்கு படத்தில் திருப்பங்கள் நிறைய இல்லை, சஸ்பென்ஸ் அறவே இல்லை போன்ற புகார்கள் இருக்கும்.

கொலை செய்யும் முறை, ஆரம்பத்தில் சில காட்சிகள் போன்றவற்றில் கொஞ்சமாய் ஒருவித நாடகத்தனம் எட்டிப் பார்த்தாலும் இப்படம் ஒட்டு மொத்தமாய் நல்லதோர் எதார்த்த படைப்பாகவே நிற்கிறது. தந்தையே தன் மகனை பாலியல் ரீதியாகப் பயன்படுத்துவதாக இதில் காட்டப்படுகிறது. அது ஓர் அதிர்ச்சி என்றாலும் நிதர்சனமும் கூட. கார்டியனான முப்பது வயதுப் பெண்ணுக்கும் பதிமூன்று வயது மைனர் சிறுவனுக்கும் நிகழும் முதல் உறவைக் காட்டும் பத்து நிமிடங்கள் தாம் படத்தில் வெளிப்பட்டிருக்கும் உச்சம். மிக நுணுக்கமாக ஓர் உக்கிரமான கவிதை போல் அதைப் பதிவு செய்திருக்கிறார் கௌதம். அதிலும் அக்காட்சியில் நடித்திருக்கும் ஸ்வப்னாவின் முகபாவங்கள் - தேவதை!

நடுநிசி நாய்கள் முழுக்க பெண்கள் மயம். பாடகிகள் மேல் அப்படி என்ன தான் வாஞ்சையோ கௌதம் மேனனுக்கு - (பச்சைக்கிளி முத்துச்சரம் படத்தில் ஆன்ட்ரியா ஜெரெமையா போல்) இப்படத்திலும் எங்கேயோ அல்லேலூயா பாடிக்கொண்டிருந்த ஸ்வப்னாவை நடிக்கச் செய்திருக்கிறார். சமீரா ரெட்டியும் நன்றாக நடித்திருக்கிறார். மனநலம் பாதித்த பெண்ணாக இறுதியில் வரும் சமந்தாவும் கனாக்காணும் காலங்கள் சீரியல் புகழ் ப்ரியாவும் தேறுகிறார்கள்.

இவர்கள் எல்லோர் நடிப்பையும் புறந்தள்ளி விட்டு அதகளம் பண்ணியிருப்பது பிரதான பாத்திரமேற்றிருக்கும் வீரா (முழுப்பெயர் வீரபாகு!) - முகபாவம், உடல்மொழி, குரல் என அனைத்திலும் மிரட்டியிருக்கிறார். தேவாவும் செவ்வனே பணி செய்திருக்கிறார்.

பொதுவாக கௌதம் மேனனின் படங்களின் மேல் வைக்கப்படும் குற்றச்சாட்டு அவற்றில் அதிகமான ஆங்கில வசனங்கள் இருக்கின்றன என்பது. கிராமியப் படங்களில் வட்டார வழக்குகளை பயன்படுத்துவதற்கு ஒப்பான செயலே இது. கௌதம் சொல்ல எடுத்துக் கொள்வது எல்லாமே படித்த நகர்ப்புற உயர் நடுத்தர வர்க்கக் குடும்பங்களின் கதையை - தமிழ் சினிமா வில் கௌதம் தான் அவர்களை முதன் முதலாகப் பிரதிநிதித்துவப் படுத்தியவர். அவர்கள் ஆங்கிலத்தை தம் தினசரி வாழ்வின் ஓர் அங்கமாகவே பயன்படுத்துகிறவர்கள் - குறைந்த பட்சம் தம் மொழியறிவை தம்பட்டம் அடிக்கவாவது. அவர்களது வாழ்வியலை யதார்த்தமாக காட்சிப்படுத்த முனையும்போது அவர்களது சம்பாஷனைகளில் ஆங்கிலம் நுழைவது தவிர்க்கவே இயலாதது. இதை ஏற்றுக்கொள்ளாததற்கு ஒருவரின் ஆங்கிலக் குறையறிவின் விளைவான தாழ்வுணர்ச்சி தவிர வேறு காரணங்கள் இருக்க முடியாது. தேவையான, போதுமான, நிறைவான ஆங்கில வசனங்கள் இப்படத்திலும் இருக்கின்றன.

இப்படத்தின் ஒளிப்பதிவில் சில உச்சங்கள் நிகழ்ந்தேறி இருக்கின்றன. 'ஈரம்' படத்திற்குப் பின் மனோஜ் பரம்ஹம்சாவுக்கு இது அடுத்த கட்டம். காட்சிகளின் துரித நகர்ச்சியில் பின்னணி இசை இல்லையென்பதே எவ்விடத்தும் உறைப்பதில்லை.

முன்பே பல படங்களில் சில இடங்களில் இளையராஜா இது போல் எந்தப் பின்னணி இசையும் சேர்க்காமல் காட்சிகளை வலுப்படுத்தியிருக்கிறார். அவற்றில் இசையைக் காட்டிலும் மௌனம் உரத்துப் பேசியிருக்கிறது. என்றாலும் அந்த மௌனமும் பின்னணி இசையின் ஒரு பகுதியாகவே பாவிக்கப்படுகிறது. தவிர சில காட்சிகளுக்குத் தானே ஒழிய முழுப்படத்துக்கும் அப்படிச் செய்ததில்லை. அவ்வகையில் பின்னணி இசையே இல்லாத முதல் தமிழ் சினிமா என்ற தகுதியைப் பெறுகிறது ந.நி.நா.

ஆண்டனியும் கவனிக்க வைக்கிறார். ராஜீவன் மற்றும் நளினி ஸ்ரீராம் - உள்ளேன் ஐயா!

குறைகளும் இருக்கவே செய்கின்றன. முதன்மையாய் மூலக்கதை மற்றும் காட்சிகள் ஏற்கெனவே பல படங்களில் நாம் பார்த்தவையே - குறைந்தபட்சம் பத்துப் படங்களேனும் நினைவுக்கு வருகின்றன. பாலியல் சுரண்டலால் இளவயதில்

தொடர்ச்சி 39ம் பக்கம்







# ஆடுதுறை - 2 தமிழ்நாடு சுற்றுலா இடங்கள் - 92

- வழிப்போக்கன் -



திருவையாறிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் உள்ள ஒரு சிறிய கிராமம்தான் நாம் இந்த இதழில் பார்க்கப்போகும் இன்னொரு ஆடுதுறை. சிறிய கிராமம்தான் என்றாலும் ஆடுதுறைப் பெருமாள் கோயில் என்றால் அனைவருக்கும் தெரியும். அந்த அளவுக்குப் புகழ்பெற்றது. 108 திவ்ய ஸ்தலங்களில் திருக்கண்டியூருக்கு அடுத்து வருவது இந்த ஆடுதுறைப் பெருமாள் கோயில்.

கும்பகோணம் - திருவையாறு சாலையில் சுவாமிமலை, உமையாள்புரம், கபிஸ்தலம் தாண்டி, உள்ளிக்கடை என்னும் ஊரையடுத்து இந்த ஆடுதுறை உள்ளது. ஆடுதுறை என்ற பெயரில் ஏற்கெனவே நாம் பார்த்த மற்றொரு தலம் இருப்பதாலும், இத்தலத்திற்குப் பக்கத்தில் பெருமாள் கோயில் என்னும் வைணவத் தலம் இருப்பதாலும் இத்தலத்தை கும்பகோணம் - மயிலாடுதுறை சாலையில் உள்ள ஆடுதுறையினின்று வேறுபட்டறிய ‘ஆடுதுறை பெருமாள் கோயில்’ என்று சொல்கிறார்கள். குரங்காடுதுறை என்று ஒரு பெயரும் உண்டு. ஆனால், இப்பொழுது குரங்காடுதுறை என்று கேட்டால் யாருக்கும் தெரிவதில்லை. திருக்கூடலூர் என்றும் சங்கம ஷேத்திரம் என்ற பெயர்களாலும் இவ்வூர் அழைக்கப்படுகிறது. மீனாட்சி குடிகொண்டிருக்கும் மதுரையில் உள்ள கூடலூர் தென்திருக்கூடலூர் என்றும் தஞ்சையில் உள்ள இந்தத் திருக்கூடலூரை வடதிருக்கூடலூர் என்றும் சொல்கிறார்கள். நந்தக முனிவரோடு தேவர்கள் கூட்டம் கூட்டமாய் வந்து வழிபட்ட தலமாதலால், இத்தலத்திற்கு கூடலூர் என்ற பெயர் வந்திருக்க வேண்டும் என்கிறார்கள்.

பிரம்மாண்ட புராணம், பாத்ம புராணம் மற்றும் வடமொழியில் உள்ள கூடற்புராணம் ஆகிய புராணங்களில் பெருமாள் கோயில் ஆடுதுறை பற்றி அதிகம் சொல்லப்பட்டுள்ளது. பெருமாள் வராஹ அவதாரம் எடுத்து பூமிக்குள் மறைந்தது இந்த ஆடுதுறை என்பதுதான் இந்த புராணங்களில் சொல்லப்பட்டுள்ள சிறப்பு. பெருமாள் பூமியை இந்த இடத்தில் பிளந்து உள்புகுந்து ஸ்ரீமுஷ்ணத்தில் வெளிவந்தார் என்று சொல்லப்படுகிறது. அப்போது மகாலட்சுமியை தாங்கி காட்சியளித்தார். மகாலட்சுமியை காக்கும் பொருட்டு வராஹ அவதாரம் எடுத்து ஸ்ரீமுஷ்ணத்தில் தேவியை அணைத்துக் கொடுத்தாலும், முதலில் இவ்விடத்தில் பூமியைக் கீறி உள்புகுந்ததால் திருமங்கையாழ்வார் இத்தலத்தை மட்டும் பாடி ஸ்ரீமுஷ்ணத்தை பாடாது விட்டார் என்பார்கள். திருமங்கையாழ்வாரால் மட்டும் ஆடுதுறை 10 பாசுரங்கள் மங்களாசாசனம் பாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இத்தலம் பெருமாளுக்கு குலைவணங்கீஸ்வரர், சிட்டிலிங்கேஸ்வரர் ஆகிய பெயர்களும் உள்ளன. கர்ப்பிணி ஒருத்தியின் தாகத்தைத் தீர்க்கத் தென்னங்குலையை இறைவன் வளைத்துக் கொடுத்ததால் குலைவணங்கீஸ்வரர் என்றும், சிட்டுக்குருவி வழிபட்டதால் சிட்டிலிங்கேஸ்வரர் என்றும் இறைவன் வழங்கப்படுகிறார். இக்கோயிலின் தாயார் பத்மாசனி மற்றும் புஷ்பவல்லி என்று அழைக்கப்படுகிறார்.

இத்திருத்தலத்தில் சங்கத்தீர்த்தம், இந்திர தீர்த்தம், காவேரி தீர்த்தம் என்று மூன்று தீர்த்தங்கள் உள்ளன.

ஆடுதுறைப் பெருமாள் கோயிலில் இருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் மண்மேடிட்ட ஒரு பகுதி உள்ளது. இங்கே ஒரு சிறிய கோயிலைப் பார்க்கலாம். இது முற்காலத்தில் பொன்னி நதியின் கரையில் பிரசித்தி பெற்றிருந்த திருக்கோயில் என்றும் அதன்பிறகு அழிந்து இன்றுள்ள நிலையில் உள்ளது என்றும் சொல்கிறார்கள். இப்பகுதியை பெருமாள் பொட்டல் என்றும் மக்கள் அழைப்பது சிறப்பு. ராணி மங்கம்மாளுக்கு இக்கோவிலில் சிலை உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், இக்கோவிலின் மதில்சுவர் மிக நீண்டு அதிக உயரமானதாக இருப்பது காண்போரை

தொடர்ச்சி 40ம் பக்கம்




# மகாவம்சத்திலிருந்து...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

பெயராகிய இந்து – ஐரோப்பியம் என்ற பெயர் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்று மொழி யியல் நூல்களில் இம்மொழிக் குடும்பத்தின் பெயராக இடம்பெறுகின்றது. எனினும் பொதுமக்கள் மத்தியில் இக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுக்கு ஆரிய மொழிகள் என்ற பெயர் வழக்கில் உள்ளது.

இது மொழிக் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட பெயராக இருந்தாலும், அப்பெயர் மூலம் மொழி என்பது இனம் என்பதுடன் சமன் செய்யப்பட்டது. இத்தவறுதான் பின்னர் எழுகின்ற ஆரியர் பிரச்சினைக்குக் காரணம். ஆரிய மொழிகளைப் பேசியோர் ஆரியர் என்ற இனத்தோர் என்று சமப்படுத்தினர். ஆரிய இனம் மற்றைய இனங்களை விட மேலானவர்கள் என்றும், வலிமையுடையவர் கள் என்றும் கருத்துக்கள் பிறந்தன.

ஆரியர் என்ற ஓர் இனம் இருந்தது என்ற கருத்தை இன்று பொதுவாக அறிஞர்கள் ஏற்பதில்லை. இந்து – ஐரோப்பிய மொழிகள் என்ற ஒரு மொழிக் குடும்பம் இருப்பதையும் அக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் ஆதி இந்து – ஐரோப்பியம் எனப்படும் ஒரு மொழி யின் வழித்தோன்றல்கள் என்பதையும் மொழியியலாளர் ஏற்றுக்கொள்வர். மேற்கூறிய இக்கருத்துக்களை வரலாறு, தொல்லியல் ஆகிய துறைகளில் புகழ் வாய்ந்த பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் தனது "இலங்கை யில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு" என்ற நூலில் எழுதியுள்ளார்.

சிங்கள மக்களிடையே இருந்த வசதி படைத்த பிரிவினரின் பிள்ளைகளே இங்கிலாந்துக்குப் படிக்கச் சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும் வேளைகளில் தேசம், தேசியம் போன்ற நவீன கருத்தாக்கங்களைச் சுமந்து கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்களுக்கும் அவர்கள் சார்ந்த சிங்களக் குட்டி முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இருந்த பிரதான போட்டியாளர்கள் தமிழர்கள் தரப்பிலான குட்டி முதலாளிகள். அவை பொருளாதார, அரசியல் தளங்களிலே இடம்பெற்ற போட்டியாகும். அந்த மேலாதிக்கப் போட்டியிலே தமிழர்களைச் சிங்களவர்களது வரலாற்று எதிரியாகப் பிர-கடனப்படுத்துவதற்கு பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் வழியாகப் பிறந்த சிங்களத் தேசியவாதம் பயன்படுத்தப்பட்டது.

பலமாக இவர்களால் இத்தகைய கருத்தியலை முன்னெடுப்பதற்கு வளர்ச்சி யடைந்திருந்த தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. சிங்கள மேட்டுக்குடி வழிவந்த இந்தக் கல்விமான்கள், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள் மற்றும் முதலாளிகள் தொடர்புச் சாதனங்கள் ஊடாக முன்னெடுத்த சிங்களத் தேசியவாதம் சமூகத்தின் அடித்தள மக்களை இலகுவாகச் சென்றடைவதற்கு பௌத்த மதமும் பின்னிப்பிணைந்த தேசியமாக அது விளங்கியதே காரணமாகும்.

*(ஆதார நூல் : வியூகம் இதழ் -2, கட்டுரை -: வரலாற்றுப் பிரக்ஞையின் உருவாக்கம்: மகாவம்சத்தில் இருந்து சிங்கள தேசியவாதத்தை நோக்கி)*

## தேசத்தின் அன்னை பார்வதி அம்மாவின் பிரிவுக்கு நாடு கடந்த தமிழீழஅரசின் கண்ணீர் அஞ்சலி

தேசியத் தலைவர் மேன்மைமிகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் தாயார் பார்வதியம்மாவின் பிரிவிற்கு நாடு கடந்த தமிழீழ அரசின் சார்பில் எமது கண்ணீர் அஞ்சலி.

உங்கள் மறைவு பற்றி செய்தி கேட்டு தாங்கொணாத் துயர்கொள்ளும் கோடிக்கணகி லான தமிழர்கள் சார்பில் தலை சாய்ந்து நின்று நெஞ்சுருக வணக்கம் செலுத்துகிறோம் தாயே.

வீரத்தின் சின்னமான தேசியத்தலைவனை, ஈழத்தமிழரின் தலைமகனை பெற்றெடுத்த தேசத்தின் தாயே! தாய்க்குலத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய மனித மாணிக்கமே! உன் இழப்பை, உனது பிரிவை எப்படியம்மா எம்மால்த் தாங்கமுடியும். வாடிப்போன எம் இனத்துக்கு ஒரு வரப்பிரசாதாத்தைத் தந்தவரே! உலகமே எம்மை ஓர் வீர இனம் என்று மெச்சவைக்க ஒரு வீரனை எமகுத்தந்தவரே! எம் சந்ததி உங்களை ஒருபோதும் மறக்காதம்மா.

இன்று இறுதியாத்திரை போகும் எம் தானைத் தலைவனின் தாயே! எட்டுக்கோடி தமிழினத்தின் இணையற்ற அன்னையே! எம் உறவுகள் தம் வாழ்நாள்பூராவும் உங்களைப் பூசித்தாலும் உன் கடனை எம்மால் ஒருபோதும் தீர்க்கமுடியாதம்மா. நீங்கள் எண்ணிய, எம் தானைத் தலைவனால் வழிவகுக்கப்பட்ட இறைமையும், சுதந்திரமும் கொண்ட தனிநாடாம் தமிழீழத்தை விரைவில் அமைத்து உங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்வோமம்மா. இது சத்தியம். பார்வதியம்மாவின் ஆன்மா இறைவனடி சென்று சாந்தியடைய வேண்டுமென அந்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

அவருடைய பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்களுக்கும் நாடு கடந்த தமிழீழ அரசின சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாநிதி ராம் சிவலிங்கம்
பிரதிப் பிரதமர்,
நாடு கடந்த தமிழீழ அரசு




# BASEMENT RENT

**14TH AVE & 9TH LINE**
Brand new 2 Bedroom bsmt for rent. Garage parking, cable, laundry. Avail. immediately. Close to mall, bank. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.625.1438

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.520.5883

**BELLAMY & ELLESMERE**
1 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Parking, laundry. Avail. immediately. Close to School, TTC, subway, scarborough centre, stores.
தொடர்புகளுக்கு: 416.289.6076

**MARKHAM & STEELES**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, cable, parking. Close to TTC, mall, nofrills. Avail. March 15, 2011.
தொடர்புகளுக்கு: 416.888.4084

**MARKHAM & LAWRENCE**
Large 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, TTC. Avail. immediately.
416.438.8979 / 647.717.0451

**TAPSCOTT & FINCH**
1 bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, full washroom, living room, laundry. Close to bus stop, temple, stores. No smoking & No pets. Avail. immediately.
416.768.4271 / 416.768.4246
Weekdays 6:00pm / Weekends Anytime

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Highland farm, Tamil stores, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.662.1976

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, mall & tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.8615

**MORNINGSIDE & LAWRENCE**
Brand new 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.305.5158

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. Utilities, bills included. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.887.8839

***14TH AVE & MCCOWAN***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, cable, laundry. Close to TTC, mall. Avail. April 01, 2011. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.727.7550

***SHEPPARD & MARKHAM***
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Small family or ladies preferred.
தொடர்புகளுக்கு: 416. 727.3716

***MEADOWVALE & LAWRENCE***
3 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, 3 parking, laundry. Close to 24hrs. TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.804.3520

***BELLAMY & LAWRENCE***
2 Bedroom bsmt for rent. Sep. entrace, parking, laundry. Close TTC, mall. Avail. immediately.
416. 464.4207 / 416.431.6349

***BELLAMY & BRIMORTON DR.***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.473.6155

***VICTORIAPARK & ELLESMERE***
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, stores, mall & more. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.576.2655
416.444.2655/ 416.844.2655

***MORNINGSIDE & OLD FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.286.8450 / 416.459.3006

***DENISON & MIDDLEFIELD***
Two Bedroom bsmt apt. for rent. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.562.5113

***MARKHAM & DENISON***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, parking. Close to school. Avail. immediately. Girls or small family preferred.
647.282.0643 / 905.554.2505

***NEILSON & FINCH***
3 Bedroom brand new walkout bsmt for rent. Fully hardwood floor. 2 Full washroom, laundry, basic cable, parking included. Close to Brookside public school, 133 bus stop. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: 647.831.2030

***VICTORIAPARK & ELLESMERE***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Utilities including. Rent $450. Close to TTC, mall. Avail. immediately.
416.754.0823 / 416.291.3153

***MORNINGSIDE & STAINS***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.6416

***MORNINGSIDE & LAWRENCE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

***MORNINGSIDE & SEWELLS***
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

# WARDEN & MCNICOLL

***2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. March 01, 2011.***
***416.494.0850 / 416.315.5648***

***KENNEDY & EGLINTON***
2 Bedroom bsmt for rent. Living room, kitchen, full washroom, parking, TV, cable, Sep. entrance. Close to TTC (Kennedy Subway), school & all amenities. Quiet place. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.334.5409

***BRIMLEY & DENISON***
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0870

***NEILSON & FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, internet. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.832.3977

***MCCOWAN & 16TH AVE.***
1 அறை கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to bus, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

***DUFFERIN & RUTHERFORD***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, GO station, school. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.303.3022

***NEILSON & FINCH***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.802.6067

***KENNEDY & DENISON***
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry . All facilities close by. Avail. March 01, 2011.
தொடர்புகட்கு: 416.875.7146

***MORNINGSIDE & MORNINGVIEW***
Newly renovated 1 bedroom walkout bsmt for rent. living room, laundry, cable, parking. Utilities included. Close to TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.666.9076

***MEADOWALE & ELLESMERE***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Utilities included. Close to TTC, school, University, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.431.5078

***MARKHAM & LAWRENCE***
1 Bedroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.430.0097

***MORNINGSIDE & FINCH***
3 bedroom Bsmt for rent. Close to all facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். முழுநேர அல்லது பகுதிநேர வேலை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.857.8548

***STAINS & MORNINGSIDE***
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Large kitchen, washroom, dining room, parking, laundry, cable. Close to TTC, mall, etc. Avail.immediately.
416.315.4653 / 416.297.9974

***KENNEDY & ST.CLAIR***
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, sep. laundry. Close to School, bus, subway, stores, etc. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.266.7704

***MORNINGSIDE & OLDFINCH***
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking. Close to school, ttc, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.836.0654

***DONMILLS & STEELES***
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. No smoking & No drink Very strictly. Rent $300. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

***MIDDLEFIELD & DENISON***
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to bus, YRT, mall, tamil stores. Girls or small family preferred. Avail. March 01, 2011.
905.910.9926 / 647.885.1429

***BRIMLEY & LAWRENCE***
2 Rooms for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately. Bachelor preferred.
தொடர்புகளுக்கு: 416.264.8177

***BELLAMY & PANDORO CIR.***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

***SHEPPARD & MORNINGSIDE***
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC & shopping, etc . Avail. immediately. Couple or students preferred.
தொடர்புகளுக்கு: 647.882.3804

***MCNICOLL & MCCOWAN***
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**EGLINTON & DANFORTH**

சந்தியில் தனி நுழைவாயில், பஸ்தரிப்பு, கடைகள் உள்ள அமைதியான இடத்தில் ஒரு படுக்கை அறை சகல வதிகளுடன் வாடகைக்கு உண்டு. வேலை பார்க்கும் ஆண்கள் விரும்பத்தக்கது. பென்சன் ஊதியம், சமூகநலன் உதவி பெறுபவர் ஆலோசிக்கப்படும். தொடர்புகளுக்கு: 416.431.5156

***MORNINGSIDE & SHEPPARD***

1 Bedroom for rent. Close to TTC, mall, school. Avail. immediately. 416.724.6186 / 647.833.3893

***NEILSON & FINCH***
***MORNINGSIDE & FINCH***

Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.351.0422

***WARDEN & FINCH***

ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking avail. Close to TTC, shopping, etc. Avail. immediately தொடர்புகளுக்கு: 416.495.9775

***MARKHAM & SHEPPARD***

3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall. 416.335.5242 / 416.820.1999

***MARKHAM & DENISON***

Room for rent in main floor. Parking, cable & laundry. Close to TTC, YRT, Mall & school. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.339.1062

***KENNEDY & LAWRENCE***

Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores... தொடர்புகளுக்கு: 416.830.5560

***LAWRENCE & PHARMACY***

**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 416.288.0303

# SPACE FOR RENT

***KENNEDY & ELLESMERE***

**Office or retail.**

தொடர்புகளுக்கு: **416.400.6569**

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு. 416.755.8354 / 647.836.9255

## சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது. தொடர்புகளுக்கு: 905.427.1792

மேலும் பக்கங்கள் 24, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# HOUSE FOR RENT

**MARKHAM & MCLEVIN**

3 + 1 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, school, mall. Low rent.

**9TH LINE & 14TH AVE**

2 bedroom bsmt for rent. தொடர்புகளுக்கு: 905.471.1986

***MORNINGSIDE & SHEPPARED***

2 Bedroom house for rent. Close to TTC, mall, school. Very big balcony. Avail. immediately. 416.847.9802 / 647.302.8597

***KENNEDY & FINCH***

3 விசலாமான அறைகளைக் கொண்ட Bunglow வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. TTC, மற்றும் சகல வசதிகளையும் கொண்டது. Avail. April 01, 2011 தொடர்புகளுக்கு: 647.779.3411

***NEILSON & SHEPPARD***

3 Bedroom + 1 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. April01, 2011. Rent $1250 + utilities. 416.284.9438 / 416.931.7279

***BIRCHMOUNT & MCNICOLL***

5 + 3 Bedroom for rent. 4 Washrooms. Close to TTC, hospital. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.293.6211

***BIRCHMOUNT & MCNICOLL***

மேல்தளத்தில் 3 அறைகளும், கீழ்தளத்தில் 3 அறைகளும் வாடகைக்கு உண்டு. Close to all facilities. அத்துடன் 1 தனி அறையும் வாடகைக்கு உண்டு. Avail immediately. தொடர்புகளுக்கு: 416.293.6211

# CONDO. FOR SALE

2 Bedroom condo. for sale in 5225 Finch Ave. East, Scarborough, ON. Please call for more details 416.299.9710 / 647.896.1419

# HOUSE FOR SALE

***DANFORTH & EGLINTON***

4 bedroom new Townhouse for sale. Close to bus, 5 min. to Kennedy subway, stores. தொடர்புகளுக்கு: 647.960.4120

# BUSINESS FOR SALE

Scarborough வில் அமைந்துள்ள Bar & Restaurant விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 416.414.5562

## மணமகள் தேவை

35 வயதுடைய MSc. முடித்த மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் படித்த மணமகள் தேவை. 905.426.8424 / 905.472.8533

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு: 647.618.9316

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

# SPACE FOR LEASE OR SALE

***KEELE & FINCH***

Beauty Care, computer repair service, insurance service & accident injuries, traffic ticket, bankruptcy service, acupuncture service, pawn brokers போன்ற வர்த்தகங்கள் நடத்தக்கூடிய இடம் குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 416.992.7989

# TUITION

***MCLEVIN & TAPSCOTT***

Behind Malvern mall. Math & English (JK - Grade 3). Homework help. Preparing kids for JK. 3 Classes a week $50 per month. தொடர்புகளுக்கு: 416.332.1254

# TUTORING

**BRIMLEY & LAWRENCE**

For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS. ***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff. தொடர்புகளுக்கு: ***416.669.3101***

## காணி விற்பனைக்கு

# LAND FOR SALE

About 3 lachchams of prime land, situated at Power House Road #5, 2nd lane, just behind Jaffna Teaching Hospital & Gnanams Hotel, near Jaffna main bus station and all Banks with facilities for underground (well) water, disposal of waste etc., is available for sale. ***514-684-2798 or 917-301 8796 or*** Email: RAGUMAR@MSN.COM with your offers.

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியில் சுமார் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. கிணறு மற்றும் தண்ணீர் தாங்கியுடன் உள்ளது. யாழ்ப்பாணம் டவுன் ரவுனிலிருந்து 9 நிமிட தூரத்தில் உள்ளது. மேலதிக தொடர்புகட்கு 416-450-6833 அல்லது 905-887-7457.

## தேவை

58 வயதுடைய (270 lbs) விவாகரத்து பெற்ற கனடாவில் வாழும் கனேடிய பெண் பிரஜை வலிமையுடைய ஆண்மகனைத் தனக்கு உதவிக்காக தேடுகிறார். தொடர்புகளுக்கு: 416.269.3756

# JOB JOB JOB

***KENNEDY & ELLESMERE***

சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு: 647.430.8238

# SPRINGBOARD DIVING

Learn to dive Pearson pool. Wednesday 7:00pm - 8:00pm. $175.00 (10 Weeks) For more Information Re spring registration Contact: 416.208.0606

## SAREE BLOUSE



**அனைத்து தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:905.492.0259

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்

**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

# CAR FOR SALE

Toyota Camry 1999 for sale. Four door. Model - LE. 280,000km. Contact: 647.346.0539

# CARS FOR BUY & SELL

2005 Corolla, 2001 Toyota Sienna, 1997 Honda Civic, 1995 Honda Accord கார்கள் விற்பனைக்கு உண்டு. கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. அத்துடன் ***Van*** வாடகைக்கு ஓட்டப்படும். அழையுங்கள் : ***416.625.4146***





# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 275

(1) Since 4 students belong to neither club, there are 29 students who belong to the mathematics club, the science club or both clubs. The number belong to the mathematics club or the science club or both is 18 + 17 = 35. Total number belong to both clubs is 35 - 29 = 6.

(2) Lim x—> 0 (√x + 1 - √2x + 1) / (√3x + 4 - √ 2x + 4)
= (√x + 1 - √2x + 1 (√x + 1 + 2 √( x + 1) x √3x + 4 + √2x + 4) / (√3x + 4 - √2x + 4) (√3x + 4 + √2x + 4) (√x + 1 + 2 √x + 1)
= Lim x-> 0 (x + 1 - 2x - 1) / (3x + 4 - 2x - 4) x (√3x + 4 + √ 2x + 4) / (√x + 1 + √2x + 1)
= 2 + 2 /1 + 1 = 2

(3) f(x) = 2x - 7, $f^{-1}(x)$ = x + 7/2
$f^{-1}$ o f = $f^{-1}$ (2x - 7)
= 2 (x + 7/2) - 7
= x

f o $f^{-1}$ = f (x + 7/2)
= 2x - 7 + 7/2 = x

(4) A triangel with vertices A (7, 3, 4), B(1, 0, 6) and C(4, 5, -2)
Two sides are defined by AB = (-6, -3, 2) and AC = (-3, 2, -6)
AB X AC = 14, -42, -21 = 7 (2, -6, -3)
|AB X AC| = 7 √4 + 36 + 9 = 49
Area of tringle = 1/2 AB X AC =49/2

(5) Given the vector U = (17, -3, 8)
(a) The projection of u on to each of the cordinate axes is 172 - 3j and 8K

(B) The projection of u = (17, -3, 8) on to the XY plane (17, -3, 0) on to the XZ planes (17, 0, 8) and on to the YZ plane is (0, -3, 8)

### Tutorial 276 Questions

(1) Four students share $160. AL and bob receive 1/10 and 1/5 of the total respectively. Carl receives the average of what AL and Bob got. If Dave collects the remaining money, determine how much his share is. (For Gr. 7 & 8)

(2) Determine the real values of a, b & c for the quadratic function
f(x) = $ax^2$ + bx + c, a ≠ 0, that satisfy the condition f(0) = 0, Lim f(x) = 5 and Lim / x 2 f(x) = 8. (For Gr. 11 & 12)

(3) A spaceship approaching touch down on a distant planet has height h, in metres, at time t, in seconds, given by h = $25t^2$ - 100t + 100, when and with what speed does it land on the surface. (For Gr. 11 & 12)

(4) Find — so that the vectors. vector i + vector j + vector k and vector i - vector2j + vector k are perpendicular . (For Gr. 11 & 12)

(5) Show that x. y = 1/2 ($|x + y^2|$ - $|x|^2$ - $|y|^2$).

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at *Scarborough & Stouffville*
**Contact: 647.340.9490 / 647.831.0363**

**Tutoring**
Gr.1-12; College & University
* English * French * Math * Physics * Chemistry * Biology *
- Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas
- Strict Adherence to Ontario Curriculum
- Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

GTA Tutors
Ph: (647) 705 0725
Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates

**Tutoring**
*Tutoring for students from grade 3 to 12.*
Courses include: Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English. Also tutoring available for University student.



*You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:*
Grade 3 to 5 from $30.00/month Grade 6 to 8 from $40.00/month
Grade 9 to 12 from $50.00/month Location: Near **Birchmount & Sheppard.**
For more information contact *Kula* (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at
**Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**

**மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம் நடத்தும் கணித, பொதுஅறிவுப்போட்டி - 2011**

தரம் - 1 தொடக்கம் தரம் - 12 வரை உள்ள மாணவர்களுக்கு கணித பொது அறிவுப் போட்டிகள் ரொறன்ரோவிலும் மொன்றியலிலும் 2011, பங்குனி 6ம் திகதி (March 06, 2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கின்றன. தகுதி பெற்றவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களையும், மேலதிக விபரங்களையும் **www.mahajanan.org** என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 416 705-1493 647 989-6477
905 940-2962 416 451-8427
416 671-8742



**யோகா சோதிடம்**
- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

# புத்திசாலி அணிலும் முட்டாள் புலியும்

செல்வி ஒரு அணில். காட்டில் அவள் சிறிய மிருகம் என்பதால், அவளுக்கு பலம் குறைவு. ஆனால் செல்விக்கு கெட்டித்தனம் மிகவும் இருந்தது.

ஒருமுறை, காட்டு ராசாவாக ஒரு சிங்கம் இருந்தது. அது மிருகங்களை கொடுமைப்படுத்தியது. ஆனால் ஒரு புலி தனது பலத்தினால் அந்த சிங்கத்தை கொன்று விட்டது. அன்றுமுதல் அதுவே காட்டு ராசா. அதுக்கு நிறைய பலம் இருந்தாலும், அது ஒரு முட்டாள். இந்த விடயம் மிருகங்களுக்கு பிடிக்கவில்லை. எப்படி புலியை விரட்டி விடுவது என்று தெரியாமல் யோசித்தார்கள்.

சண்டை போட்டு அதை வெல்ல முடியாது. விவேகத்தினால் தான் வெல்ல முடியும். எனவே, மிருகங்கள் செல்வியிடம் போனார்கள். 'என்ன செய்யலாம், செல்வி?' என்று கேட்டார்கள். செல்வி யோசித்து, திட்டம் ஒன்று கூறினாள். மிருகங்கள் அதன்படி நடந்தன.

அடுத்த நாள், புலிக்கு ஒரு பெரிய கொண்டாட்டம் நிகழ்ந்தது. புலி மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்த நேரத்தில், செல்வி ஓடி வந்தாள். 'புலி மகாராசா, நான் ஒரு மனிதனை கண்டேன் என்றாள்.

புலி ஆச்சரியப்பட்டது. 'நீ கூறுவது உண்மையா, சின்ன பிராணியே?"

'ஓம், நான் கூறுவது, முற்றுமுழுதாக உண்மை!. ஏன் நான் உங்களை ஏமாற்ற வேண்டும்? நான் இங்கே வரும் வழியில் அதைக் கண்டேன் வாருங்கள்"



'கதையை நிறுத்து!' என்று புலி தடுத்தது, 'எனக்கு தெரியும் நீ எனக்கு முன் செல், அணிலே, நான் பின்னால் வருகிறேன்.
'இந்த மனிதனை நானே ஒருகை பார்க்கிறேன்!' என்று புலி கூறியது.
'ஆயினும் மன்னா, அதனை பார்க்க ஒரு பொல்லாத மனிதன் போல் தெரிகி...' என்று அணில் கூறிமுடிக்க முன்

'நான் வலிமை குறைந்தவன் என்றா நினைக்கிறாய்?' என புலி கோபத்துடன் கேட்டது.

"இல்லை இல்லை! நான் எவ்வாறு அப்படி கூறமுடியும் அரசனே?"
'அப்படி என்றால் முன்னுக்கு செல்!' என்று புலி கூறியது.

செல்வி வழிகாட்டினாள். வழியில் சில மிருகங்கள் கதைப்பது கேட்டது.
'அந்த மனிதனை கண்டீர்களா?' என்று ஒரு நரி கேட்டது.

'இல்லை! ஆனால் எங்கள் மன்னன் அதை கொல்லப் போகிறார் என்று செய்தி கேட்டேன்,' என்று காகம் பதிலளித்தது.

'அதோ! மன்னர் வருகிறார்!' என்று பாம்பு கூறியது.

செல்வி ஒரு குகையை காட்டினாள். 'இங்கே தான் அந்த மனிதன் இருக்கிறார்'.
புலி உள்ளே சென்றது.

அக்குகைக்குள் உண்மையாக மனிதன் இல்லை. இரண்டு மான்கள் மனிதன் வேடத்தில் தடியுடன் இருந்தன. ஆனால் புலி, வேடன் ஒருவன் துப்பாக்கியுடன் நிற்கிறான் என்று நினைத்து மிகவும் பயந்து போனது. வெளியே ஓடி விடப் பார்த்தது. அப்போது அந்த 'மனிதன்' கூறினான், 'நீ திரும்பி ஓடிவிடு. இனி ராசா ஆக இருக்காதே!".
புலி காட்டை விட்டு ஓடியது. மிருகங்கள் மகிழ்ச்சியாக இருந்தன.

***நீதி: முயற்சி செய்தால், பலன் கிடைக்கும்.***

**ஞா. ஆரணி**
அகவை 12

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# அன்னைத் தமிழ்மொழி

**இனிமையான மொழி**
**இன்பம் பயக்கும் மொழி**
**தொன்மையான மொழி**
**தொல்தமிழர் வளர்த்த மொழி**

**தமிழர் வணங்கும் மொழி**
**தரணி போற்றும் மொழி**
**உயிரெனக்கு என் மொழி**
**உண்மையான எம் தமிழ்மொழி**

**செம்மையான மொழி**
**செந்தமிழர் போற்றும் மொழி**
**கலைகள் நிறைந்த மொழி**
**கடவுள் தந்த மொழி**

**மூவேந்தர் வளர்த்த மொழி**
**மூத்த எம் தமிழ் மொழி**
**அன்பு தாய்மொழி**
**அன்னைத் தமிழ் மொழி**



**திவ்யா பிரபாகரன்**
அகவை 11


## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## மகுடம் - 2011
## பல்சுவை கலை நிகழ்வு

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாவின் 17வது ஆண்டு நிறைவையொட்டி 'மகுடம் 2011' பல்சுவை கலை நிகழ்வு

காலம் : ***March 26th , 2011***

இடம் : Winston Churchill கலையரங்கம்
2239 Lawrence Avenue East, Scarborough, ON

நேரம் : மாலை 5 மணிக்கு

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு :- எமது இளையோர் அமைப்பில் அங்கத்தவராக இணையும் 100 பேருக்கு மகுடம் 2011 அனுமதிச் சீட்டு இலவசமாக வழங்கப்படும்.

இணைபவர்கள் கொ.இ.க.பழைய மாணவர்கள் அல்லது பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்களின் வாரிசுகளாகவும், 15 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். ***khcosacanada@hotmail.com*** என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் விபரங்களை அனுப்பி வைக்கலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
சு. மகேந்திரன் - ***416-296-7037***
சி. குகனேந்திரன் - ***905-554-3306***
ஆ. மனோகரன் - ***416-788-7102***

# கடவுளின் வியத்தகு மருந்தகம்

## மின்வலையில் வந்தவை - 10

கடவுள் மனிதனைப் படைக்கு முன், உப்பு நீரிலிருந்து நன்னீரைப் பிரித்து ஒரு வறண்ட நிலத்தை ஏற்படுத்தி ஒரு தோட்டம் அமைத்துப் பின் மீன்களையும் விலங்குகளையும் படைத்தார். நாம் பிறப்பதற்கு முன்னரே எமக்குத் தேவையானவற்றைக் கொடுத்தார். இவற்றை நாம் பச்சையாகச் சாப்பிட்டால் கூடியளவு போசாக்குள்ளனவாய் இருக்கும்.

எமது உடலின் எந்தப் பகுதிக்கு எந்த உணவு சிறப்பானது எனக் கடவுள் குறிப்பால் உணர்த்தி உள்ளார். ஆனால் நாம் அதை உணராமல் நடக்கிறோம். நறுக்கிய ஒரு கரட்துண்டு எமது கண்போல் காட்சியளிக்கும். கண்விழி, நடுமையம், அதிலிருந்து ஆரையாகச் செல்லும் கோடுகள் யாவும் கரட்துண்டில் தெரியும். விஞ்ஞான ரீதியாக கரட் கண்ணின் இரத்த ஓட்டத்துக்கும் செயற்பாட்டுக்கும் மிகவும் உகந்தது என அறியப்பட்டுள்ளது.



அடுத்து தக்காளிப்பழம், இது நான்கு சிவப்பான அறைகளைக் கொண்டுள்ளது. இவ்வாறே எமது இதயமும் சிவப்பான நான்கு அறைகளைக் கொண்டுள்ளது.



தக்காளியில் லைக்கோபைன்ஸ் என்ற சத்துப் பொருள் நிறைய உள்ளதென்றும் இது எமது இதயத்துக்கும் இரத்தத்துக்கும் தேவையானது என ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.



மேலும் திராட்சைகள் குலையாகத் தொங்கும். இவை எமது இதயத்தைப் போன்று காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு திராட்சைப் பழமும் எமது இரத்தக் கலம் போல் காட்சியளிக்கின்றது. எமது இதயத்துக்கும் இரத்தத்துக்கும் தேவையான சத்து திராட்சையில் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

ஒரு வோல்நற் (Walnut) எமது மூளையின் வலது, இடது அறைப் பாகங்களையும், மேலே ஓடு போன்ற பகுதியையும் கீழே செறிபெல்லம் (Cerebellum) எனப்படும் பகுதியையும் கொண்டுள்ளது. மேலும் இவ்விதையிலுள்ள சுருக்கங்களும் மடிப்புகளும் எமது மூளையின் மேற்கவசம் (Neo Cortex) போன்றே காட்சி அளிக்கின்றன. இந்த 'வோல்நற்' எமது மூளையின் செயற்பாட்டுக்குத் தேவையான ஒட்சிசன் நரம்புக்கடத்திகளின் அபிவிருத்திக்கு உதவுகின்றது.



அடுத்து 'கிட்னி பீன்ஸ்' எனப்படும் பயற்றம் விதை எமது சிறு நீரகம் சிறப்பாக இயங்குவதற்கு உதவுகின்றது. அது எமது சிறு நீரகத்தைப் போன்றே இருப்பதைக் கவனிக்க.



- துறையூரான் -

செலறி (Cellary), பொக் சோய் (Bok Choy), றுபாப் போன்றவை எமது எலும்புகளைப் போன்றே காட்சியளிக்கின்றன. இவ்வுணவுகள் எமது எலும்புகளுக்கு வலுவூட்டுகின்றன. எமது எலும்புகள் 23% சோடியத்தாலானவை. உங்கள் உணவில் போதிய சோடியம் இல்லாது போனால் எமது உடல் எலும்புகளிலிருந்து சோடியத்தைப் பெற, எலும்புகள் வலுவிழந்து போகின்றன.





இவ்வுணகள் எமது எலும்புக்குத் தேவையானவற்றை எமது உடலுக்கு வழங்குகின்றன.

அவகடோ பழம் (Avocado), கத்தரிக்காய், பியர்ஸ் போன்றவை பெண்களின் கருப்பைக்கும் கருப்பைக் கழுத்துக்கும் தேவையான நலத்துக்கும் செயற்பாட்டுக்கும் உதவுகின்றன. மேலும் இவற்றின் உருவங்கூட அவ்வுறுப்புகளைப் போன்றே உள்ளன. ஒரு பெண் ஒரு அவகடோவை ஒவ்வொரு வாரமும் சாப்பிட்டு வந்தால், கற்பத்தால் ஏற்பட்ட மேலதிக நிறை குறைவடைவதுடன் ஹோமோன் சமநிலையும் பேணப்படுகிறது என்றும் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயையும் தடுக்கிறது என்றும் ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. பூவிலிருந்து அவகாடோ பழம் பழுப்பதற்கு 9 மாதங்கள் செல்லும். மேற்கூறப்பட்ட பழங்கள் ஒவ்வொன்றிலும் 14,000 ஒளியின் உதவியால் பிரியும் போசாக்குள்ள இரசாயன பதார்த்தங்கள் இருப்பதாக அறியப்படுகிறது. (ஆனால் நவீன ஆய்வுகள் 141ஐ மட்டுமே அறிந்து பெயரிட்டுள்ளன).



அத்திப்பழங்கள் நிறைய விதைகளைக் கொண்டிருக்கும். வளரும்போது இரண்டு, இரண்டாகத் தொங்கும். இப்பழம் ஆண்விந்தின் அசைவை அதிகரிக்கச் செய்வதுடன், விந்துக்களின் எண்ணிக்கையை அதிகரித்து ஆண் மலட்டுத்தன்மையை நீக்கும்.



வத்தாளை அல்லது சீனிக்கிழங்கு எமது கணையம் (Pancreas) போன்று காட்சியளிக்கும். இது நீரிழிவு நோயின் இரத்தச் சீனியைச் சமநிலைப்படுத்த வல்லது. எனவே இதைச் சாப்பிட்டுப் பயனடையுங்கள்.

பெண்களின் கருப்பையின் ஆரோக்கியத்துக்கும் நலத்துக்கும் ஒலிவ் சாப்பிடுங்கள். தோடம்பழம், கிறேப்பழம், தேன்தோடை போன்றவை, பெண்களின் மார்பகங்களைப் போன்றே காட்சியளிக்கின்றன. இப்பழங்கள் மார்பகங்களின் நலத்துக்கு உதவுவதுடன், இவற்றில் நிணநீர் அசைவதற்கும் உதவும்.

வெங்காயம் எமது உடலின் கலங்களைப் போன்றிருக்கிறது. எமது உடற்கலங்களிலுள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்கு வெங்காயம் உதவுவதாக ஆய்வுகள் காட்டுகின்றன.



மேலும் வெங்காயம் எமது கண்ணின் மேற்புறப்படைகளில் கண்ணீரை ஏற்படுத்திக் கழுவும். இவ்வாறே இதன் சகபாடி வெள்ளைப் பூடும் கழிவுகளை அகற்றுவதற்கும், அபாயகரமான சுயாதீன மூலப்பொருள்களை அகற்றுவதற்கும் உதவுகின்றது.

இவ்வுணவுகளை உண்டு சுகதேகிகளாக வாழுங்கள்.

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# இன்னொரு... ஆச்சி வீடு

பாகம் - 3
பகுதி 14

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

இன்னொரு முதற்பகுதியில் பரபரப்பைக் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். மூன்றாம் பகுதியில் பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

## ஆச்சிவீடு எரிந்து ஐம்பது ஆண்டு ஆகிவிட்டது.

இனியனுக்கு 58 வயது ஆகிவிட்டது. தலைமயிரில் ஒன்றிரண்டு நரைமயிர்கள் எட்டிப் பார்க்கத் தொடங்கிவிட்டன. முகத்திலும் இளமைத் துடிப்பின் பளபளப்புக் குன்றிக் காணப்பட்டது. இனியனின் 23வது வயதில் நாயகம் தம்பதிகள் கனடா வந்துவிட்டார்கள். சென்ற வருடம்தான் நாயகம் காலமானார். திலகம் இனியனுடனேயே இருக்கின்றாள். அவளுக்கு இப்போது 79 வயது. நன்றாகத்தான் இருக்கின்றாள். கண்களின் பார்வைதான் சற்றுக் குறைவு. எதனையும் தெளிவாகப் பார்க்கமுடியாது. ஆட்களைக் கூட பார்வையால் இனங்காண முடியாத நிலையில் இருக்கின்றாள். குரலை வைத்துக் கொண்டுதான் ஆட்களை அவளால் இனம் காணமுடிகின்றது.

◊ **சி.வி. நாதன்** ◊

இராமலிங்கமும் கனடாவில்தான். அவனது பிள்ளைகளுக்கும் விவாகம் முடிந்து, அவர்களும் குழந்தை குட்டிகள் என நன்றாகவே இருக்கிறார்கள். இடைக்கிடை தமக்கையாரைப் பார்க்க வருவான். அவனின் செல்லப்பிள்ளை இனியனுக்கு மாமனில் இப்போதும் நல்ல பிரியம். இனியனுக்கும் திருமணமாகி விட்டது. காதற் திருமணம்தான். ரேவதியை இரண்டு வருடங்களாக இரகசியமாய் காதலித்து வர, நாயகம் இருவரையும் தம்பதிகளாக்கி விட்டார். அடுத்த வருடமே இன்பவேல் பிறந்து விட்டான். காணாமற் போன தனது சகோதரன் நினைவாக அப்பெயரை வைத்தானோ தெரியவில்லை. எல்லோரும் அவனை வேல் என்றழைக்க, இனியன் மட்டும் மகனை இன்பன் என்று அழைப்பான். அவர்களுக்கு இன்பவேலுடன் ஒரு மகளும் இருக்கின்றாள்.

இனியன் கனடாவின் விரல் விட்டு எண்ணக் கூடிய பெரும் தமிழ்ப் பணக்காரர்களில் ஒருவனாக இருக்கின்றான். கனடியர்களின் முறையில் சொல்வதெனில் மல்ரி மில்லியனர். வெகு விரைவில் பில்லியனர் ஆகவும் மாறக் கூடிய சாத்தியம் உண்டு என ஊரில் தெரிந்தவர்கள் கதைக்கின்றார்கள். உண்மை பொய் தெரியாது. நாயகத்தினதும் இனியனினதும் தளராத கடின உழைப்பின் பெறுமதிதான் இன்று இனியனை இந்த நிலைக்கு உயர்த்தியது. இருப்பினும் இவர்களது உயர்ச்சியை இராமலிங்கம் மட்டும் நீலகண்டர் கூறியவற்றுடன் இடைக்கிடை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வான். நீலகண்டரின் கணிப்பு சரியானதுதான் போலும் என அவனது மனம் சொல்லிக் கொள்ளும்.

சொத்துக்கள் நன்கு பகிரப்பட்ட வகையில் உள்ளதனால் சிதைவுற்றுப் போவதற்கான காரணங்கள் எதுவும் இல்லை. தனது பெயரிலும், மனைவி பெயரிலும் பிள்ளைகளின் பெயரிலுமாக சொத்துக்களை வைத்திருக்கும் இனியனுக்குப் பணக்காரத் தன்மை சிறிதும் கூட இல்லை. தனியாக ஒரு நிறுவனத்தை நடத்திக் கொண்டிருக்கும் இனியனிடம் 200 க்கும் அதிகமான ஆட்கள், பலதரப்பட்ட நிலைகளிலுமாக வேலை பார்க்கின்றார்கள்.

ரிச்மன் கில் பகுதியில் பெரியதாய் ஒரு வீட்டில் அமைதியாக வாழும் இனியன், இப்பவும் ஒரு தடவையாயினும் இடதுகையை கொஞ்சமாய் உயர்த்தி வலதுகையால் அந்தத் தழும்புகளைத் தடவிப் பார்த்துக் கொள்வான். அப்போதெல்லாம் என் உடன் பிறந்தனும் இப்ப இருந்திருந்தால்? என்ற எண்ணம் ஓடிவரும். சனி, ஞாயிறு தவிர்ந்த ஒவ்வொரு நாளும் தனது நிறுவனத்திற்கு சென்று 3 மணிக்கு வீடு திரும்பிவிடும் வழக்கத்தைக் கொண்டிருந்த இன்பன், வெள்ளிக் கிழமைகளில் மாத்திரம் 5 மணி வரை நிறுவனத்தில் நின்று பின்னர் வீடு திரும்பும் வழக்கத்தினைக் கொண்டிருந்தான். சனியும் ஞாயிறும் வீடுதான். ஏந்தவொரு வேலையுமில்லை.

இன்பவேலுக்கு 27 வயதாகிவிட்டதே! ம், சரி, இனி ஒரு கால்கட்டுப் போடத்தான் வேண்டும். தகுதியான மருமகளைத் தேடத் தொடங்கியிருந்தான் இனியன்.

- இன்னமும் வரும்

*வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.*





ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்




இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

**Tel: 647-707-8671 / 416-829-4004**

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall)
Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi, English, Telugu & Other indian languages

# அக்கா பரீட்சைக்குப் போகிறா?

நம் நாடு சுதந்திரம் அடையும்வரை கல்வித்துறை அரசாங்கத்துள் கட்டுப்பட்டிருந்தது. சகல சமயத்தைச் சேர்ந்த பாடசாலைகளும் மாணவரிடம் மாதாமாதம் பணம் அறவிட்டு வந்தன. அது மாத்திரமல்ல 8ஆம் வகுப்புவரை படித்து அதன் பின் ஆசிரிய பயிற்சிக்கலா-சாலைக்குச் செல்லவேண்டும்.

வைதீகப் பெற்றோர் மாணவிகளைப் படிக்க வைக்க ஆவல் கொண்டனர். "பெண்களுக்கு எழுத்தறிவு கொடுப்பது நம்மரபு அன்று" எனும் கொள்கை காலமாற்றத்தினால் மெல்லமெல்ல நழுவியது. கல்விச் சீர்திருத்தக் குழுவின் விதப்புரைப்படி, சுதந்திர வேட்கை கொண்ட மந்திரி கன்னங்கரா, இலவசக்கல்வியை நடைமுறைக்கு கொண்டுவந்தார். எட்டாம் வகுப்பு வரையே நடத்தப்பட்ட பாடசாலைகளின் கல்வியாண்டைப் பத்தாம் வகுப்புவரை நீட்டினார். அதன்பின் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை செல்லவேண்டும்.

1940 ஆம் ஆண்டளவில் இலவசக்கல்வி நடைமுறைக்கு வந்தபோது எமது ஊரில் சைவத்தமிழ்ப்பாடசாலை ஒன்று எட்டாம் வகுப்புடன் 400 மாணவ மாணவியரோடு இயங்கி வந்தது. எஸ். எஸ். சீ எனும் 10ஆம் வகுப்புக்கு ஆட்சேர்க்க முகாமையாளர் முனைந்தார். அக்காலகட்டத்தில் சமூக உணர்வும் உறவுமுறைகளும் தடம்புரளாத கிராமங்கள் அவை.

எங்கள் பெரியப்பா குடும்பமும் எங்கள் குடும்பமும் எல்லை இருந்தாலும் வேலி போடாத நீண்ட பெரும் 30 பரப்பு காணி. வடகிழக்கு மூலையில் அவர்கள் வீடும் தென்மேற்கு மூலையில் எங்கள் வீடும் அமைந்திருந்தன. அக்கா பிறந்தது இரு தகப்பனுக்கு கூடாதாம் என இரண்டு வயதில் கோவிலில் அள்ளு காசும், தென்னம்பிள்ளையும் கொடுத்து அம்மாவின் தந்தை தத்தெடுத்தாராம். இரு வீடுகளிலும் மாறிமாறித் தங்குவா.

எங்கள் வீட்டில் அப்பா, ஆச்சி, அம்மா, அப்பு, ஏழு வயதான அடியேன், 2 வயதான தங்கை என நாற்சார் வீட்டில் வசித்தோம். பெரியப்பா வீட்டில், பின்னர் பிறந்த இரண்டு குழந்தைகளை விட நாலு பெண், மூன்று ஆண் குழந்தைகள், பெரியப்பா, பெரியம்மா, இவர்கள் இருவரதும் கணவனை இழந்த தாய்மார் இருவர். பிள்ளைகளெல்லாம் அயல் வீட்டு பிள்ளைகளோடு கலட்டி, வளவு, எங்கள் வீட்டு முற்றம் எல்லாம் ஓடித்திரிந்து விளையாடி சண்டை பிடித்து மல்லுக்கட்டுவார்கள். அம்மா என்னை அவர்களோடு சேர்ந்து விளையாட அனுமதிக்கமாட்டார். அம்மா ஆங்கில பாடசாலையில் 5 ஆம் வகுப்புவரை படித்த வீட்டின் ஒரேயொரு பிள்ளை. அதனால் என் கல்வியில், பழக்கவழக்கத்தில் கவனமாக இருப்பார்.

பெரியம்மாவின் வாழ்க்கை கர்ப்பிணி, குழந்தைப்பேறு, பாலூட்டும் காலம், உடனே கர்ப்பிணி எனச் சுழல் வட்டம். வீட்டுவேலை, சமையல் எல்லாம் அம்மாச்சியும் அப்பாச்சியும் தான். கரைச்சல் என்று பிள்ளைகளை துரத்தி விடுவார்கள். பெரியக்காவை நான் கமலக்கா என்று கூப்பிடுவேன். அவ எந்தநேரமும் எங்கள் வீட்டில் தான். அம்மாவுக்கு வரும் இந்திய சஞ்சிகைகளை வாசிக்கவும் என்னோடு செல்லம் பொழியவும், ஆச்சியிடம் பழங்கதை கேட்கவும் அவவுக்கு விருப்பம். நல்ல கெட்டிக்காரி. எட்டாம் வகுப்பு பாஸ் பண்ணியவுடன் வீட்டில் நின்றுவிட்டா.



இலவசக்கல்வி வந்த பின் ஒருபகுதி ஈழத்துப் பெண்களின் கல்வி நிலைபற்றி படம்பிடித்துக் காட்டுகின்றது.

அடுத்த சொர்ணாக்காவும் அவவும் கெட்டிக்காரிதான். அப்போது 7ஆம் வகுப்பு. அவவுக்கு அக்கா மீது எரிச்சல், பொறாமை, ஏட்டிக்குப் போட்டி. தாய்மீது வெறுப்பு. "அதுதானே பார்த்தன் இன்னும் நெல்லிக்காய் தேடயில்லை" என்று நக்கல் அடிப்பா. பெரியம்மா எது சொன்னாலும் செய்யமாட்டா. அம்மாவிடம் கேட்டுப் படிக்கப்போகிறேன் என்று அவவும் இங்கே வந்து விடுவா.

மாமியின் மகன் அரசாங்கத்தில் உத்தியோகம். கமலக்காவுக்கு கணவனாக வரவேண்டியவர். அவர் தன் தாய்க்கு எழுதிய கடிதத்தில் கமலக்காவை எஸ். எஸ். சீ படிக்க அனுப்பட்டாம். தான் மாற்றலில் வெவ்வேறு ஊர்களுக்குப் போகும் போது சகல சமூகத்தவரோடும் பழக, உபசரிக்க முடியுமாம். அறிவு கூடினாத்தான் அனுசரிக்க முடியுமாம்.

இதை மாமி சொன்னபோது பெரியப்பா சொன்னராம் "ஒவ்வொருத்தனும் கலியாணங் கட்டிப்போட்டு சிங்கப்பூர் மலாயா இந்தியா என்று போறாங்கள். அதுபோல வருடத்துக்கு ஓரிரு தடவை லீவெடுத்து வரலாமே" மாமிக்கு கோபம் வந்திட்டுதாம். "அப்படி நீயும் போறதுதானே. உனக்கு ஒரேயொரு வேலை. வருடம் தவறாமல் பிள்ளைபெறவேண்டும். கடவுள் தந்தது என்று மாய்மாலம் கொட்டாமல் வேலை தேடிக் கொண்டு நீயும் போடா. அப்ப எந்தக் கடவுள் வாறாரென்று பார்ப்பம்." என்று கத்தினாவாம். பிற்காலத்தில் ஆச்சி எனக்குச் சொன்னார்.

எட்டாம் வகுப்பு சித்தியடைந்த மாணவரைத் தேடிப்பிடித்து 5 பெண்களையும் 3 பையன்களையும் சேர்த்தார்கள். அன்றோடு அத்தானின் விருப்பப்படி எங்கள் வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்ட கமலக்கா, இரவில் தனது பாடங்களை என்முன் ஒப்புவிப்பா. பெண்களுள் அக்கா கமலாவதி, நல்லம்மா, பொன்னம்மா, அன்னமுத்து, சின்னம்மா என ஐவரும்; கமத்தொழிலில் ஈடுபட்டிருந்த தம்பிராசா, மீன் விற்றலில் தந்தைக்கு உதவி செய்த லோறன்ஸ், மாடு கன்று பார்த்த பெருமாள், எட்டுப்பேரும் வகுப்பில் இருந்தார்கள்.

இராமநாதன் கல்லூரி போல் அரைத்தாவணி போடவில்லை. நடுத்தர வர்க்கத்தினர் போல இடுப்பில் ஒரு லங்காச்சேலையும் மேலே இடுப்பளவு வெள்ளைச் சட்டையும் போடுவார்கள். ஐந்து பேரும் ஒன்றாகவே திரிவார்கள். கீழ்வகுப்பு பெண்களோடு கூடக் கதைக்கமாட்டார்கள். லங்காச்சோலை 3, 4 நிறத்தில் வரும். நீலம், பச்சை என சொல்லி வைத்து ஒரே நிறத்தில் அணிந்து வருவார்கள். தற்பெருமை பிடித்தவர் போல தம்முள் இரகசியமாக கதைத்துக் கொண்டு குஞ்சுப்பெட்டி என சொல்லக்கூடிய பனையோலையில் இழைத்த சிறு மூடல் பெட்டிக்குள் ஏதேன் உணவு, தத்தம் பாட்டில் உண்பார்கள். ஆசிரியர்களும் அநாவசியமாகக் கதைப்பதில்லை. ஆனால் எல்லோரையும் சித்திபெறவைக்க வேண்டும் எனும் வெறியோடு அர்ப்பணிப்பாக செயல்படுவார்கள். பையன்களுக்கு அவ்வளவு சிரத்தை இல்லை. நளவெண்பா அக்கா பாடமாக்குவா. 2 தரம் கேட்டால் 3ஆம் முறை நானே சொல்லுவேன். வகுப்பில் பாடம் ஒப்புவிக்கும் போது பையன்கள் சொல்லமாட்டார்கள். பெட்டைகள் ஆசிரியர்களிடம் முணுமுணுப்பார்கள். எனது வகுப்புக்கு ஆள் வந்து அழைத்துச் செல்லும். ஆசிரியர் சந்திரோதயம் பாட்டை சொல் என்பார். "கானெல்லாம் மலர்ந்த முல்லை" என இராகத்தோடு ஒப்புவிப்பேன். பின்வாங்கிலே ஏறிவிட்டு அவர்களை குட்டு என்பார். பாவங்கள் எப்படி குட்டுகிறது. பெருமாள் அண்ணை தலையை இன்னும் குனிந்து தருவார். மேலாலே குட்டுவேன். "ஊன்றிக் குட்டு" என்று கட்டளை. "காற்று வீசின மாதிரி இருக்கு. ஊன்றிக் குத்துங்கோ என பெருமாள் தலையை இன்னும் குனிவார். பெரிய ஆட்களுக்கு அடிக்கக்கூடாதல்லவா. எனவே எனக்கு கை நோகுது, என்று சொல்லி இறங்கிவிடுவேன். கணக்குப் பாடத்துக்கும் கூப்பிடுவார்கள். அண்ணை அவைக்கு எட்டாம் வாய்ப்பாடே தெரியாது.

பரீட்சை வந்துவிட்டது. பரீட்சை நிலையம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி. இரண்டு வீடும் கலந்து ஆலோசிக்கினம். பெரியம்மா 'பிள்ளை, அவளின்ரை மூன்று கல்லு தோடுதானே, உன்ரை தோட்டைக்குடன்' அம்மா முழுசிக்கொண்டு ஆச்சியைப் பார்க்கிறா. அது 10 கல்லு வைரத்தோடு என்பது இவர்களுக்கு தெரியாது. 'அது நல்ல முழிப்பான தோடு, நல்லாய் மினுங்கும். விருப்பமில்லாவிட்டால் விடு' - பெரியம்மா. "சரி கொடு, நாங்களும் கூடத்தானே போறோம்." அப்பு.

அம்மாவின் தோட்டைப் போட்டதும் பெரியம்மாவுக்கு ஒரு மாதிரி வந்திட்டுது. உடனே வீட்டைபோய் தன் பூட்டுக்காப்பு இரண்டையும் எடுத்திட்டு வந்திட்டா. இது இப்ப நாகரிகமில்லை என்று அக்கா அழ, 'ஏழை சொல் அம்பலம் ஏறாது' என்று பெரியம்மா கலங்க, அக்காவுக்கு இரகசியமாக கண்ணைக் காட்டிப்போட்டு ஆச்சி காப்பை போட்டு விட்டா. பெரியம்மாவின் தாய் பெரியாச்சியிடம் காருக்குள்ளே அதை கழற்றி அவவை வைத்துக்கொள்ளுமாறு இரகசியமாகக் கூறப்பட்டது. எங்கள் அம்மாவின் இரட்டைப்பட்டுச் சங்கிலி முத்தும் பென்ரனோடு கொடுக்கப்பட்டது.

"உதையெல்லாம் பாக்கிறியள் எழுதுறத்துக்கு என்ன மாதிரி ஆயத்தங்கள்." கேட்டார் என் அம்மாவின் தந்தை. "எங்கடை மேசையில் ஒரு மூலையில் ஒரு தூவாரம் இருக்கிறது. அதற்குள் அளவான மைக்கூடு ஒன்று போட்டிருக்காம். அதற்குள் மை விட்டிருக்காம். தடிப்பேனா கொண்டுபோய் அதில் தொட்டு எழுத வேண்டும். G நிப் இரண்டும், சித்தப்பா புதுக்க வாங்கி வந்த வாழைக்காய்ச்சி கூர் இரண்டும் கொண்டு போறேன். G நிப் புதிசிலை மெல்லிசாகத் தான் எழுதுறது. வாழைக்காய்ச்சி கூரில் கொஞ்சம் மை உள்ளே இருக்கும். ஒருக்கால் தொட்டால் ஒருவரி எழுதலாம். இன்னும் எழுதிப்பார்க்கவில்லை."

"ஒருக்கால் எழுதிப்பார்." சித்தப்பா கூறினார்.

தாள் ஒன்றில் பிள்ளையார் சுழிபோட்டு, குருநாதர் துணை போட்டு சின்னத்தம்பி அவர்கள் என் சித்தப்பா என்றெழுதிக் காட்ட அம்மா சிரித்துக்கொண்டே அந்த துண்டை ஒவ்வொருவருக்கும் காட்சிப்படுத்த 'எனக்கும் காட்டுங்கோ' என்று பாய்ந்து பாய்ந்து கலைச்சுத் திரிந்த ஞாபகம்.

அடுத்தது உடைப்பிரச்சனை. தமிழ்நாட்டில் ஏழைகள் தொடக்கம் ஆறுமாதக் குழந்தைகள் ஈறாக தாவணிபோல அணிவார்கள். ஆனால் இலங்கை கடல் விழுங்கிய எச்சம். பாண்டி நாடோ சேர நாடோ தெரியாது. நடுத்தர, கீழ்மட்டங்களில் விவாகத்தின் போதுதான் நல்லநாள் பார்த்து தாவணி போடுவார்கள். 'ஆவணி மாதம் பெண்டுகள் எல்லாம் தாவணி போட்டனரே' என்பது கூறுவார்களோ. ஆவணியில் தான் நிறைய கலியாண நாள்கள் வரும். அதுவரை இடுப்பிலே பின் கொய்யகம் விட்டுக்கட்டி முகத்தலைப்பை கொய்யகத்தை மூடி மேற்பட்டாகக் கட்டுவர். மேல் இடுப்பளவு றவுக்கை என்று சொல்லப்படும் சட்டை போடுவார்கள். பட்டணத்துக்கு அப்படி போகலாமா? 'நல்ல நாள் பாராமல் சேலை கட்டக்கூடாது' என்பது அலசி ஆராயப்படுகிறது.

அப்பு வந்தார். எல்லாரும் கப்சிப். 'உடுவில் பள்ளிக்கூடம் போல் கால் முட்டக் கவுண் போட்டு விடுங்கோ. பிள்ளை! எத்தினையார் அறக்கீசு' வாங்கிறது?'

'நாலு யார் வாங்குங்கோ. மிஞ்சினால் லேஞ்சி தைக்கலாம். அதோடை வெள்ளை லேசும் வாங்குங்கோ' என்றார் அம்மா. அன்னமுத்தக்கா சின்னம்மாக்கா முழுத் தாவணி. நல்லம்மாக்கா பொன்னம்மாக்கா



- குறமகள்-

தொடர்ச்சி 32ம் பக்கம்

# எழு சுடராய் நின்ற சிவனே போற்றி!



**பிரமன் மாலறியாத பெருமையன்**
**தருமமாகிய தத்துவனெம் பிரான்**
**பரமனாருறை பாண்டிக் கொடுமுடி**
**கருமமாகத் தொழுமட நெஞ்சமே**

பெரியர் சிறியர் பேதம் பெருமைக்குரிய கடவுளர்களையும் விட்டு வைக்கவில்லைப் போலும். நீயா, நானா பெரியவன் என்ற பிணக்கு படைத்தற் கடவுளாகிய பிரமனுக்கும், காத்தற் கடவுளாகிய திருமாலுக்கும் இடையில் ஏற்பட்டது. பிரமா அன்னப்பறவையாக உருவெடுத்து மேல் நோக்கிப் பறந்து இறைவனது சடாபாரம் (தலைமுடி) இலங்கும் முடியை தேடிக் காணப்புறப்பட்டார். திருமால் பன்றி உரு எடுத்து நிலத்தைக் குடைந்து இறைவனது திருவடித் தாமரையான அடியை கண்டுகொள்ளப் புறப்பட்டார். இதுவே அடிமுடி தேடிய படலமாகும். மூலமூர்த்தியான சிவனது அடிமுடி அவர்களுக்கு தென்படவில்லை. எனவேதான் 'பிரமன், மால் அறியாத பெருமையன் பிறைசூடிய பெம்மான்' என்று பாடியுள்ளார் நாவரசர். இருவரின் அகந்தையை அடக்கி ஆட்கொள அவர்கள் மத்தியில் ஒளிப்பிழம்பாகத் தோன்றினார் சிவன். அச்சோதி தோன்றிய இரவே மகாசிவராத்திரியாகும். சிவனுக்குரிய விரதங்களில் மிகவும் சிறப்புடையதாகக் கருதப்படுவது மகாசிவராத்திரி விரதம். சிவனுக்குரிய சிறப்பான இரவு இதுவாகும். ஒவ்வொரு கற்பகால முடிவிலும் சிவன் பிரளயத்தை உருவாக்கி உயிர்கள் அனைத்தையும் சங்கரிக்கும் நாளே மகாசிவராத்திரியாகும். நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி, மாத சிவராத்திரி, மகாசிவராத்திரி என சிவராத்திரி ஐந்து வகைப்படும். மாசி மாதத்து தேய்பிறை பதினான்காம் நாள் (கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில்) அநுட்டிக்கப்படுவது மகாசிவராத்திரி விரதம்.

**பிரமனரியென்றிருவரும் தம்பேதமையாற்**
**பரமம் யாம் பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க**
**அரனார் அழலுருவாய் அங்கே அளவிரந்து**
**பரமாகி நின்றவா தேனோக்கம் ஆடாமோ**

என்பது மணிவாசகர் திருவாசகம்.

பிரமாவிற்கும் அரிக்கும் அகப்படாத ஆண்டவன் நீள நினைந்து அன்பில் குழைந்து அகம் நெக்குருகும் அடியவருக்கு எளிதில் அகப்படுவான் என்பது அவனது சிறப்பியல்பாகும். அகந்தைக்கு அப்பாற்பட்டவன் சிவன்.

**திருமாலும் பன்றியாய்ச்**
**சென்றுணராத் திருவடியை**
**உரு நாம் அறியவோர்**
**அந்தணனாய் ஆண்டு கொண்டான்**
**ஒரு நாமம் ஓருருவம்**
**ஒன்று மில்லாற்கு ஆயிரம்**
**திருநாமம் பாடி நாம்**
**தெள்ளோணம் கொட்டாமோ**

அன்பரால் மட்டுமே அறியக் கூடிய சோதியனான இறைவனது இணையடிகள் பக்தர்களின் தரிசனத்திற்கு மட்டுமே காட்சி தருவன. எனவே சோதியின் சோபையில் தம்மை இழந்த அரி, பிரமர் சிவனை தொழுது வணங்கினர்.

**அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன் தன்னை**
**அந்தகனுக்குக் கந்தகனை அளக்கலாகா**
**எரிபுரியுமிலிங்க புராணத் துளானை**
**எண்ணாகிப் பண்ணாரெழுத்தனானைத்**
**திரிபுரஞ் செற்றொரு மூவர்க்கருள் செய்தானை**
**சிலந்திக்கும் அரசளித்த செல்வன் தன்னை**
**நரிவிரவு காட்டகத்திவாடலானை**
**நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே**

சிவராத்திரியின் போது புறந் தூய்மையுடன், உளத் தூய்மையராய் திருவைந்தெழுத்து ஓதல், சிவன் கோயில் தரிசனம், சிவபூசை செய்தல், திருமுறைகள் ஓதுதல், கூட்டுவழிபாடு ஆகியவற்றை மேற்கொள்வது சிறந்த பலனைத்தரும். இத்தினத்தில் பசித்திருப்பதால், தனித்திருப்பதால், விழித்திருப்பதால் பரமன் அடியிணைகளின் கீழ் நிலைத்திருக்கும் பேற்றினைப் பெறலாம். அதுவே சிவலோக பதவி.

**செங்கணானும் பிரமனும் தம்முள்ளே**
**எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்**
**இங்குற்றேனென்று இலிங்கத்தே தோன்றினான்**
**பொங்கு செஞ்சடையப் புண்ணிய மூர்த்தியே**

சிவனின் இருபத்தைந்து வடிவங்களில் (மகேஸ்வர மூர்த்தங்கள்) முதலாவது வடிவம் இலிங்கோற்பவ மூர்த்தியாகும். பிரமா, விஷ்ணு இருவரும் நல்லறிவு பெற ஏற்பட்டதே இலிங்கோற்பவ மூர்த்தமாகும்.



நா. க. சிவராமலிங்கம்

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# குறள் வழியில் நிறை வாழ்வு

- நகை, ஈகை, இன்சொல், இகழாமை நான்கும்
  வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (அதி.96, பாடல் 953 )

உயர்குடியில் பிறந்தவரிடம் மலர்ந்தமுகம் பிறருக்கு கொடுக்கும் பண்பு, இனிமையான பேச்சு, பிறரை இகழாத்தன்மை என நான்கு பண்புகள் காணப்படும்.

- பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
  அணியுமாம் தன்னை வியந்து. (அதி.98 பாடல் 978 )

பெருமைக்குணம் உள்ளவர் தம்மிடம் சிறப்புக்கள் இருந்தாலும் செருக்கில்லாது பணிந்து நடப்பர். சிறுமைக்குணம் உடையவரோ தம்மிடம் சிறப்பு இல்லாத போதும் தம்மை வியந்து பாராட்டிக்கொள்வர்.

- வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
  தெய்வத்துள் வைக்கப்படும். ( அதி.5 பாடல் 50 )

இவ்வுலகில் வாழும் வழி அறிந்து வாழ்பவன் விண்ணில் வாழும் தெய்வமாகவே கருதப்படுவான். அதாவது வாழ்வுக்கு வேண்டிய நல்ல பண்புகளைப்பேணி வாழ்பவன் நிறை வாழ்வை இவ்வுலகிலேயே வாழ்வான்.

- அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
  பண்பும் பயனும் அது. (அதி.5 பாடல் 45 )

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாயின் அவ்விரண்டுமே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக அமையும். அதாவது இல்வாழ்க்கையின் பண்பு அன்பு. அந்த அன்பு இருந்தால் அதன் பயனாக அறம் அமையும்.

# அக்கா பரீட்சை...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

பள்ளிக்கு வாறது போல இடுப்பில் சேலையும் மேற்சட்டையும். கமலக்கா சட்டை. லங்காச்சீலை உடுக்காது தியாகபூமிச் சேலையோ எதுவோ அழகான கோடு போட்டதும் பூப்போட்டதுமான சேலைகள். எல்லாரும் இயன்றளவு இரவல் எடுத்து நகைகள் சார்த்திக் கொண்டும் வந்தார்கள்.



என் தந்தையின் காரில் போகலாமாம். எங்கள் கிராமத்திலிருந்து நகரத்துக்கு குமர்ப்பிள்ளைகள் போகப்போகிறார்கள். ஏற்கெனவே இருபெற்றோர் வந்து தங்கள் பெண்களை கூட்டிப் போகும்படி ஒழுங்கு செய்திருந்தார்கள். பெண்கள் முன் சீற்றில் இருப்பதில்லை. கார் கதவைத் திறந்ததும் நான் ஓடிப்போய் முன்சீற்றில் இருந்து விட்டேன். என்னை இறங்கும்படி வற்புறுத்த, அக்கா மன்றாடினாள் நான் தனக்கு அதிர்ஷ்டமாம். நான் ஏகசோட்டுக்கு புத்தகத்தை விரித்துக் கொடுத்தால் அந்தப் பக்கத்துக்கு கேள்விகள் தான் வாறதாம். 'சரி வெளிக்கிட்டுக்கொண்டு வாமோளே' - அப்பு. கால்முட்டப் பாவாடை சட்டை போட்டு ஒட்டியாணமும் கட்டி இரட்டைப் பின்னலுக்கும் நீளமான குஞ்சமும் முடிந்து நானும் சவாரி. பெண்களுக்குக் காவலாக பெரியம் மாவின் அம்மா பெரியாச்சியும் வாறா.

சொர்ணக்கா ஓடிவந்து 'சட்டைபோடாமல் தாவணி போடுற நீ மட்டும் என்னோடை வரப்படாது' என்று ஏசுறா. முன்பின் சகுனம் பார்த்து, 'பின்னால் கூப்பிடப்பட்டாது' என எச்சரிக்கைவிட்டு கார் புறப்படவும், சொர்ணக்கா அப்பு பக்கமாக ஓடிவந்துக 'சித்தப்பா, என்னுடைய சோதனைக்கும் நீங்கள் தான் காரிலே கூட்டிப் போகவேணும்' என்று சொல்ல 'இவள் மூளி அலங்காரி காரை எடுக்க விடாமல் தடங்கல் போடுகிறாள்.' என பெரியாச்சி முகத்தைச் சுளிக்க 'பொறாமை, பொறாமை' என பெரியம்மா கத்த கார் புறப்பட்டது.

இரண்டாம் நாள் நான் வெளியே எழும்பி வரும்போது அக்கா அழுமூச்சியோடு கரிக்கோட்டு திண்ணையில் இருக்கிறா. முத்தத்தில் மகாநாடு நடக்கிறது. மூன்று நாள்வரை குளிக்கக்கூடாதாம் அடுத்த வருடம் சோதனை எடுக்கலாமாம். அக்காவுக்குப் பெரிய ஏமாற்றம் 'குஞ்சியாச்சி நான் என்ன செய்ய?' என்று அழுகிறா.

அப்பு வந்தார். விடயத்தை அறிந்தார். 'என்ன, குஞ்சு குருமானெல்லாம் ஆலோசனை வழங்குகினமோ. எல்லாரும் ஓடுங்கோ வீட்டுக்கு. சொர்ணம் நீயுந்தான்.

எல்லாருக்கும் பயம் ஓடுகிறார்கள். 'பிள்ளை இவளைக்கொண்டுபோய் தோய வார்த்துப் போட்டு உடுப்பைச் சரியாய் போட்டுவிடு.

உள்ளுக்கை ஒரு சித்தாடை கட்டி வெளியே கவுணை போட்டுவிட்டதாம். இடுப்புக்குக் கீழே பெரிய மொத்தமான ஆளாகக் காணப்பட்டா. பரீட்சைக்கு வந்தவர்கள் அநேகம்பேர் அட்டியல், சங்கிலி எல்லாம் போட்டு சர்வ அலங்கார பூஜிதைகளாக வந்திருந்தனர். சில கிறிஸ்தவப்பிள்ளைகள் மட்டும் வெள்ளை உடுப்போடு காப்புகள் போட்டிருந்தனர். வேறு மூவர் பொன்னம்மாக்காவை மாதிரி இடுப்பிலை சேலை கட்டி மேலே சட்டை போட்டிருந்தார்கள். எங்கள் குழுவிலும் பார்க்க கூடிய நகைகளும் போட்டிருந்தார்கள். இன்று அக்காவுக்கு பழைய 6 கல்லுத் தோடொன்றை அம்மா கொடுத்தவ. அன்று பின்னேரம் நாங்கள் வந்து இறங்கியதும் எல்லோருக்கும் குளியல் கார் கழுவப்பட்டு மஞ்சள் நீர் தெளித்து சாம்பிராணிப் புகை காட்டப்பட்டது.

இத்தனை ஆரவாரங்களோடு பரீட்சை எழுதிய அக்காவும், தோழிகளும் மறுமொழி வரும்வரை பாடசாலைக்கு வருவார்கள். ஆசிரியர் வராத வகுப்புகளை எடுப்பார்கள். இலக்கண பாடத்தின் போது மட்டும் 9ஆம் வகுப்பில் பின்வாங்கில் இருந்து கவனிப்பார்கள். ஒருவரைத்தவிர மற்றைய எல்லாரும் சித்தியடைந்து விட்டார்கள். முதல் வாத்தியார் ஒரு தேநீர் விருந்து வைத்தார். ஆட்களின் முன்னால் சாப்பிட வெட்கப்பட்டு வடையையும் மோதகத்தை யும் அவித்த மரவள்ளித் துண்டங்களையும் தங்கள் மூடல் பெட்டிக்குள் போட்டுக் கொண்டு போனார்கள். இவர்கள் ஒருவரும் ஆசிரியர் பயிற்சிக்கும் போகவில்லை. பரீட்சையில் சித்தியடையாதவர் மட்டும் இரண்டாம் தடவை சித்தியடைந்து வீட்டின் வறிய நிலையைப் போக்குவதற்காக ஆசிரியப்பயிற்சி பெற்று ஆசிரியராக தாவணி போட்டு அந்தப் பாடசாலைக்கே வந்தார். சாப்பாட்டுக்கா வழியில்லை. உத்தியோகம் தேவையில்லை என்ற ஆணாதிக்கச் சிந்தனையாளர் மத்தியில் கமலக்கா விவாகம் செய்த பின் தாயையும் வெல்ல பத்துக் குழந்தைகளைப் பெற்றெடுத்து அரசமொழி கற்காத காரணத்தால் சிறுசிறு தொழில்களுக்கு ஏற்றபடி பத்தும் பத்தாமலும் தேவைகளை ஒடுக்கி வழக்கமான மலர்ந்த முகத்தோடு வாழ்கிறார்.

சொர்ணக்காவோ யாருடைய அதட்டலுக்கும் அறிவுரைக்கும் செவிசாயாது, தனி ஒருவனுக்காக வாழவோ அவனரை சொல்லுக்கடங்கி நிற்கவோ முடியாது. எனது சகோதரங்கள் பெறாமக்கள் ஏழ்மையில் உழன்று நல்ல கல்வி பெறாமல் தத்தளிக்க நான் மட்டும் அந்தக் குழுவுக்கு இன்னமும் நாலுபேரைச் சேர்க்கமுடியாது. இளைய சகோதரர்களையும் பெறாமக்களை யும் உயர்கல்வி படிக்க உதவி செய்தா. வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைத்தா. 12 பேர் சொர்ணக்கா பெயரால் கல்வி பெற, அவர்களும் தங்கள் பிள்ளைகளுக்கும் சொல்லி வளர்க்கவும் கூட்டிவந்து காட்டவும் செய்தனர்.

வெவ்வேறு நாடுகளிலிருந்தாலும் பெற்றோரைக் கூடக் கவனிக்காது பெயர் வைப்பினும் கூட இவவிடமே கேட்பார்கள். அவவுமோ அந்தந்த நாடுகளின் அறிவுகளைப் பெறவும் நவீன பெயர்களைகச் சூட்டவும் தன்னறிவையும் பெருக்கிக் கொண்டார். போன், செல்போன் போன்ற அன்பளிப்புகளும் வரும். ஒரு பேரன் ஒருமாத லீவில் வந்து கொம்பியூட்டரை கொடுத்து அதை இயக்கும் முறைகளைக் கற்றுக் கொடுத்தான்.

சொர்ணக்கா தளராத இளமை பொருந்திய உடற்கட்டு, புதியன தேடவும் கற்கவுமான பிரயாசம். அவற்றை எப்படி சமூகத்துக்குப் பயன்படுத்தலாம் எனும் சிந்தனை. தனக்கு வரும் அன்பளிப்புகளை ஊரில் நன்றாகப் படிப்பவர்களுக்கு கொடுத்தல் அவர் தொழில். அவரது 90வது பிறந்தநாளை விமரிசையாக கொண்டா வேண்டும் என வெளிநாடுகளிலிருந்து வந்து ஆயத்தம் செய்கிறார்கள். அவவுக்குத் தெரியாமலே நாடு தழுவிய விழாவாக அமைய வேண்டுமென ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

## ஈழத்தாய் புனிதத்தாய்
## எங்கள் தலைவனின் இணையற்ற தாய்



மழைத்துளி எல்லாம் மண்ணைத் தழுவிட
மழைத்துளி ஒன்று சிப்பியில் புகுந்தது
முளைத்தது அங்கொரு நல்மணி முத்து.
தழைத்திடத் தமிழர்நாம் தமிழ் ஈழம்தனிலே

முத்தை ஈன்றதால் சிப்பிக்குப் பெருமைதான்
அத்தன் அவனியிலே அவதரிக்கச் சான்றோனாம்
சித்தன் திருவேங்கடம் திருவேலுப் பிள்ளையுடன்
ஒத்திருந்து உறவாடி ஒப்புயர்வாய் வாழ்ந்திட்டார்.

பாரினிலே பிறந்தவர்கள் பறக்கின்றார் சுகத்திற்காய்
நீரிருவர் வாழ்ந்திட்டீர் நீர்வாழ்ந்த மண்ணுக்காய்
நேர்மையுடன் நீதியையும் உம்மூச்சாய் கொண்டிருந்தீர்
போரினிலே புறம்காட்டா புனிதனவன் உம்தவமே.

வேங்கைபிர பாகரனைப் பெற்றெடுத்த வீரத்தாய்
தாங்கியவுன் உதரத்தை தவக்கோயில் எனக்கொள்வோம்
பாங்கான பதிவிரதை பூம்பாவை போற்றுகின்றோம்
நீங்காது அம்மாவுன் நினைவுகள் எம்மிதயத்தில்

தலைவன் தன்னையே தமிழருக்காய் அர்ப்பணிக்க
தலைவனோடு நீங்களும் தமிழரோடு சங்கமித்தீர்.
பொல்லாத இடரெல்லாம் பூமியிலே அனுபவித்தீர்
சொல்வதற்கு முடியாது நீர்பட்ட துயரங்கள்

குடியரசு இல்லையில்லை கொடியரசு சிங்களவன்
முடியரசு தமிழரது உயிர்குடிக்கும் பேய்அரசு.
துடிதுடிக்க வதைத்தனரே நீங்கள் செய்த குற்றமென்ன?.
இடித்துரைக்க யாருமில்லை பூமியிலே தர்மமெங்கே

தொப்புள்கொடி உறவென்று தமிழ்நாடு சென்றாலும்
தப்பான தலைவனவன் தமிழருக்கோ கருநாகம்.
ஒப்பவில்லை உனைஏற்க உதைத்துவிட்டான் வஞ்சகனே
காப்பதற்குப் பூமியிலே யாரிடம்நாம் செல்வதம்மா.

தள்ளாத வயதினிலும் சண்டாளர் பழிவாங்க
முள்கம்பி முகாமினிலே முடக்கியதும் போதாமல்
பொல்லாத சிறையினிலே தனியாக அடைத்தனரே
கல்லான இதயம்தான் மருத்துவமும் மறுத்தனரே

சூரியனை மேகங்கள் மறைத்திடலாம் சிலநேரம்
பேரருளான் திருவருளும் ஒருசமயம் குறைவதுண்டு.
தருமத்தாய் நீயம்மா சத்தியம் உரைக்கின்றோம்.
பாரினிலே தமிழர்நாம் தமிழீழம் பெறல் உறுதி

ஆதவன்தான் தமிழர்தம் இதயத்தில் கோயில்கொண்டான்
மாதவத்தால் ஈன்றெடுத்த தாயேஉன் தாள் பணிந்தோம்
தேவனவன் திருத்தாளில் நிலைபெறுவாய் நிட்சயமே.
மாதேவி மாநிலத்தில் புகழோடு நிலைபெறுவாய்.

தேசனே தேனார் அமுதே பரம்பொருளே
பாசமாய் நாமெல்லாம் நாடுகின்றோம் நின்னருளை
மாசிலா மாணிக்கமாம் பார்வதியுன் பாதத்தில்
ஈசனே இறைவனே எம்பிரானே ஏற்றிடுவாய்

வின் மகான்
தலைவர்--கனடாத் தமிழர் இணையம்.

# ஆபிரிக்க சினிமா

ஆபிரிக்க சினிமா என்றவுடன் ஹொலிவூட் படங்களே நினைவுக்கு வரும். ஆபிரிக்கா என்றால் லத்தீனில் சூரிய வெளிச்சம் மிகுந்த பிரதேசம் என்ற பொருள் படும். ஹொலிவூட் இதனை ஒரு இருண்ட கண்டமாக்கிவிட்டது. ஹொலிவூட் ஆபிரிக்காவைப்பற்றி எடுத்த படங்களே ஆபிரிக்க படங்கள் என்றாகி விட்டது. இந்திய படங்கள் என்றால் ஹிந்திப் படங்கள் என உலகம் நினைப்பதைப் போல் ஆபிரிக்க படங்களின் நிலையும் அமைந்து விட்டது.

ஆபிரிக்கா என்ற கண்டத்தில் சுமார் 52 நாடுகளும், 240க்கு மேற்பட்ட மொழிகளும் உள்ளன. இந்தக் கண்டத்தின் மீது பல ஐரோப்பிய நாடுகள் தாக்குதலை மேற்கொண்டு கைப்பற்றியுள்ளன. இந்த வெற்றி வீரர்களில் முக்கியமானவர்கள் பிரான்சும், இங்கிலாந்தும் முன்னிலை வகிக்கின்றன. ஆபிரிக்காவின் சுயாதீன மொழிகளை விட பிரென்சும், ஆங்கிலமும் ஆதிக்கம் பெற்ற மொழிகளாக அப்பிரதேசத்தில் உள்ளன. பல மத்திய மேல் தட்டு வர்க்கத்தினர் இம் மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஆபிரிக்காவில் 15 வீதமான மக்கள் சுயாதீன மதத்தை பின்பற்றுகின்றனர். மிகுதி 85 வீதமானோர் கிறிஸ்தவம், அல்லது முஸ்லீம் மதத்தை அல்லது யூத மதத்தை பின்பற்றுகின்றனர்.

வட ஆபிரிக்க நாடுகள் அரேபிய நாடுகள் என்றும் கூறப்படுகின்றன. உதாரணம் எகிப்து. ரியுனிசியா, சூடான், அல்ஜீரியா, மொரொக்கோ போன்றவை. இந்த நாடுகள் முஸ்லீம் கலாச்சாரத்தை பின்பற்றுகின்றன.



ஆபிரிக்க சினிமா மேற்கூறிய காரணங்களால் பல பிரிவுகளில் அடங்கும். இவற்றில் முஸ்லீம் மதத்தை பின்பற்றுபவர்கள் அதிகமாக உள்ள நாடுகளில் இருந்து வெளியாகும் படங்கள் அரேபிய சினிமா விற்குள் அடங்கும். தென் ஆபிரிக்க சினிமா தங்களுக்கென தனித்துவத்தை பேணுகின்றன. மேற்கு ஆபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா என்பனவும் தனித்தன்மை கொண்டவை. இவற்றைவிட சுயாதீன மொழிகளில் வெளியாகின படங்களும் உள்ளன. பெரும்பாலான படங்கள் அரேபிய, பிரென்ச், ஆங்கில மொழிகளில் வெளியாகின்றன. உலகின் அனைத்துப் பிரச்சினைகளும் ஆபிரிக்காவில் நடைபெறுகின்றன. எயிட்ஸ், மிக மோசமான வறுமை, இனப் படுகொலைகள், சர்வாதிகாரம், ஊழல், லஞ்சம் போன்ற அனைத்தும் இங்குள்ளன. இவற்றை ஆபிரிக்க படங்கள் வெளிப்படுத்துகின்றனவா? என்றால் ஆம்

| Country | Population | Films | First Feature Film |
|---|---|---|---|
| | MILLIONS | | |
| BENIN | 6.00 | 9 | 1974 |
| BURKINA FASO | 10.60 | 40 | 1971 |
| CAMERON | 14.30 | 31 | 1975 |
| CENTRAL AFRICAN REP | 3.50 | 1 | 2003 |
| CHAD | 7.50 | 3 | 1999 |
| CONGO | 2.80 | 5 | 1973 |
| GABON | 1.30 | 9 | 1971 |
| GUINEA | 7.10 | 14 | 1966 |
| IVORY COAST | 14.50 | 26 | 1969 |
| MALI | 10.90 | 25 | 1975 |
| MAURITANIA | 2.50 | 9 | 1971 |
| NIGER | 10.40 | 12 | 1972 |
| SENEGAL | 9.20 | 47 | 1964 |
| TOGO | 4.50 | 1 | 1992 |
| ALGERIA | 27.00 | 125 | 1965 |
| MOROCCO | 26.00 | 149 | 1968 |
| TUNISIA | 8.50 | 82 | 1966 |

என்பதே பதில். இந்தியாவிலும் அனைத்து பிரச்சினைகள் இருந்தும் காதலைத் தவிர வேறெதுவிலும் இந்தியர்களின் கவனம் செல்வதில்லை. இவற்றை விட ஹொலிவூட் ஆபிரிக்காவைப் பற்றி எடுத்த படங்களும் உள்ளன. இவை ஆபிரிக்க சினிமா என்ற பதத்தில் அடங்காவிட்டாலும், ஆபிரிக்காவைப் பற்றிய படங்களுள் அடங்கும்.

ஆபிரிக்க படங்களை மேலும் பல பிரிவுகளாக பிரிக்கலாம்.

சுதந்திரப் போராட்ட படங்கள்
ஆபிரிக்க அடிமைகள் பற்றிய படங்கள்
இன அழிப்பு படங்கள்
நிறக் கொடுமைப் படங்கள்
ஆபிரிக்காவில் தங்கிய அல்லது ஆக்கிரமித்தோர் பற்றிய பதிவுகள்
ஆபிரிக்க பெண்கள், பூர்விக குடிகள் பற்றிய படங்கள் ஆபிரிக்க ஐரோப்பா

ஆபிரிக்காவில் வருடந்தோறும் எத்தனை படங்கள் எடுக்கப்படுகின்றன. இதனை இந்தியா மற்றும் ஹொலிவூட்டுடன் ஒப்பிடுவது நல்லது. இந்தியாவில் 1000 படங்கள் வருடந்தோறும் எடுக்கப்படுகின்றன. ஹொலிவூட் 500 படங்கள். 2006ன் அட்டவணைப்படி ஆபிரிக்க நாடுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. பல ஆபிரிக்க நாடுகளில் எடுக்கப்படும் படங்கள் மிகக் குறைவே.

முதலில் மேற்குலக நாடுகள் ஆபிரிக்காவை எப்படி வெளிப்படுத்துகின்றன என்று பார்ப்போம். இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டிய ஒரு கருத்து "முஸ்லீம்கள் அல்லது அரேபியர்களை மிகவும் மோசமானவர்களாக பல ஹொலிவூட் படங்கள் காட்டியுள்ளன" இதனை விரிவாக வேறொரு கட்டுரையில் பார்க்கலாம்.

## வானரன்

## The Last King of Scotland

இது உகண்டாவின் சர்வாதிகாரி இடி அமீன் பற்றிய கதை. 1970களில் வைத்தியப் படிப்பை முடித்த பின்னர் தனது கிராமத்தில் வேலை செய்ய தயங்கிய வைத்தியர் Nicholas Garrigan உகண்டாவில் வேலை செய்ய செல்கின்றார். அங்கு ஒரு சிறு கார் விபத்தில் உகண்டா அதிபர் இடி அமீனின் காயத்துக்கு மருந்து இடுகின்றார். இதன் பின் இவர்களுக்கிடையில் நட்பு ஏற்படுகின்றது. இந்த நட்பின் வளர்ச்சியில் இடி அமீன் வைத்தியரை தனது பிரத்தியேக வைத்தியராக நியமிக்கின்றார். இதன் பின்னர் நாட்டின் மருத்துவ துறையை அபிவிருத்தி

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

Best Building in Scarborough!
Clean, family building, FREE parking.
Close to schools, bus stop, Tamil store in building.

Pl. Call: 416.264.2818

# ஈழத்து அம்மா செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி

**மார்ச் 08 ஆம் திகதி உலக மகளிர் தினத்தை முன்னிட்டும் 07.01.1925 ஆம் திகதி பிறந்த தெய்வீக நங்கை சிவத்தமிழ் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாகவும் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

**- அ. சிவானந்தன் -**



தெய்வபக்தி, குருபக்தி, அடியார்பக்தி, அடக்கம், எளிமை, அன்பு, தங்கமனசு, வாய்மை, தெளிவு, நடுநிலைமை ஆகியவற்றை தம் உயிரிலும் மேலாக நேசித்து ஒழுகிய உத்தமிநங்கை அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இறைவன், அவன் அருளால் அவன் தாள் வணங்கும் அரிய பாக்கியத்தை செல்வியின் தாய்வயிற்றில் அளித்த செயலை அன்னாரின் வாழ்நாள் பணியினால் நன்கு உணரமுடிகின்றது. மனிதப்பிறவியில் இப்பெருபாக்கியத்தைப் பெறுவோர் மிகச்சிலரே. இறைவன் திருவடியை தஞ்சம் புகுந்த பெற்றோருக்கு பிறந்த மகள் செல்வி தங்கம்மா அவர்கள். மல்லாகம் கந்தர் அப்பாக்குட்டி, தையற்பிள்ளை தம்பதியருக்கு புகழ்மிக்க மகளாக 07.01.1925 ஆம் திகதி மார்கழிப் பூரணை ஆருத்திரா தரிசனத்தன்று பிறந்தமை நினைவு கொள்ளத்தக்கது. நங்கை தமது ஆரம்பக்கல்வியை மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கற்றதோடு, தொடர்ந்தும் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம், அளவெட்டி சதானந்த வித்தியாலயம் ஆகியவற்றில் மாணவியாக விளங்கி வித்தியால ஆசிரியர்களால் 'மகா கெட்டிக்காரி' என்று பாராட்டு பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் பேச்சு, நடிப்பு, பாவோதல், பண்ணிசை என்பவற்றிலும் மேன்மை நிலையைப் பெற்று விளங்கினார். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் நடத்திய பாலபண்டிதர், பண்டிதர் ஆகிய பரீட்சையிலும் முதன்மையாகச் சித்திபெற்று சங்கத்தின் பாராட்டையும் பதக்கத்தையும் பெற்றமை நினைவு கொள்ளத்தக்கது. அம்மையார் ஈழத்துப் பிரபந்தங்கள் பற்றி எழுதிய ஆய்வுக்கட்டுரை சங்கத்தின் மதிப்பினைப் பெற்றுள்ளது. இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் ஆசிரியப் பயிற்சியை நிறைவு செய்து தெல்லிப்பழை சைவபிரகாச வித்தியாசாலை, மட்டக்களப்பு, பாத்திமா பெண்கள் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியப்பணியை தெய்வீகப்பணியாகச் செய்து நற்புகழ் பெற்றுத்திகழ்ந்தார்.மட்டக்களப்பு, கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்திலும் கொழும்பு விவேகானந்தசபை நடத்திய சமயவகுப்புகளிலும் பங்குகொண்டு மாணவர்களுக்கு சமய அறிவினை தெளிவாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இதனைவிட தமிழ்ச்சங்கம், பாடசாலைக் கலைவிழா, சமயநிகழ்ச்சிகள், சைவ ஆலயங்கள் ஆகியவற்றில் சமயச் சொற்பொழிப்பினை திறம்பட ஆற்றி தமிழ்மக்கள் மத்தியில் நன்மதிப்பினைப் பெற்று திகழ்ந்தார். அம்மையாருக்கு இறைவன் அளித்த குரல்வளத்தால் ஆற்றிய சொற்பொழிவுகள் யாவும் மக்கள் உள்ளத்தை ஈர்த்து நின்றது என்பது உண்மை. கடவுள் உண்டு என்ற கொள்கையை சைவசமய மக்கள் உள்ளத்தில் நிலைபெறச் செய்த பெருமை அம்மையாரின் சமயச் சொற்பொழிவில் சுடர்விட்டுப் பிரகாசித்தது என்பது திண்ணம். மேலும் ஏமஞ்சாமம் பாராமல் சமயப் பணியை சிறப்பாகச் செய்தமையால் ஈழத்துத் தமிழ்மக்கள் அம்மையாரின் நற்பணியை உள்ளத்தால் போற்றி உவகை பெற்றுள்ளார்கள். 1949 ஆண்டு தொடங்கி 1958 ஆம் ஆண்டு வரையும் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையில் கடமைபுரிந்த காலத்தில் கொழும்பில் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் மிக்கபயனை தமிழ்மக்களுக்கு அளித்து என்பது உண்மை. **'தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்க்கை வளம்'** என்னும் நூலில் அம்மையாரின் பேச்சாற்றலைப் பற்றி வியந்து பாராட்டப்பெற்றுள்ளது.

தமிழ் அறிந்தோர் அனைவராலும் 'ஈழத்து தெய்வீக அம்மா' என்று சிறப்பிக்கப்பட்ட பெருமை சிவத்தமிழ் செல்விக்குரிய தனிச்சிறப்பாகும். ஈழத்தில் தங்கத் தாத்தா எனப் போற்றப்படுபவர் மானிப்பாய் நாவலியூர் கதிர்காமர் சோமசுந்தரப்புலவர் அவர்கள். ஈழத்து முத்தமிழ் வித்தகர் என்று போற்றப்படுவர் மட்டக்களப்பு காரைதீவு சாமித்தம்பி விபுலாநந்த அடிகளார் அவர்கள். ஈழத்து 'அம்மா' என்று போற்றப்படுபவர் தெல்லிப்பழை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் மறைமலையடிகளின் வழியில் செந்தமிழ்மொழியை பரப்பிய செயல் அம்மையாருக்குரியதாகும். பேசுவது போல எழுதவேண்டும், எழுதுவது போல் பேசவேண்டும் என்று கொள்கையை தனது சொற்பொழிவில் திறம்படக் காட்டிய செயலும் பாராட்டத்தக்கது. தமிழ் அறிவில் புலமை கொண்டவர்களும் ஆங்கில மொழியில் பேசுவதைச் செழுமையாகக் கொண்ட காலப்பகுதியில் மேடைகள் தோறும் பள்ளிகள்தோறும் ஆலயங்கள் தோறும் தூயதமிழில் பேசி செந்தமிழின் பெருமையை ஒல்கு புகழ் செய்த அம்மையாரின் நற்பணி என்றும் அழியாப்புகழைப் பெற்றுள்ளது. பழங்காலப் புலவர்கள் கையாண்ட செந்தமிழ்ச்சொற் களை எளியமுறையில் எல்லோருக்கும் பயன்பெறச்செய்த அயராத முயற்சி தமிழ்மக்கள் உள்ளத்தை ஈர்த்து நின்றது என்பது உண்மை. அம்மையார் தனது தலையங்கத்திற்குரிய சொற்பொழிவினை ஆற்றும்பொழுது தமது கருத்தை ஆதார பூர்வமாக எளியமுறையில் தெளிவுபடுத்திக் காட்டிய மேற்கோள்கள், உவமைகள், பக்திப்பாடல்கள் எண்ணில. இது அம்மையாரின் இலக்கிய புலமை அறிவையும் பரந்த சமய அறிவையும் எடுத்துக்காட்டியுள்ளது. அம்மையார் நற்றாள் தொழுது கல்வியை கசடறக் கற்ற புலமையை நன்கு தெளிவதற்கு வழிவகுத்துள்ளது. சிறுசிறு வாக்கியங்களால் தம்கருத்தை தெளிவிக்கும் முறை அம்மையாருக்குரிய தனிச்சிறப்பாகும். கற்றோரும் கல்லாதவர்களும் விளங்கக் கூடியமுறையில் சொற்பொழிவை ஆற்றி கேட்போர் உள்ளத்தை தன்பால் ஈர்த்த தன்மையினால் அம்மையாரின் ஆழ்ந்து பரந்த தமிழ் புலமையை அறியமுடிகின்றது. செல்வி 'அதிசய தெய்வீகப் பெண்மணி' என்ற சிறப்பினையும் பெற்றுத்திகழ்ந்த மையை காணலாம். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் இறைவனை வணங்க வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளை தமிழ் மக்களின் உள்ளத்தில் ஆழமாக பதித்த பெருமை அம்மையாரைச்சாரும்.

அம்மையாரின் சைவப்பணி நாவலரின் நற்பணிக்கு ஊன்று கோலாக அமைந்து உள்ளது எனலாம். பிறவியின் பயன் 'அரன்பணி' என்ற உன்னதமான கருத்தினை தமது ஒவ்வொரு சொற்பொழிவிலும் வலியுறுத்திய சிறப்பு அவன் அருள் தூண்டுதலாகும். சமயவிரதநாட்களில் அம்மையார் ஒருவேளை சாப்பிடுவதை பழக்கமாகக் கொண்டமையால் உடல் ஆரோக்கியமும் நோயும் இன்றி நீண்டநாள் வாழ வழிவகுத்துள்ளது. இச்செயல் அம்மையாரின் தெய்வீகப்பணிக்கு பெரிதும் துணைபுரிந்தது என்பது உண்மை. அம்மையார் மக்களின் துன்பத்தைத் துடைக்க விரும்பி தன் கண்பார்வையாளும், நல்லாசியாளும் மகிழ்ச்சி அளித்த செயல் இறைவனின் திருவருள் செயலாகும். திருவள்ளுவர் நல்கிய

'அற்றால் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றான் நெருடிதுய்க்கும் ஆறு'

என்னும் குறளை பேணிக்காத்து ஒழுகியமையால் அம்மையாரின் சமயப்பணி எங்கும் பரவுவதற்கும் துர்க்கா ஆலயம் அமைப்பதற்கும் வழிவகுத்தது எனலாம். காலத்திற்கு ஏற்ற நற்பணிகளை அம்மையார் ஓய்வு இன்றி இரவுபகலாகச் செய்த தன்மை தமிழ்மக்கள் மத்தியில் நற்பெயரைப் பெறுவதற்கு வழி வகுத்துள்ளது. தெய்வப்பணியோடு அம்மையார் செய்த சமூகப்பணி, ஆச்சிரமப் பணி, பொதுப்பணி, வைத்தியப்பணி, கல்விப்பணி, அனாதைப்பணி ஆகியன மிகச்சிறப்பிற்குரியன. இனக்கலவரத்தின் போது ஆலயத்தை நாடி வந்த அனைவருக்கும் அன்போடு ஆதரவு அளித்து பேணிய செயல் அம்மையாரின் பரந்த உள்ளத்தையும், தெய்வீகப்பக்தியை யும் எடுத்துக்காட்டுகின்றது. 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற திருநாவுக்கரசு சுவாமிகளின் வாக்குக்கு அமைய தனது இறுதி மூச்சுவரையும் வாழ்ந்த மகிமை அம்மையாருக்கு உண்டு. தெல்லிப்பழை துர்க்காதேவி தன்னை நம்பியோரை கைவிடாது காத்த பெருந்தெய்வமாகும். துர்க்காதேவியின் அருட்பார்வையினால் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி செயற்கரிய சமயப்பணியை மிகச் சிறப்பாக செய்து நிறைவுடைய மங்கையாக வாழ்ந்தமையை நாம் அனுபவவாயிலாக காணக்கூடியதாக இருக்கின்றது. துர்க்கை அம்மா இமைப்பொழுதும் மறவாது தனக்கு உதவி செய்வாள் என்ற திடமான நம்பிக்கை அம்மாவின் உள்ளத்தில் நீங்காத இடத்தினைப் பெற்றுள்ளது எனலாம். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற முன்னோரின் வாக்கில் மிகுந்த நம்பிக்கை கொண்டு திகழ்ந்த நங்கை தெல்லிப்பழை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இறைவன், மேன்மை கொள் சைவசமயம் மேன்மை பெற அளித்த தெய்வீகப்பரிசு செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இவ்வம்மையார் 15.06.2008 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவன் திருவடியை சேரும் வாய்ப்பு அவன் அருளால் கைகூடியுள்ளது. அம்மையார் தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சென்று ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் யாவும் கேட்போர் உள்ளத்தையும் கவர்ந்துள்ளது. அம்மையாரின் வானொலிப்பேச்சு எல்லோருக்கும் ஆறுதலையும் இன்பத்தையும் நல்கியது. நல்லூர் தேர்த்திருவிழா போன்று துர்க்கை அம்மன் தேர்த்திருவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெறுவதை இன்றும் காணலாம்.

செஞ்சொற்செம்மணி, சிவத்தமிழ்ச்செல்வி, சித்தாந்த ஞானாகரம், சைவதரிசனி, திருவாசக் கொண்டல், துர்க்கா துரந்தரி, திருமுறைச்செல்வி, சிவமயச்செல்வி, திருமொழி அரசி, சிவஞான வித்தகர், திருவாகசமணி ஆகிய கௌரவப்பட்டங்கள் அம்மையாரின் சமயப்பணிக்கு கிடைத்த பரிசுகளாகும். சிதம்பரத்தில், அண்ணாமலைப்பல்கலைகழகத்தில் முறையே 'மாணிக்கவாசகரின் ஞான உள்ளம்' 'இளங்கோ போற்றிய பெருமை' என்ற இருவிடயங்கள் கேட்போர் உள்ளத்தில் தேனிலும் இனிதாக விளங்கியது என்பது தெளிவு. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் இவரின் ஆழ்ந்த சமயப்புலமையைப் போற்றியும், ஒப்பற்ற நற்பணியை பாராட்டியும் 'இலக்கிய கலாநிதிப்பட்டத்தை அளித்து கௌரவித்துள்ளது. ஆசிரியைப்பணியை தெய்வீகப்பணியாகச் செய்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தெய்வீக அருளால் கவரப்பட்டு, குடும்ப வாழ்வில் வாழாது சமயப்பணியை தம் உயிரிலும் மேலாக நினைத்து அளப்பரிய சமயப்பணியை திறம்பட செய்த அம்மையார் இன்றும் என்றும் அழியாப்புகழுக்குரிய தெய்வீக நங்கையாவார். இதற்குச் சான்றாக திகழ்வது அம்மையார் அமைத்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம், நால்வர் திருமடம், துர்க்காபுரம் மகளிர் இல்லம், அன்னபூரணி அன்னதானமடம், அந்தணர் வசிப்பிடம், சுன்னாகம் அச்சுக்கூடம், வெளியிட்ட சமயநூல்கள், கல்விநிலையம் என்பனவாகும். சுப்பிரமணியபாரதியாரின் வாக்கினைப் போற்றி நாட்டிற்கும், மக்களுக்கும் ஏற்றமுறையில் சிறப்பான காலப்பணிகளை செய்த தெய்வீக அம்மாவை நாம் தினமும் போற்றி உள்ளத்தால் மதித்து பாராட்டுவதோடு நின்றுவிடாது அம்மையார் காட்டிய பாதையில் நாமும் பணிகளைச் செய்வதில் அவன் அருளை வேண்டுதல் வேண்டும். உலகில் வாழும் மகளிர் வரிசையில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் நிலையான

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 05

சென்ற தடவை பொருட்கள் எவற்றினால் ஆனவை என்பது பற்றிய இருபெரும் ஞானிகளின் கருத்துக்களைத் தெரிந்து கொண்டோம். தொடர்ந்து செல்லுவோம்.

## அரிஸ்ரோற்றில் டிமோக்ஜரசிஸ் மோதல்

பொருட்கள் அணுக்களினால்தான் ஆனவை என டிமோக்கிரசிஸ் தெரிவித்த போதிலும், அரிஸ்ரோற்றில் மரத் துண்டினை எரித்துக் கொடுத்த விளக்கம் போல எதனையும் காட்ட முடியவில்லை. டிமோக்கிரசிஸ் பேரண்ட, எட்டுக்கோளப் பொறியின் ஆளுகைக்குட் பட்டது என்ற அரிஸ்ரோற்றலின் கருத்தைக் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாகப் பேரண்டமானது எல்லைகள் அற்று விரிந்தது, ஒவ்வொரு விண்மீன்களும் ஒவ்வொரு கதிரவனை (சூரியன்) போன்றவை, கதிரவன் புவியினைச் சுற்றவில்லை, புவிதான் கதிரவனைச் சுற்றுகிறது போன்ற கருத்துக்களைத் தெரிவித்தார். இவை யெல்லாம் அரிஸ்ரோற்றிலின் கருத்துகளுக்கு நேரடியாகவே முரணானவையாக இருக்க, அரிஸ்ரோற்றிலுக்கு டிமோக்கிரசின் மேல் கடும் கோபம் ஏற்பட்டது. மேலும் பொருட்களை ஆக்கிக் கொண்டிருக்கும் அணுக்களிடையே பெருவெளிகளும் இருக்கின்றன என்று டிமோக்கிரசிஸ் கூறியதை அரிஸ்ரோற்றினால் கற்பனை செய்தே பார்க்க முடியவில்லை. டிமோக்கிரசிசை பைத்தியக்காரன் என வர்ணித்த அரிஸ்ரோற்றில், டிமோக்கிர சின் புத்தகங்களை தீயிட்டுக் கொளுத்த வேண்டும் எனக் கூறி, அதனையும் செய்தார். ஆனாலும் டிமோக்கிரசிஸ் பெரும் பணக்காரனாக இருந்தபடியால் அவரது புத்தகங்களை முற்றாகவே ஒழிக்க முடியவில்லை.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 84

தனது கருத்துக்கள் மக்களிடமோ அல்லது தத்துவஞானிகளிடமோ எடுபடவில்லை என்பதையிட்டு டிமோக்கிரசிஸ் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. தனது கருத்துக்களை விளங்கிக் கொள்ளக் கூடிய ஞானம் மக்களிடம் இல்லையே என்றுதான் ஆதங்கப்பட்டுக் கொண்டார். யாரைப் பார்த்தாலும் அந்த அர்த்தத்தில் பார்த்துச் சிரத்துக் கொள்வாராம், அதனால் அவரை சிரிக்கும் தத்துவஞானி என்றே அக்காலக் கிரேக்கர்கள் அழைப்பார்களாம்.

இதுதான் அறிவியல் உலகில் ஏற்பட்ட முதலாவது கருதக் கூடிய அளவிலான கருத்து மோதல் எனலாம். இது போன்ற வளமான மோதல்களின் ஊடாகத்தான் பின்னர் அறிவியல் ஆரோக்கியமாக வளர்ந்தது என்பது எமக்கெல்லாம் தெரிந்த விடயம். என்றாலும் இந்நாட்களின் கணிப்பின்படி சுமாராக இரண்டாயிரத்தி நாநூறு ஆண்டு முன்னதாக பொருட்கள் எவற்றினால் ஆனவை என்ற கருத்து மோதலில் அரிஸ்ரோற்றலின் வாதமே ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது அவரது செல்வாக்கின் காரணம் என இன்று பலரும் கூறினாலும், சரி பிழை என்பதற்கும் அப்பால், தனது கூற்றுக்கான விளக்கத்தினை அக்கால அறிவியல் நிலைக்கு ஒத்ததாக




அரிஸ்ரோற்றல் கொடுத்திருந்தார். பொருட்கள் எவற்றினால் ஆனவை என்ற கேள்விக்கான சர்ச்சைதான் குவாண்ரம் பிறந்த கதைக்கான ஆரம்பம். அரிஸ்ரோற்றலின் நான்கு மூலகக் கொள்கை (Four elements theory) ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், டிமோக்கிரசின் அணுக் கொள்கை கூட முற்றாக மறைக்கப் படவில்லை. சில அறிவியலாளர்களின் சிந்தனையில் அணுக் கொள்கை இரகசிய மாக வந்து கொண்டுதான் இருந்தது. ஆனாலும் தொடர்ந்து வந்த இரண்டாயிரத்து இருநூறு ஆண்டு காலப்பகுதிக்கு நான்கு மூலகக் கொள்கையே விஞ்ஞானிகளிடம் செல்வாக்குப் பெற்றிருந்தது.

குவாண்ரம் பிறந்த கதையின் ஆரம்பம் ஏதோ இடையில் இருந்து தொடங்குவது போன்று உங்களுக்கு இருக்கலாம். இதுவரையில் வந்தவையில் இருந்து உங்களுக்குச் சில கேள்விகள் எழுந்துமிருக்கலாம். டிமோக்கிரசிஸ் அணு போன்ற தனது கருத்துக்களை எங்கிருந்து பெற்றிருக்கலாம்? கிரேக்கத்தைத்தான் அறிவியலின் ஆரம்ப இடமெனக் கருதவேண்டுமா? இவற்றிக்கான பதில்களையும் ஓரளவுக்குப் பார்ப்போம். ஆனாலும் இன்றைய அறிவியலானது கிரேக்கர்களின் அறிவியல் நிலையில் இருந்துதான் கட்டப்பட்டது என்பதனால் இன்றைய அறிவியல் உலகின் ஆரம்ப இடம் கிரேக்கமாகவே இருக்கின்றது. அதனால்தான் டிமோக்கிரசையும், அரிஸ்ரோற்றலையும் அவர்களது கருத்து மோதல்களையும் நான் முதலில் தெரிந்து கொண்டேன். இதனைத் தொடர்வதற்கு முன்பதாக, முதலில் டிமோக்கிரசிஸ் எங்கே இருந்து தமது கருத்துக்களைப் பெற்றிருக்கக் கூடும் அல்லது வளர்த்திருக்கக் கூடும் என்பதனையும், அறிவியலில் நம்மவர் களின் அந்நாளின் நிலை பற்றியும் பார்ப்போம்.

அடுத்த தடவை இன்னமும் கொஞ்சம் முற்பட்ட காலத்திற்குப் போவோம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



# எஸ்.பொவுக்கு இயல் விருது



2010ம் ஆண்டுக்கான இயல் விருது தமிழ் இலக்கியத்தின் முக்கியமான முன்னோடியான எஸ்.பொன்னுத்துரை ஆகிய எஸ்.பொவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம் அளிக்கும் இந்த வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது, கேடயமும் 1500 டொலர்கள் மதிப்பும் கொண்டது. சுந்தர ராமசாமி, கே.கணேஷ், வெங்கட் சாமிநாதன், பத்மநாப ஐயர், ஜோர்ஜ் எல் ஹார்ட், தாசீசியஸ், லட்சுமி ஹோம்ஸ்ரோம், அம்பை, ஐராவதம் மகாதேவன், கோவை ஞானி போன்றவர் களைத் தொடர்ந்து விருதுக்குரியவராக இவ்வருடம் தேர்வு செய்யப்பட்டிருக்கும் எஸ்.பொ. அறுபது வருடங்களுக்கு மேலாக தமிழ் இலக்கியத்துக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

1932 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்த எஸ்.பொன்னுத்துரை சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரிப் பட்டதாரி.

இலங்கையிலும் நைஜீரியாவிலும் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இலங்கைப் பாட விதான சபை, திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிலும் சில காலம் கடமை ஆற்றியவர். தன் பதின்ம வயதுகளிலேயே எழுத்துத் துறையில் கால் பதித்த அவர் இன்றுவரை ஓய்வொழிச்சலின்றி எழுதி வருவதுடன் சுவைபடப் பேசும் பேச்சாளர்கூட. அவருடைய முதல் நாவல் "தீ". மற்றவர் எவரும் எழுதத் துணியாத சுயபாலுறவை 1960 இல் சொன்னபோது பண்டிதர்கள், புனிதர்கள் அவரைத் ‘ துடக்கு’ எனச் சொல்லித் தூர விலக்கினார்கள். அவருடைய ‘வீடு’ சிறுகதைத் தொகுதி பல்வேறுபட்ட மொழியாளுமைகளையும் பரிசோதனைச் சிறுகதைகளையும் வெளிக்கொண்டு வந்தது. அவருடைய இரண்டாவது நாவல் ‘சடங்கு’ அக்கால மத்தியதர வர்க்க அரச எழுது வினைஞரின் வாழ்க்கையையும் யாழ்ப்பாணப் பின்னணியையும் அவற்றுக்கேயுரிய மொழி, அங்கதம், வாழ்வியல் கூறுகளுடன் யாழ்ப்பாண பேச்சு வழக்கில் யதார்த்தமாக கையாண்ட சிறிய, ஆனால் சக்தி வாய்ந்த, நாவல் அது.

அவரின் ‘நனவிடை தோய்தல்’ 1940, 50 யாழ்ப்பாண சமூகத்தை அழகாகப் படம் பிடித்த புகைப்படக்கருவி.

இவரது நேர்காணல்கள், கட்டுரைகள் அடங்கிய "இனி ஒரு விதி செய்வோம்" என்ற நூலும் பிரசித்தமானது. சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் என இருபத்தைந்துக்கு மேலான நூல்களை எழுதியுள்ள எஸ்.பொ. சமீபத்தில் வெளியிட்ட "மாயினி" நாவல் பெரும் விவாதத்திற்குள்ளாகியது. இந்திய அமைதி காக்கும் படை ஈழத்தில் நிலைகொண்டிருந்தபோது நடைபெற்ற நிகழ்வுகள் நாவலில் நுட்பமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சுமார் இரண்டாயிரம் பக்கங்களில் "வரலாற்றில் வாழ்தல்" என்ற தமது சுயசரிதை நூலையும் எழுதியுள்ளார். ஓர் ஈழத்து எழுத்தாளரின் வாழ்வையும், சமகால இலக்கிய ஆளுமைகளையும், இலங்கை அரசியலையும் ஒருங்கே கூறுகிறது இந்நூல். "தேடல்தான் புதிய அனுபவங்களையும் புதிய தரிசனங்களையும் புதிய விளக்கங்களையும் புதிய ஆர்வங்களையும் புதிய உற்சாகங்களையும் புதிய ஞானத்தையும் கொண்டுவந்து சேர்க்கிறது" என்று சொல்லும் எஸ்.பொ இன்றும் தமிழ் சேவையில் தமிழுக்கு புதிய பரிணாமத்தையும் புதிய முகத்தையும் தந்துகொண்டிருக்கிறார்.

தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருது வழங்கும் விழா வழக்கம்போல எதிர்வரும் யூன் மாதம் ரொறொன்ரோவில் நடைபெற இருக்கிறது.

# ஈழத்து அம்மா...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

இடத்தினை பெற்றுள்ளார் என்பது உண்மை.

அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம் என்ற நம்பிக்கையும் ‘எங்கும் எதிலும் சக்தியடா’ என்ற பாரதியார் வாக்கிலும் நம்பிக்கை கொண்டால் தேவி மெய்துணையாக நின்று நல்வழியும் முக்தி இன்பமும் தருவாள் என்பது நிச்சயம். இதனை தம்வாழ்வில் திடமான உள்ளத்தோடு போற்றி வாழ்ந்த உத்தமி நங்கை அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள். பண்டைய தமிழ் மன்னர்களின் ஆலயத் தொண்டினைப்போன்று அம்மையாரின் தொண்டும் இம்மண்ணுலகில் நிலைபெற்றமைக்கு அவன் அருளே முதற்காரணமாகும். அத்தகைய இறைஅருளை இப்பிறவியில் பெற்ற உத்தமிநங்கை சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள். இவ்வம்மையாரின் ஆதரவில் இப்பெரும்பணியை செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் சிறப்பாகவும் அன்பாகவும் நிர்வாகப் பொறுப்பை மிக்க கவனத்தோடு நல்முறையில் மேற்கொண்டு வருவதைக் காணலாம். இப்பொறுப்பினை அம்மையார் உள்ளன்போடு அளித்தமையைக் காணலாம்.


Niru
Niru
நிரு
பிராண்ட்
BRAND®
Niru
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE

# கைவிடப்படாத வாழ்க்கைத் துணை

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 185

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214

லலிதா புருடி



நான் ஒருபோதும் தட்டந்தனியாக இருப்பதில்லை என்பதை உணர்ந்ததும் ஒருவித பயமுமின்றி தைரியத்துடன் வாழ்வேன்.

நீ பாடசாலைக்குப் போன முதல் நாள் உனக்கு ஞாபகம் இருக்கிறதா? உனக்குப் பரிச்சயமான சூழலிலிருந்து அறவே தெரியாத மர்மமான புதிய சூழலிற்குள் அன்று காலடி எடுத்து வைக்கிறாய். இதுவரை நீ முழுநம்பிக்கையுடனும் அன்புடனும் நம்பியிருந்தவர் ஏதோ ஒரு பயங்கர பிரம்மாண்டத்தின் வாசலில் உன்னை விட்டுப் போய் விடுகிறார். உனக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. அழுகையை அடக்க முயற்சிக்கி றாய். என்ன செய்வதென்று தெரியாது பயத்தினால் தடுமாறுகிறாய். சிலவேளை அடம்பிடித்து ஆர்ப்பாட்டத்துடன் வீறிட்டுக் கத்தி அழுதும் பார்க்கிறாய். ஆனால் உனது உணர்வுகளை ஒருவரும் மதித்து உன்னைத் திரும்ப வீட்டுக்குக் கூட்டிப் போகவில்லை. உனக்குப் பழகினதும் எல்லாம் சரியாகிவிடும்.

இனி நான் என்ன செய்வதென்று எண்ணித்திகைத்து அழுதுகொண்டு நீ நிற்கையில் அந்த புதியவர் ஒருவர் குனிந்து உன் கையைப் பற்றி ஏதோ ஆறுதல் சொல்கிறார். அந்த நிமிடத்தில் இறைவனின்




குரல் 'பயப்படாதே! உனக்கு நான் இருக்கிறேன்' என உனக்கு ஆறுதல் கூறுகின்றது. பாடசாலையில் முதல் நாளைப் போலவே வாழ்வின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அனுபவமும் அமைகின்றது. ஏன் ஒவ்வொரு கணமுங் கூட 'நான் ஒருபோதும் உன்னைக் கைவிட்டுப் பிரியமாட்டேன்' என்ற இறைவனின் வாக்குறுதியைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கும். நீ குறைகூறிக் குமுறி அழுது வடிந்து கொண்டிருக்கும் உனது பிரலாபத்தைச் சற்று நிறுத்தி செவிமடுத்தாயானால் இறைவனின் அந்த வாக்குறுதி உனக்கும் கேட்கும். இறைவன் அன்புடன் உனது கையைப் பற்றி வாழ்வெனும் பாடசாலைக்கு உன்னை அழைத்துச் செல்வார். அந்தநாள் முடிவடைந்ததும் இங்கு பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்ததும் உனது ஆர்ப்பாட்ட நடவடிக்கை உனக்கு வெட்கமாகவும் இருக்கும். தனது வாக்குறுதிப்படி இறைவன் உன்னை ஒருபோதும் கைவிட்டுத் தனியே தவித்துத் திண்டாட விடவில்லை என்பதும் உனக்கு நன்கு புரியும்.

உனது பாடசாலை முதல் நாள் அனுபவத்தில் நீ அழுது அடம்பிடிக்காது நூற்றுக்குநூறு வீதம் தேறி விட்டாய் என நீ இன்றுவரை நினைத்திருக்கலாம். வாழ்வில் உனக்குப் பரிச்சயமில்லாத சமாச்சாரங் களிற்குள் நீ காலடி வைப்பது பாட-சாலைக்குள் முதல்நாள் நீ காலடி வைப்பதைப் போன்றது தான் என்பதைப் புரிந்துகொள். மேலும் காலத்துக்குக் காலம் அவதரிக்கும் இறைதூத அருளாளர்கள் ஒவ்வொருவரும் ஒன்றையே வலியுறுத்தியி ருக்கின்றனர். 'என்னை நோக்கி நீ ஓரடி எடுத்தால், நான் நூறடி எடுத்து உனக்கு உதவிட ஓடோடி வருவேன்' என உறுதியளிக்கின்றனர்.

**ஒருபோதும் உன்னைக் கைவிடாது எப்போதும் உன்கூடவே இருப்பேன் எனும் இறைவனின் வாக்குறுதியை இன்றுமுதல் நான் எப்போதும் என் மனதில் வைத்து இனிமேல் பயமின்றி வாழப்போகின்றேன்.**



# நினைவுகளைத் தொடரும் கானங்கள்

தனது மரணத்தை நோக்கி பயணப்படும் மனிதனின் கதை "நண்டு". 1981 இல் மகேந்திரன் இயக்கி வெளிவந்த, மிக மெதுவாக நகரும் படம் இது. 1983 கலவரங்களுக்குப் பிறகு நான் இதைப் பார்த்த போது மனதில் பல சலனங்களை இது உருவாக்கியது. ஆனால் படத்தில் வரும் பாடல் ஒன்று சட்டென்று இதயத்தில் பதிந்தது!

பாடகர், நடிகர், இசையமைப்பாளர் என வலம் வந்த "மலேசியா'' வாசுதேவன் மறைந்து விட்டார். ஆனால் அவர் பாடிய இந்தப் பாடல் இன்னும் காற்றினில்.....

அள்ளித் தந்த பூமி அன்னையல்லவா
சொல்லித் தந்த வானம் தந்தையல்லவா
ஆடும் நாள் பாடும் நாள் தாளங்கள் - இனி
ஆனந்தம் ஆரம்பம் வாருங்கள்

சேவை செய்த காற்றே பேசாயோ
ஷேமங்கள் லாபங்கள் யாதோ
பள்ளி சென்ற காலப் பாதைகளே
பாலங்கள் மாடங்கள் ஆஹா
புரண்டு ஓடும் நதிமகள்
இரண்டு கரையும் கவிதைகள்
தனித்த காலம் வளர்த்த இடங்களே
இளமை நினைவை இசைக்கும் தெருக்கள்

காவல் செய்த கோட்டை காணாயோ
கண்களின் சீதனம் தானோ
கள்ளி நின்ற காட்டில் முல்லைகளே
காரணம் மாதனும் தேனோ
விரியும் பூக்கள் பாணங்கள்
விசிறியாகும் நாணல்கள்
மரத்தின் வேரும் மகிழ்ச்சிப் படுக்கையே
பழைய சோகம் இனியும் இல்லை

**- கிறிஸ்ரி-**

(இணையத்தில் பாடல் வரிகள் P.B.ஸ்ரீநிவாஸ் என்று இருந்தது அது பாடகர் P.B.ஸ்ரீனிவாசா என்று பிலிம்நியூஸ் கிரிஷ்ணனைத்தான் கேட்க வேண்டும்!)

ஊருக்குப் போய் வரும் பலரின் பயணத்தின் பின்னணிப் பாடலாக இது இருக்கலாம். இளமை நினைவுகள் பல இனிமை நிறைந்தவை. ஆனால் திரும்ப வராதவை. தாம் குழந்தைகளாக, மகிழ்வாக வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்க வரும் சகோதரனுக்கும் சகோதரிக்கும் நடக்கும் ஒரு உரையாடல்...

"நம்ம சின்ன வயசு நாளை நினைச்சுக்கிட்டு இருந்தேன் சின்னி. எவ்வளவு சுதந்திரமான வாழ்க்கை! கவலைகள் எதுவும் இல்லாம... எல்லாரும் என்னிக்கும் சாசுவதமுன்னு நம்பிக்கிட்டு சந்தோஷமா இருந்த நாட்கள்...!" நான் பெருமூச்சுடன் சொன்னேன்.



"ராஜி.... நீ வாங்க விரும்பியது இந்த வீட்டை இல்லை. இந்த வீட்டில வாழ்ந்த உன் சின்ன வயசு நாட்களைத் தான். புரியுதா? அதை விலை கொடுத்து வாங்கவே முடியாது ராஜி. அந்த நாட்கள் இனி நினைவுகளில் மட்டும் தான்!
("வீடு" - கீதா பென்னெட்)

பிறரின் மரணம் நம்மைப் பயமுறுத்துகிறது. வாழ்வு இன்னும் கொஞ்ச நாள் தான் என்று அது சொல்லிச் செல்கிறது. அதுவும் நாம் அன்பு செலுத்துகிறவர்கள் இறக்கும் போது அது நம்மை உடைத்து விடுகிறது. அண்மையில் ஒரு இழப்புக்கு அனுதாபம் தெரிவிக்கப் போன போது அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு கையேடு, கவனம் கவர்ந்தது. 'How to Live you Dash...., தலைப்பு முதலில் புரியவில்லை! மெதுவாகப் படிக்க ஆரம்பிதேன். Manjot Mander தனது அம்மம்மாவின் இறப்பு, எப்படி தன் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க வைத்தது என்று அற்புதமாக எழுதியிருந்தார்.

*"I have spent considerable time thinking of her, of her life and how deeply her presence had affected me. I had placed the memory card from her funeral near my bed, and the dates on the card. 1916-2006 reminided me how insignificant those numbers were, yet how powerful that small dash(-) between the years can be. That dash represented all the years in my gradma's Life."*



நாங்கள் அந்த 'dash'(-) ஐ எப்படி வாழப் போகிறோம் என்பது தான் அவர் கேள்வி!

ந ா ன .

எண்ணும்பொழுது
ஏதோ சுகம் எங்கோ தினம் செல்லும் மனது

நெஞ்சில் இட்ட கோலமெல்லாம்
அழிவதில்லை
என்றும் அது கலைவதில்லை

எண்ணங்களும் மறைவதில்லை
அந்த நாள் அம்மா என்ன ஆனந்தமே

நான் எண்ணும்பொழுது ....
ஏதோ சுகம் எங்கோ தினம்
என்னை சேர்கின்றது நெஞ்சிலே

ஆற்றிலே ஆற்றங்கரை ஊற்றினிலே
அங்கு வந்த காற்றினிலே...
தென்னை இளங் கீற்றினிலே...
அம்மம்மா அள்ளும் சுகம் கோடி விதம்

கங்கை அமரன் எழுதிய இந்தப் பாடல் (அழியாத கோலங்கள்,S.P.B) மனதை அமைதியாக்கும். தனித்திருந்து கண்மூடி இப்பாடலை கேட்டுப் பாருங்கள்!

இளமைக்கால நினைவுகள் தான் மனிதர்களை வாழவைக்கின்றன போலும்.

சுஜாதா எழுதிய "வீடு" சிறுகதையில் வெளி நாட்டிலிருந்து வரும் பெண் தான் வாழ்ந்த வீட்டைப் போய்ப் பார்க்கிறாள்.

"அம்மா இல்லை, அப்பா இல்லை. அண்ணா எங்கிருக்கிறான்? தெரியவில்லை. ராஜுவும் இல்லை.(4.5.1935-14.9.1956) அவன் சிறு வயதில் சுவரில் எழுதின கிறுக்கலைப் பார்க்க ஆயிரம் மைல்கள் பிரயாணம் செய்து வந்து மொட்டை மாடியில் தனியாகச் சற்று நேரம் நின்று அழுதேன்."

(அப்படி என்ன அங்கே கிறுக்கி இருந்தது என்று நீங்கள் யோசித்தால் அது ஒரு சுஜாதா ஸ்பெஷல்! சின்ன வயசில் நீங்கள் "கிறுக்கியதை" நினைவு படுத்திப் பாருங்கள்.)

ஜன்னலில் தெரியும் நிலவுடனே
சண்டை போட்டது நினைவில்லையா
மரம் செடி கொடியிடம்
மனசுக்குள் இருப்பதை சொல்லியது நினைவில்லையா
எண்பது பக்கம் உள்ள புத்தகம் எங்கும்
கவிதை எழுதிய நினைவில்லையா
எழுதும் கவிதையை எவர் கண்ணும்
காணும் முன்பு கிழித்தது நினைவில்லையா
இரவில் இரவில் கனவில்லையா
கனவும் கனவாய் நினைவில்லையா

ருவாண்டாப் படுகொலைகள் பற்றி வந்த ஒரு படத்தில், தப்பித்து வாழ்ந்து வரும் ஒரு பெண்மணி சொல்வாள்....

"நான் எப்போதோ இறந்திருக்க வேண்டியவள், வாழும் இந்த நாட்கள் எனக்காகக் கிடைத்த கூடுதலான நாட்கள்!"

மரணம் வந்து கொண்டு தான் இருக்கிறது, அதுவரை வாழ்ந்து தான் பார்ப்போமே! ஏனென்றால்..

**"Life is the Most Spectaular Show on Earth!"**

## நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா வாழ்த்துகின்றது...! வரவேற்கின்றது...!!

கொதிக்கும் வெய்யிலிலும், மாரிமழையிலும் நனைந்தும், கடல்காற்றில் கொந்தளிக்கும் அலையின் மத்தியிலும், நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பல்போல் ஒருவகை மரணப்பயத்தோடு செய்கின்ற அவலம் நிறைந்த பயணம்தான் நெடுந்தீவு மக்களின் கடல்கடந்து செல்கின்ற பயணம். மேலும் வதந்தியொன்று வந்தால் போதும் 'காற்றோடு உயிர்கலந்து போனாலும், ஊர்போய்ச்சேருமோ உடலென்று' தினமேங்கி பயணம் செய்யும் மக்களும் அவர்களே! இந்த நெடுந்தீவு மக்களுக்கு முக்கிய தேவையாகவும், நீண்டகால குறையாகவும், கருதப்பட்ட படகுச்சேவையை போக்குவரத்துப்பெருந்தெருக்கள் அமைச்சு புதிய படகொன்றை எட்டுக்கோடி ரூபா செலவில் அமைத்துக் கொடுத்து. 14-02-2011 குறிகட்டுவான் நெடுந்தீவுக்கடலில் வெள்ளோட்டமிட்டதை புலம்பெயர்ந்து வாழுகின்ற நெடுந்தீவுமக்களும், ஈழத்துநெடுந்தீவு, தாயக்கத்து மக்களும் மகிழ்சியடையாமலிருக்க முடியாது.

பலருடைய முயற்சியால் இத்திட்டம் நிறைவேறியுள்ளது. முன்னின்று உழைத்த முன்னாள் அரசாங்க அதிபர் கணேஸ் அவர்களுக்கும், பெரும்தெரு அமைச்சின் வடபகுதி செயலாளருக்கும், மற்றும் வடபகுதி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அயராது உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும். கனடா - நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் சார்பிலும் எனது சார்பாகவும் வாழ்த்தி வரவேற்று நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, மிகவும் பின்தங்கிய தீவுப்பகுதிக்கு நல்ல நல்ல புதியதிட்டங்கள் வகுத்து செயல்பட 'நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா' என்றென்றும் உதவிக்கரம் கொடுக்குமென்பதையும் தெரிவித்துக்கொள்வதில் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம்-கனடா பெருமையடைகின்றது.

நன்றி...
தலைவர்: க.ஐயாத்தரை(துரை)
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா, தொலைபேசி இல. 416-890-5273.

# ஆபிரிக்க...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்யுமாறும் கேட்கின்றார். அதன் பின்னர் இடி அமீன் தனது பல அரச நடவடிக்கைகளுக்கு வைத்தியரிடம் ஆலோசனை கேட்கின்றார். இந்தக் கால கட்டத்தில் இடி அமீன் கும்பலின் பல அடாவடித்தனங்களை வைத்தியர் அறிகின்றார். இடி அமீன் கொடுத்த விளக்கத்துடன் அமைதி காக்கின்றார். இடி அமீன் தனது மூன்றாவது மனைவியை மிக மோசமாக நடத்துகின்றார். இவருக்கு பிறந்த பிள்ளை ஒன்று மருத்துவ உதவியை நாடும் விசேட பிள்ளையாக பிறந்ததே இதற்கு காரணம். வைத்தியர் இடி அமீனின் மனைவி மீது கருணை காட்டுகின்றார். கருணை காதலாகி கருவாக வளர்கின்றது. இடி அமீன் அறிந்தால் கொலை விழும் என அஞ்சும் மனைவி, கருவை அழிக்குமாறு வைத்தியரிடம் கேட்கின்றார். வைத்தியர் தாமதிக்க மனைவி கிராமத்துக்கு சென்று கருவை அழிக்க முற்படும் பொழுது இடி அமீனின் சகாக்களிடம் சிக்கிக் கொள்கின்றார். வைத்தியரின் கடவுச்சீட்டுக்கு பதிலாக உகண்டா கடவுச் சீட்டு ஒன்றை இடி அமீன் வைத்தியருக்கு வழங்கியிருந்தார். வைத்தியர் இதனைக் கொண்டு பிரிட்டிஸ் தூதரகத்துக்குச் சென்று தன்னை வெளிநாட்டிக்கு அனுப்புமாறு கேட்கின்றார். பிரிட்டிஸ் தூதரகம் இடி அமீனை கொன்றால் வைத்தியரை அனுப்பலாம் என்கின்றது. வைத்தியர் இடி அமீனுக்கு நெருக்கமானவர் என்பதால் இது சாத்தியம் என்கின்றது தூதரகம். வைத்தியர் முதலில் மறுத்த பொழுதும் தொடா அட்டூழியங்களை பார்த்து விட்டு, கொல்லுவது ஒன்றே இதற்கான தீர்வு என தீமானிக்கின்றார். தலையிடி மருந்துக்குள் நஞ்சூட்டி கொல்லவுள்ளார் என்பது இடி அமீனின் ஒரு சகாவிற்கு தெரிந்து விடுகின்றது. சிறையில் பல கொடுமைகளை சந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, மற்றொரு வைத்தியரால் இவர் தப்ப வைக்கப்படுகின்றார். இவரை தப்ப வைப்பதற்கு வைத்தியர் கூறும் காரணம். “நீர் ஒரு வெள்ளையர். உகண்டாவில் நடக்கும் கொடுமைகளை நீர் வெளியிட்டால் உலகம் நம்பும்” என்பதே அது. வைத்தியர் தப்பிய சில மணிநேரங்களில் மற்ற வைத்தியர் கொலை செய்யப்படுகின்றார். மிகுதி வைத்தியரின் சுபத்துடன் படம் முடிவடைகின்றது.

இப் படமும் இடி அமீனின் கொடுமைகள் வெளிவரக் காரணம் ஒரு மேற்கத்தியர் என காட்டுகின்றது. மேற்கத்தியர் கூறுவதெல்லாம் உண்மை என்ற கருத்தும் அழுத்தமாக கூறப்படுகின்றது. இப்படத்தில் ஒரு மேற்கத்திய மேலாதிக்கம் மேலோங்கியிருப்பதைக் காணலாம். நாளை எகிப்தின் புரட்சிக்கும் மேற்கத்திய நாடுகள் தான் காரணம் எனப் படங்கள் வெளிவரும். இடி அமீனின் கொடுமைகளை விட மேற்கத்திய மேலாதிக்கமே படமெங்கும் ஒலிக்கின்றது - ஒளிர்கின்றது.

## Cry Freedom



இதே மேற்கத்திய மேலாதிக்கத்துடன் வெளிவந்த படம் Cry Freedom. Steve Biko என்ற புரட்சியாளர் பற்றி தர்க்க ரீதியாக கட்டுரைகள் எழுதிவருகின்றார் டொனால்ட் வூட்ஸ். இருவரும் சந்தித்த பின்னர் டொனால்ட் இன் கருத்துக்களில் மாற்றம் ஏற்படுகின்றது. ஸ்ரீவ் பைக்கோ பின்னர் கொல்லப்படுகின்றார். ஸ்ரீவ் பைக்கோ பற்றிய நூல் ஒன்றை எழுதி வெளியிடுகின்றார் டொனால்ட். இப்பொழுது டொனால்ட் தேடப்படுகின்றார். நாட்டை விட்டு வெளியேறுவதே தப்புவதற்கான வழி என நினைக்கின்றார் டொனால்ட். பல வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த படத்தை இயக்கியிருப்பவர் காந்தி இயக்குனர் அட்டன்பரோ. இப்படமும் மேற்கத்திய மேலாதிக்கத்துக்கு நல்லதொரு உதாரணம். தென் ஆபிரிக்காவில் மிக மோசமான பல நிறக் கொடுமைகள் நடைபெற்றுள்ளன. இதன் தாக்கத்தை படம் வெளிப்படுத்தாமல் டொனால்ட் வூட்ஸ் பாத்திரத்தின் தாக்கமே படத்தில் வெளிப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியை பிறிதொரு இதழில் பார்ப்போம்.

# திரை விமர்சனம்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

பாதிக்கப்படுதல் - சிவப்பு ரோஜாக்கள், மூடுபனி. விரும்பும் பெண்ணைக் கடத்தி வந்து வற்புறுத்துதல் - குணா, காதல் கொண்டேன். பெண்கள் கடத்தி வைக்கப்பட்டிருக்கும் புறச்சூழ்நிலை - செல்லமே, சத்தம் போடாதே. கடத்திய பெண்களைக் கொடூரமாய்க் கொல்லுதல் - வேட்டையாடு விளையாடு, மன்மதன். பன்னாளுமை மனச்சிதைவுக் காட்சிகள் - அந்நியன், சந்திரமுகி. இல்லாதவரை இருப்பதாய்ப் பாவித்தல் - கண்களால் கைது செய், குடைக்குள் மழை. ஆ..!, பாலம், விளிம்பு போன்ற சில புனைவுகளில் இதை முயன்றிருக்கிறார். திரையில் இதற்கு முன் கமல்ஹாசனின் ஆளவந்தான் முக்கியமானதொரு முயற்சி. இப்போது நடுநிசி நாய்கள்.

தமிழின் வேறெந்த படத்திலும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கும் மனப்பிறழ்வுக் காட்சிகளை விடவும் இப்படத்தினுடையவை வலுவானதாகவும், நேர்மையானதாகவும், உண்மைக்கு வெகு அருகில் இருப்பதாகவும் படுகிறது போலவே படத்தில் சில கலாசார மதிப்பீடுகள் கலைக்கப்பட்டிருக்கின்றன.




தவிர, இணையத்தில் பரவலாய் உலவி வரும் இன்னொரு செய்தி இப்படம் ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக் இயக்கிய Psycho (1960) படத்தின் தழுவல் என. ஓரளவிற்கு - ஆம். கதையின் அடிப்படை முடிச்சை அதிலிருந்து தான் எடுத்திருக்கிறார்கள். மற்றபடி இரண்டும் வேறு.

நடுநிசி நாய்கள் படத்தின் முக்கிய விஷயம் இதில் காட்சிகளாகியிருக்கும் மனப்பிறழ்வு. நவீன தமிழிலக்கியத்திலும் கூட நகுலன், கோபிகிருஷ்ணன், சாரு என வெகு சிலருக்கே மனப்பிறழ்வைப் பிரதிபலிப்பது என்பது சாத்தியமாகியிருக்கிறது. சுஜாதா பூரண நிர்வாணக் கோலம் பூண்டிருக்கிறது நிஜம் - குற்ற உணர்ச்சியோ, பாசாங்கோ இல்லாத நனிநெஞ்சம் மட்டுமே உணரக்கூடிய புனிதம் அது.

உண்மையில் சமர் என்ற வீரா என்ற அந்தக் கதாபாத்திரத்தை ஒருவர் முழுமையாக உள்வாங்கிக் கொள்ள நேரான மனமும், கூரான புத்தியும் தேவை. அப்படி விளங்கிக் கொள்ள முடிகிறதெனில் அவரால் இச்சமூகத்திற்கு எந்தத் தீங்கும் இல்லை என்றாகிறது. இல்லையெனில் அவரும் சமர் என்ற வீரா போல் ஒரு சைக்கோ தான். உறங்கும் மிருகம்!

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666


Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296
sktheesan@gmail.com

# ஆடுதுறை...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரமிக்க வைக்கும் அழகு கொண்டது.

ஒருமுறை ஆஞ்சநேயர் விண்வெளியில் சென்று கொண்டிருக்கும் போது இக்கோவிலில் இருந்த கூட்டத்தை வானிலிருந்து பார்த்தாராம். உடனே, ஏன் இந்தக் கூட்டம் என்று இங்கு பார்க்க இறங்கி வந்தாராம். தனது தெய்வம் ஸ்ரீராமருக்கே மக்கள் இங்கு வழிபாடு எடுக்கிறார்கள் என்று அறிந்துகொண்ட ஆஞ்சநேயர், தாமும் மக்களோடு கலந்து ஆனந்தக் கூத்தாடி மூர்ச்சித்துக் கிடந்தாராம். அப்போது ஒளி-மயமாக பெருமாள் ஆஞ்சநேயருக்கு காட்சி தந்தாராம். தன் நினைவாகவே இக்கோவிலின் முன் கூத்தாடும் பாவனையில் ஆஞ்சநேயருக்கு இன்றும் ஒரு சிறிய கோவில் உள்ளதைப் பார்க்கலாம்.

ஐந்து நிலை ராஜகோபுரம் கொண்டது இந்த பெருமாள் கோயில். ஆனால், மிகப் பழங்காலத்துக் கோயில் என்பதாலும், பராமரிப்பு சீராக இல்லாததாலும், சிதைந்து செங்கற்கள் தெரிகின்றன. வாகன மண்டபமும் சிதிலமாகியுள்ளது. சுற்று மதில் முழுவதுமாக அழிந்துள்ளது. பல்வேறு மூர்த்தங்கள் வெட்ட வெளியில் பிராகாரத்தில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

இது தஞ்சை அரண்மனை இலாகாவுக்குச் சொந்தமான கோயிலாகும்.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

கும்பகோணம் - திருவையாறு, சாலையில் சுவாமிமலை, உமையாள்புரம், கபிஸ்தலம் தாண்டி, உள்ளிக்கடை என்னும் ஊரையடுத்து இத்தலம் - ஆடுதுறை உள்ளது. கும்பகோணத்திலிருந்து 20 கி.மீ., திருவையாறிலிருந்து 5 கி.மீ.. கும்பகோணம், திருவையாறு இரண்டு ஊர்களில் இருந்தும் போக்குவரத்து வசதி உள்ளது. ஆடுதுறை சிறிய கிராமம்தான் என்பதால், கும்பகோணம் அல்லது திருவையாறில் உணவு எடுத்துக்கொள்வது நல்லது.













